தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்



நாடற்றுப் போவாய்..!

...ற இந்திப் பிணிப்பைப் பெயர்த்து, இப்
பெருநிலத்துள்,
செந்தமிழ்த் தாயை அரியணை
ஏற்றிலையேல்,
...ற முன்செய் எழுத்தும் நிருக்க
இடமுமற்று,
நாடற்றுப் போவாய் தமிழா, இனுஞ்சில
நாட்களிலே!

ஆவணி. தி. பி. 1995.

ரூ 0 / 50 காசு

8 AUG 1964

தென்மொழி

தனித்தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2. | ஆவணி தி. பி. 1995 (1964 ஆகஃச்டு) | ஓலை 7.

தமிழில் கற்பதை நீக்கியது, இந்தி கற்பதை ஊக்கிடவே!

'கல்வியினூங்கில்லை, சிற்றுயிர்க்கு உற்றதுணை' என்றது பண்டைக் காலத்தில். அக்காலத்தில் அறத்தால் பொருளீட்டி இன்ப வாழ்க்கை நடத்தினர் மக்கள். இக்காலத்தே மறத்தால் பொருள் சேர்த்துத் துன்ப வாழ்க்கையே வாழ்கின்றனர் அறம் என்றால் இக்காலத்தார்க்கு என்னவென்றே தெரியாது. தெரிந்து கொள்ளவேண்டிய தேவையும் இல்லை. அறம் என்றால் 'தர்மம்' என்றே பொருளுரைப்பர். இல்லார்க்கு இடும் ஈகையும் ஒருவகை அறமாகுமே அன்றி, ஈகையே அறமாகாது. தமிழர் தம் 'அறம் வேறு, ஆரியரின் 'தர்மம்' வேறு. கொல்லாமை, பொய் சொல்லாமை முதலியன தமிழர் அறம். தேவையான பொழுது கொல்லுவதும், பொய் சொல்லுவதும் அவற்றினும் கேடான செயல்களைச் செய்வதுங்கூட 'தர்மமே' ஆகும் என்பது ஆரியம் இத்தகைய தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுத் தமிழும், தமிழரும், தமிழ்ப் பண்பாடும் கெட்ட இக்காலத்தே, தமிழர் விரும்பிய உண்மைக் கல்வியை அறிவாரும் அவாவுவாரும் எத்தனைப் பெயர்? நாம் கற்பதெல்லாம் அறியாமையைப் போக்கி, மன மாசுகளை அகற்றுவதற்காகவே அன்று. மட்டற்ற பெரும் பொருளை மடியில் வாரிக் கொட்டிக் கொள்வதற்காகவே நாம் கல்விக் கூடங்களை நாடிப் பறக்கின்றோம்; கல்லூரிகளின் சுற்றுச் சுவர்களில் முட்டி மோதிக் கொள்கின்றோம். நம் மக்கள் மருத்துவராகவும், பொறிவினைஞராகவும், வழக்குரைஞராகவுமே ஆக நாம் விரும்புகின்றோமே அன்றி, கல்வி கற்று

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்-2.

எதுவாயினும் நேர்மையானதொரு வேலையில் அமர்ந்து, நேர்மையான வருவாயைப் பெற்று, நேர்மையான வாழ்க்கை வாழவேண்டும் என்று நம்மில் நூற்றுக்கு ஒருவரும் நினைப்ப தில்லை. நேர்மைக்குப் புறம்பான வழிகளில் தம் மகன் பணம் ஈட்டுவதைப்பற்றி எந்தப் பெற்றோரும் வருத்தப்பட்டுக் கொள்வ தில்லை; மாருக அவன் எப்படியேனும் ஒரு வழியில் விரைவில் பொருளீட்டி, அதனுல் ஒரு மனையோ, நிலமோ, ஊர்தியோ இயங்கியோ வாங்குவதே, அவன் படித்த படிப்புக்கேற்ற பலன், ஊதியம், தகுதி, பெருமை என்றெல்லாம் கணக்குப் போடுகின்றனரேமே தவிர, அறநெறி பிறழ்ந்த அல்வழிகளில் பொருளை ஈட்டுகின்ற மகனையோ மகளையோ வெறுத்துப் புறம் போகும் 'பேதை'ப் பெற்றோர் இத் தமிழ் நாடெங்கணும் தேடிப் பார்த்தாலும் ஒருவரேனும் தட்டுப்படார்.

இத்தகைய பொருள் நாட்டமுடைய இருளுடைக் கல்வி ஒன்றையே அடிப்படைக் கவர்ச்சிப் பொருளாக வைத்துப் பேரா யக்கட்சிதம் ஆட்சி வலையைப் பரக்க விரிந்திருக்கின்றது. அதனுல்தான் கல்வியின் உண்மை நோக்கத்தைக் கருதாமல் அதனைப் பலவாருன அமைப்புகளுக்கும், மாற்றங்கட்கும் உட் படுத்தி வருகின்றனர். இன்னும் சிலநாட்களில் 'தேசியக் கல்வி' என்பதன் அடிப்படையில் மாநில, நடுவண் அரசினர்க்கேற்ற பொதுமைக் கல்வியாக இத்திட்டம் உருமாற விருக்கின்றது. ஆனுல் எத்தகைய புனைவு கட்டிக் கூத்தாடினுலும் பழைய கருப்பன் கருப்பனே என்றவாறு, இந்தியைப் புகுத்துவதே நடுவணரசின் தலையாய நோக்கமாக விருக்கும் என்பதில் துளி யும் ஐயமில்லை. அத்தகைய பெருவெள்ளம் வருதற்கு முன்பே அணைபோட்டுக் கொள்வது தமிழர்தம் தலையாய கடமைகளில் ஒன்ருகும். நடுவணரசின் திட்டத்தையெல்லாம் செயல்படுத்து வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்பதே இப்பொழு துள்ள மாநில அரசின் பெருங்கடப்பாடாக விருக்கின்றது. நடுவணரசு என்று கூறப்படுவதெல்லாம் மூன்று நான்கு வடஇந்திய இந்திமொழி வெறியர்களுக்குள் அடக்கம். அவ் வாறே மாநில அரசு என்பதும் ஓரிரு அடிமை அமைச்சர் களுக்குள் அடக்கம். இவர்தம் ஆணை வலிவு இம்முறையில் அமைந்திருப்பதாலேயே சில உண்மைகளை 'அரசினர்' என்று பொதுவாகச் சொல்லப்படும் அந்த ஐந்தாறு மண்டைகளுக்குப் புரிய வைப்பதில் பெரிய தொல்லைகளையும், காலத்தாழ்த்தத்தை யும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவற்றிற்கு எடுத்துக் காட்டாகத் தமிழைக் கல்லூரியின் பயிற்று மொழியாகச் செய்து, இக்கால் அதனை நீக்கிய நிகழ்ச்சியைச் சொல்லலாம்.

தமிழைக் கல்லூரிப் பயிற்றுமொழியாக இல்லாது நீக்கின மைக்குத் தமிழக முதலமைச்சரும் பிறரும் கூறும் காரணம்

வேடிக்கையாகவும் வியப்பாகவும் உள்ளது '5 ஆண்டுகட்கு முன்பு தமிழில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகையை 1963 வரைதான் தரமுடியும் என்று ஏற்கனவே முடிவு செய்திருந்தமையால் இவ்வாண்டு அதைஎடுக்க வேண்டியதாயிற்று. அதனால் மாணவர்கள் வருவது குறைந்தது. அதன் விளைவாக அத்திட்டத்தையே கைவிட வேண்டியதாயிற்று' என்று அத்தமிழ்க் கொல்லிகள் கூறிவருகின்றனர். இதில் உண்மை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். புதியதொரு திட்டத்தை நாம் செயல் முறைக்குக் கொண்டுவரும் பொழுதே அத்திட்டத்தால் ஏற்படப் போகும் நன்மை தீமைகளை மக்கள் கண்டுகொள்ளல் முடியாது. அத்திட்டத்தைப் பலவாறு மக்களிடையே பரப்புதல் அரசினர் கடமை. நாம் போடும் ஐந்தாண்டுத் திட்டங்களுள், ஐந்தாண்டு, பத்தாண்டு பணவுறுதிக் கடன் சான்றிதழ்கள் முதலிய பெரிய திட்டங்களிலிருந்து, பரிசு உறுதிச் சீட்டு முதலிய சிறு திட்டங்கள் வரை அரசினர் அவற்றின் எதிர்காலப் பயன்களை (அப்படி ஒன்று இருக்குமோ என்னமோ) பல்வகைக் கவர்ச்சியான விளம்பரச் சுவரொட்டிகளின் வழியும் திரைப்பட வழியும், பற்பல முகவர்கள் வழியும், அஞ்சல் முத்திரைகளின் வழியும் விளம்பரப் படுத்துகின்றனர். ஆனால் இப்புதிய தமிழ்ப் பயிற்றுமொழித் துறையில், இத்தகைய ஒரு முறை இருப்பதாகவே மக்களுக்குத் தெரியாதவாறு இருட்டடிப்புச் செய்துள்ளனர் ஒரே வகையான ஆங்கிலக் கல்வியையே குருட்டுத்தனமாகத் தம் பிள்ளைகளுக்குப் புகட்டி வந்த, வருகின்ற தமிழ் நாட்டு மக்கள் அரசினரின் போக்குகளையும் நோக்குகளையும் எந்த வகையான தூண்டுகோலுமின்றியே பின்பற்றுவர் என்றெதிர்பார்ப்பது எத்துணை மடமை! அல்லது எத்துணைப் புறக்கணிப்பு! கட்டாய இந்தித் திணிப்பில் இத்தகைய முறையா கையாளப்பெற்று வருகின்றது? செத்துக்கிடக்கும் சமற்கிருதத்திற்குக்கூட எத்தனை விளம்பரம்; எத்தனை இலவச வகுப்புகள்; உதவித் தொகைகள்!

இந்நாட்டின் முதல்வராகக் கருதப்பெறும் நம் குடியரசுத் தலைவர் ஒரு பார்ப்பனர் என்பதனால் அண்மையில் தென்னகம் வந்திருந்தபொழுது, திருப்பதியில் தொடங்கி நடைபெற்றுவரும் சமற்கிருத கல்விக் கழகத்தில் பேசும் பொழுது, இந்தத் தலைமுறையில் சமற்கிருதத்தைப் பயில முன்வருபவர்களுக்கு எவ்வளவு உதவி அளித்தாலும் அது தகும்' என்று குறிப்பிட்டு விட்டுப் போனது எதைக் காட்டுகின்றது? ஏன் நம் முதலமைச்சர் (வெட்கம் ..!) திரு. பக்தவத்சலமே சமற்கிருதக் கல்விக்கு மறைமுகமாகவும் நேரிடையாகவும் எத்துணை உதவி செய்கின்றார் என்பதைப் புரிந்து கொண்டால் போதுமே! இத்தகைய பின்பாட்டுகள் இருப்பதால்தானே இவர்கள் போடும் திட்டங்கள் மக்களின் கவனங்களை அவர்கள் அவற்றைப் புரிந்து

தோன்கின்றனரோ இல்லையோ) மிகுவாகக்கவர்கின்றன. தமிழ்ப் பயிற்றுமொழியைப் பொறுத்தமட்டில் இவர்கள் (குறிப்பாகப் பக்தவத்சலம் அமைச்சரவை) செய்த இம்மியளவு முயற்சிதான் என்ன என்பதைக் கூறமுடியுமா? கல்லூரிக் கல்வி தமிழில் பயிற்றுவிக்கப் படுகின்றது என்பதும், எந்தெந்தக் கல்லூரி களில் அதை நடைமுறைகளில் கொணர்ந்துள்ளனர் என்பதும் கற்றவர்உட்படப் பெரும்பாலான பெற்றோர்க்குத் தெரியவே தெரியாது. ஆங்கிலக் கல்வியே கல்லூரிகளில் பயிற்றுவிக்கப் படுகின்றது என்றும், அதற்கே போலிப் பெருமையும் சிறப்பும் உண்டு என்றும், அக்கல்வி ஒன்றினால்தான் வேலை பெறுவதும். பெரும்பொருள் ஈட்டுவதும் மிகவும் எளிதாக இருக்கின்றது என்றுமே அவர்கள் தவறாகக் கருதிக் கொண்டிருப்பதால், அவர்கள் தமிழ்ப்பயிற்சியைச் சிறிதும் நினைத்தாரல்லர். மேடை யில்லாத கூத்துக்கு விளக்கில்லாமற் செய்தது போல, கொடுத்து வந்த உதவித் தொகையையும் அரசு நிறுத்தியது, தமிழில் பயில விரும்பிய மாணவர்சிலரையும் தடுத்து நிறுத்தும் ஏற்பாடே. பொருள் நோக்கக் கல்வியே நம் நோக்கமாகவிருக்க வெறும் தமிழ்ப்பற்றுக்காகவோ, அன்றித் தமிழறிவிற்காகவோ எத் தனைப் பெயர் தமிழில் படிக்க முன்வருவர்? ஒரே வகையான கல்வியை ஆங்கிலத்திலும் (சில ஆண்டுகள் போனால் இந்தியி லும்)கற்றாரும் கற்பாரும் பலவகையான வேலைவாய்ப்புகளையும், ஊதியங்களையும் பெற்றும், பெறவும் இருக்கையில், எவ்வகை வாழ்க்கை நலனுக்கும் உறுதியளிக்காத தமிழ்வழிக் கல்லூரிக் கல்வியை முடித்து வாளா உலாவர எவர் விரும்புவார்? தமிழில் கற்பவர் கற்கலாம்; ஆனால் ஊதியமெல்லாம் ஆங்கிலக் கல்விக்குத்தான் என்று அரசினர் கூறினால், மாணவர்களுக்கு எந்தக் கல்வியில் நாட்டம் இருக்கும்? அவர்களுக்குத் தேவை சோறும், வேலையும், பணமும் தாமே! அவை தமிழ்க் கல்வி யால் தங்குதடையின்றிக் கிடைக்கும் என்று உறுதி கூறப் பட்டதா? எந்தவொரு தனிப்பட்ட மொழிக்கும் இத்தகைய சலுகை இல்லை என்றால், இந்திக்கு மட்டும் ஏனிந்த அக்கறை? தமிழக ஆட்சியே தமிழை வளர்க்க விரும்பவில்லையாயின் தில்லிக்காரனா தமிழை வளர்ப்பான்? எனவே இத்திட்டமே ஒரு போலித்திட்டமாக இருத்தல் வேண்டும். ‘பாம்புச் சண்டை யைக் காட்டுகிறேன்’ என்று கூறிப் பற்பொடி விளம்பரம் செய்யும் ஏமாற்றுத் திட்டமே இது. ஐந்தாண்டுகளுக்கே உதவித் தொகை தரப்பெறும் என்று முன்பே திட்டமிடப் பெற்றிருந் தால் என்ன? அதை நீடித்தால் இடியா விழுந்து விடும்? அல்லது குடியா முழுகிவிடும்? முதல் ஐந்தாண்டுத் திட்டம் மூன் றும் ஐந்தாண்டுத் திட்டமாக நீடிக்கப் பெறறதில்லையா?

அடிப்படையிலேயே விளம்பரமும் துணைவலியும் அற்ற பயிற்சிமொழித் திட்டம் முன்னைய அமைச்சரவையில் அக்காலச்

(72-ஆம் பக்கம் பார்க்க.)

வேறென்ன சொல்வது?

வழிபாட்டு அறையில் கள்ளக் கணக்கேடுகளை எண்ணெய் ஆலை முதலாளி மறைத்து வைத்திருந்தார்

—செய்தி.

வழிபாட்டு உடைகளில் கள்ளர்களும் திரிகின்றனரே...!

இந்தியின் எதிர்காலத்தைத் தென்னிந்தியாவே தீர்மானிக்கும். தென்னிந்திய மக்களின் இசைவுடன்தான் இந்தி வெற்றிபெறமுடியும் .....ஆங்கிலத்தைப் போலவே இந்தியும் ஒருநாள் இந்தியரிடையே தொடர்பு மொழியாக ஏற்படும் என்று நம்புகின்றோம்.

— பெங்களூரில் சக்ளா.

வெண்ணெயில் சுண்ணம்பு கலந்த பேச்சு என்பது இதுதான்!

பணக்காரர் ஒரு சிலர் நிகரமை கொள்கை கண்டு அஞ்சுகின்றனர் எனவே, மொழி போன்ற சிறிய செய்திகளில்மக்களின் கவனத்தைத் திருப்ப முயல்கின்றனர்.

—கல்கத்தாவில் காமராசர்.

பணக்காரர்கள் மொழிபற்றி பேசுகின்றனரா? எங்கு? எப்பொழுது? எவர்கள்? அவர்கள் பேராயக்கட்சியின் 'மாட்டுத்' தோல்களையல்லவா போர்த்துக் கொண்டு திரிகின்றனர்!

கல்வியின் உண்மையான மதிப்பையும் நோக்கத்தையும் மக்கள் உணரும் வரை, கல்லூரிகளில் இட நெருக்கடி நீடிக்கும். —துணைவேந்தர் பர். இலக்குமணசாமி.

அதாவது, இப்பொழுது பயிற்றப் படும் கல்லூரிக் கல்வியின் மதிப்பையும் நோக்கத்தையும்...!

இன்ன பாடப் பிரிவுகள் தாம் வேண்டும் என்று வலியுறுத்தும் போக்கு மாணவரிடை இல்லாதிருப்பின் புகுமுக வகுப்பில் இட நெருக்கடியை எளிதில் போக்கிவிடலாம்.

—முதலமைச்சர் திரு. பக்தவத்சலம்.

'இன்ன பாடங்கள்தாம் படிக்க வேண்டும் என்று அரசினர் கட்டளையிடாவிடில்........'என்றும் சொல்லலாமே!

மராட்டியத்திலும் குசராத்திலும் கோதுமை கிடைக்காமல் மக்கள் திண்டாட்டம். பஞ்சாபில் விளைச்சல் மிகுதியால், கோதுமை கால்நடை கட்குத் தீனியாகப் போடப்படுகின்றது!

—செய்தி.

ஒருமைப்பாட்டின் அழகு....?

புதுவையில், இறையுருவங்கள் பொறித்த கற்றூண்களின்மேல் தியூப்ளேயின் கற்படிமம் வைக்கப் பட்டிருப்பது சமயவுணர்வைப் புண் படுத்துகின்றது. கலையை இழிவு படுத்துகின்றது. அந்த இழிவை அகற்ற வேண்டும். கலையை மதிக்க வேண்டும். —'குமுதம்' இதழ்.

உங்கள் அட்டைப் படத்தின் கவர்ச்சி 'அழகு'நல்ல உள்ளங்களைப் புண்படுத்துகின்றதே, அந்த இழிவை எப்படி அகற்றுவது?

3000 ஆண்டுகட்குமுந்திய அரபு மொழி இன்றைய அராபியர்கட்குப் புரியாது. கிரேக்கமும் அவ்வாறே. சமற்கிருதமோ வழக்கிழந்து போயிற்று. ஆயினும் தமிழ் மாற வில்லை. தமிழ்நாடு பொறையுடை மைக்குப் பெயர்போனது........உலக னைத்தும் ஒத்துழைப்புத்தேவையான இக்காலத்தில் ஒரே நாட்டின் பல் வேறு பகுதிகட்குள் ஒத்துழைப்பு மிகத் தேவை....

—அமைச்சர் உமாயூன்கபீர்.

முதுகைச்சொறிந்துவிடும் வெறும் பேச்சு!

இலவச சமற்கிருத வகுப்புகள்— சிதம்பரத்தில் தொடங்கப் பெற்றன. 60 மாணவ மாணவியர் பயில்கின்ற னர். -செய்தி.

இந்தியை இராசாசி உட்பட பிராமணரில் ஒரு சிலர் எதிர்ப்பதன் உண்மைக் காரணம் இப்பொழுதா வது புரிகிறதா?

அமைச்சர்கள்,அலுவலர்கள் மேற் கூறப்படும் ஊழல் கைக்கூலிக் குற் றங்களில் நூற்றுக்கு எண்பது விழுக் காடு முழுப் பொய்யாகும்.

—காமராசர்.

முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதென்பது இதுதான்.

எந்த அமைப்பிலும் **தற்காலிக மாகக்** குறைகள் காணப்படுவது இயல்பே. —காமராசர்.

எந்த அமைப்பும் தற்காலிகமாக வெற்றி பெறுவதும் இயல்பே....!

இரத்தலை (பிச்சையெடுத் தலை)த் தடைசெய்யச் சட்டவரைவு (மசோதா)! ஆனால் இறைவேண்டு தல்கட்காக மட்டும் விதிவிலக்கு.

—சென்னைச் சட்டமன்றச் செய்தி.

இரத்தலுக்குமட்டுமா,கொள்ளைக் கும் கொலைக்கும் அவ்வாறுதானே விதிவிலக்குத் தரப்பட்டுள்ளது.

சுள்ளி பொறுக்கிக் கொண்டிருந்த ஓரிளம் பெண்ணை அவ்வழியே வந்த இரு ஊர் காவலர்கள் வலிந்து கற்பழித்தனர்;...இருவரும் பிணைய வில் (சாமீனில்) விடுப்பு. -செய்தி.

....ஆயிரத்தில் ஒன்று!

ஆங்கிலத்தை எதிர்த்துத் தமிழர சுக்கழகம் போராட்டம் நடத்தும்.

—செய்தி.

தென்னை மரத்தைத் தேள் கொட்டப் பனை மரத்திற்குப் பாடம் போடும் கதை யிது...!

ஆசிரியர் ஓய்வு பெறுதற்குரிய அகவை பற்றிய செய்திகளடங்கிய அரசினர் அலுவலகத் தாள் கட்டில் ஒன்றுக்கொன்று முரணான ஆறு அரசினர் கட்டளைகள் அடங்கியுள்ளன. —அமைச்சர் வேங்கடராமன்.

கட்டளை மட்டுமென்ன..? சட்டங்களே ஒன்றுக்கொன்று முரண்படுவது நம் அமைச்சர் கண்களில் இன்னும் படவில்லை போலும்...!

இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில்பிறரினும் தமிழரின் உழைப்பே மிகுதியாகும். —இலங்கையில் ஆராய்ச்சியொன்றின் முடிவு.

சிரிமாவுக்கு இம் முடிவு எரிச்சலாக இருக்கலாம்.

தில்லையில் "சிதம்பர சபை"யின் சார்பில் சமற்கிருத வகுப்பைத் தொடங்கவும், சமற்கிருதத்தின் மேன்மையைப் பரப்பி, உண்மைகளைக் கடைப்பிடித்து அம் மொழியிலேயே பேசும் திறமையையும் வுளர்த்து முன்னேற்றும் பொருட்டு ஒரு சொற்பொழிவு வரிசையைத் தொடங்கி நடத்தவும் சங்கராச்சாரியார் கட்டளையிட்டார். —செய்தி.

தொடக்க விழாவுக்குப் பக்தவத்சலத்தைக் கூப்பிடலாமே...!

ஒரு சிலரின் நலனுக்குக் கேடு விளைந்தாலும்கூட, எவரிடமும் கடுமையான கொள்கையைப் பின்பற்ற இந்திய அரசு விரும்பவில்லை.......... உலக அமைதியே நமது நோக்கம்; அதனால்தான் தமிழரை விரட்டிய பர்மாவிடமும்கடுங்கொள்கையைப் பின்பற்றுவதற்கில்லை. —துணை அமைச்சர் இலக்குமி மேனன்.

மீசையில் மண் ஒட்டவில்லையே..!

கோவில் "தல புராணங்"களையும் மூலை முடுக்கிலுள்ள கோவில்களின் வரலாறுகளையும், அவை குறித்த கதைகள், செவிவழிச் செய்திகளையும் ஆராய்ந்து வெளியிடவேண்டும் இவை இறையன்பில் (பக்தியில்) மூழ்கித் திளைத்த தமிழரின் புலம்பக (ஆன்மீக)ச் சிறப்புக்கு வரலாற்றுச் சான்றுகளாக விளங்கும். —தமிழகப் புதிய ஆளுநர் செயசாமராசர்.

சீர்திருத்தக் கோமாளி வந்தாரையா...!

சென்னை நகரில் எலும்புருக்கி நோயினர் 25 ஆயிரம் பெயருக்கு மேல் உள்ளனர். ஆனால் மருத்துவ மனைகளில் 2961 பெயருக்கு மட்டுமே இடம் உளது.

—அமைச்சர் திருவாட்டி. சோதி வேங்கடாசலம்.

அம்மையாரின் உள்ளம்உருக்கும் கவலை...!

நாட்டு நடப்புகளையும், உலக நடப்புகளையும் பற்றி மாணவர்கள் சிறிது தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.—திரு. சி. பி. இராமசாமி

மிகுதியாகத்தெரிந்துகொண்டால் ஆட்சிக்குத் தொல்லை ஏற்படும் என்பதால்தான்...!

காஞ்சியில் "ஆசாரியாள் வியாச பூசை!", "திருமலையில் பாரத உபன்யாசம்" சகடபுரத்தில் சாதுர்மாசிய பூசை! திருவேற்காட்டில் மண்டலாபிசேகம்! —செய்திகள்

ஈ. வே. இரா. பெரியாரின் அரசியல் ஈடுபாட்டால் நமக்குக்கிடைத்த ஊதியம் இதுதான்!

திரு. பக்தவத்சலத்தின் **கையிலுள்ள கட்டு ஒரு கிழமையில்** அவிழ்க்கப்படும். ஆயினும் மூன்று கிழமைகட்கு அவர் தம் வீட்டிலிருந்துகொண்டே ஆட்சி அலுவல்களைக் கவனிப்பார். அரசினர் அலுவலகத்துக்கு **மாடிப் படிக்கட்டு ஏறிச்செல்லும்** துன்பத்தைத் தவிர்ப்பதற்காகவே இந்த ஏற்பாடு. —செய்தி.

அடடா, பக்தவத்சலம் கைகளால் (தலை கீழாக) நடப்பது இது நாள் வரை தெரியாதே!

இலவசக் கல்வித் திட்டம்பற்றிச் செய்தித்தாட்கள் கூறும் தூற்றல்கள் எனக்குப் **பிடிக்கவில்லை!**
திரு. பக்தவத்சலம் கூற்று.

ஐயா அவர்களுக்குப் பிடிப்பது எதுவோ....?

காந்தியடிகளின் விருப்பத்தை நிறைவேற்றவே தமிழகத்தில் இந்தி பரப்பப்படுகின்றது.
—திரு. பக்தவத்சலம்.

தன்னுரிமை (சுதந்திரம்) வந்தவுடன், பேராய(காங்கிரசு)க் கட்சியைக் கலைத்துவிட வேண்டும்என்ற அவர் விருப்பம் என்னவாயிற்றோ?

வரி நிலுவைக்கென சென்னை அரசினரின் உந்துவண்டிகள் ஆந்திர அரசினரால் பிடித்து வைக்கப் பெற்றன. —செய்தி.

குடிகள் எப்படி, குடியரசு அப்படி.....!

"ஆந்திர அரசினர் எங்கள் உந்துகளைக் கைப்பற்றியது சரியன்று. அவற்றுக்குரிய வரி செலுத்தாமல் நாங்கள் என்ன ஓடியா போய்விடப் போகிறோம்?" —திரு. பக்தவத்சலம்.

அமைச்சர்கள் எப்படி, அரசாட்சி அப்படி....!

பத்தாண்டுகள் அமைச்சராகப் பணிபுரிந்துள்ளவர்கள் பதவி துறத்தல் வேண்டும்....! —அமைச்சர் திரு. சஞ்சீவர் அறிவுரை.

ஐயோ, பக்தவத்சலமே.......!காமராசரே துணை....!

தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிச்சலும், மகிழ்வோடு ஈகச் செயல்களை மேற்கொள்ளும் ஆர்வமும் பேராயக் கட்சியினருக்கு இருத்தல் வேண்டும்—திரு. காமராசர்

எங்கே தேடுவேன்? —அவற்றை எங்கே தேடுவேன்?

★

என் அண்ணாமலைநகர் வாழ்க்கை.

மொழிப்பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

2. அமர்த்தப் படலம்

பண்டகர் வரதராசலு அவர்கள் சென்னை சென்றபின், அரசவயவர் முத்தையா அவர்களிடம் என்னைப்பற்றிச் சொல்லியிருப்பதாக, அவர்கள் திருமுகம் வந்தது அதன்பின், யான் அண்ணாமலைநகர் செல்லும் நாள் அண்ணணித்தென்று எண்ணினேன்.

அரசவயவர் முத்தையா அவர்கள் தங்கள் தந்தையார் போன்றே தமிழ்ப்பற்று நிரம்பியவர்கள். ஆயின், பண்டாரகர் சேதுவும் பேராசிரியர் தெ. பொ. மீ. யும் (வேறொரு பிராமணப் பேராசிரியரும்) முத்தமிழ் வேங்கையரென்று கருதப்பட்டதனாலும், துணைக்கண்காணகர் திரு. நாராயணசாமி அவர்களின் அதிகார உரிமை மதிக்கப்பட வேண்டியிருந்ததனாலும், உடனடியாய் என்னை அமர்த்த விரும்பவில்லை. அதே சமையத்தில், அடிக் கழஞ்சு பெற்ற தமிழ்ப் பேராசிரியர் இருவரும் அரசியற் கட்சித் தலைவர் ஒருவரும் கூறிய பரிந்துரையைப் பொருட்படுத்தாதிருக்கவும் இயலவில்லை. இங்ஙனம் இருதலைக்கொள்ளி எறும்புபோல் இடர்ப்பட்டதனால், நீண்டநாளாக என்னை அமர்த்துவது அறத்தடுமாற்றமாகவே யிருந்தது.

இந்நிலையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கீழைக் கலைத்துறைத் தலைவரும் அருந்தமிழன்பரும் பெரும்பொறுப்பாளருமான பேராசிரியர் இலெ. பெ. கரு. இராமநாதன் அவர்களின் கருத்தை அரசவயவர் முத்தையா அவர்கள் கேட்டிருக்கின்றனர். பேராசிரியர் முற்றும் இசைவே, அரசவயவர் தடுமாற்றந் தீர்ந்திருக்கின்றது. அதன்பின் துணைக் கண்காணகரை இணக்குவதும் எளிதாயிருந்திருக்கின்றது. இச்செய்திகள் முன்பு எனக்கு மறைவாயிருந்து பின்பு வெளிப்படுத்தப்பட்டன.

நீண்டநாளாக ஒன்றும் தெரியாமையால், அண்ணாமலைப் பல்கலைக்கழக வேலையைப்பற்றி நான் ஐயுற்றுக்கொண்டிருந்த பொழுது, ஒருநாள் எதிர்பாராத நிலையில் துணைக் கண்காணரிட

மிருந்து அமர்த்தோலை வந்தது. ஓரளவு பசியடங்கினவன் பெற்ற உணவுபோல் அதைப் பெற்றுக்கொண்டேன். ஆயினும், துணைக்கண்காணகரின் அன்பார்ந்த முடங்கலும், தமிழ் வேர்ச்சொல்லகரமுதலித் தொகுப்புப் பற்றிய எண்ணமும், இன்புறுத்தின. இவ்வின்பம் இரண்டொரு நாளேயிருந்தது. ஏனெனின், எனக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்று வந்த வுணவு நஞ்சூட்டப்பட்ட தென்பது பின்புதான் தெரிய வந்தது.

அமர்த்தோலை வந்து இருநாட் சென்றபின், அதன் தொடர்ச்சியாக மற்றோர் ஓலை வந்தது. அதன் உறையைப் பிரித்துப் பார்த்தேன். என் அ. ம. ப க. க. பணியை மேற் பார்க்குமாறு,

க வங்கச் சட்டமன்றத் தலைவரும் ஓய்வு பெற்ற சமற் கிருதப் பேராசிரியரும் மொழி நூலாசிரியருமான பண்டாரகர் சுநீதிக் குமார சட்டர்சி (தலைவர்),

உ பூனைப் பட்டக் கல்விப் பின்னை ஆசிரியப் பயிற்சி யாராய்ச்சித் தக்கணக் கல்லூரித் தலைவர் பர். கத்தரே,

ங மைசூர்ப் பல்கலைக்கழகக் கன்னடத் துறைத் தலைவர், பேராசிரியர், சீகண்டையா,

ச சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர், சேது,

ரு சென்னை மண்டலக் கல்லூரி ஓய்வு பெற்ற தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், தெ பொ. மீனாட்சி சுந்தரம்,

சு சென்னை மண்டலக் கல்லூரிச் சமற்கிருதப் பேராசிரியர் திருஞான சம்பந்தம்,

எ அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கீழைக்கலைத் துறைத் தலைவர், பேராசிரியர், இலெ. பெ. கரு இராமநாதன்,

அ அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கலைத்துறைத் தமிழ்த் தலைவர், பேராசிரியர், சிதம்பரநாதன்,

கூ அண்ணாமலைத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவர், பேராசிரியர், கோ. சுப்பிரமணியம்,

ஆகிய ஒன்பதின்மரைக் கொண்ட குழு ஏற்படுத்தப்பட் டிருந்தமை தெரித்தது. இவ்வேற்பாடு நான் எள்ளளவும் எதிர் பாராதது. இக்குழுவில் என்னளவு தமிழாராய்ந்தவரேனும், என் பணியை மேற்பார்க்கத் தக்கவரேனும் ஒருவருமிலர். ஆயினும், எனக்கும் தமிழுக்கும் மாறான இருவராலோ மூவ

ராலோ சூழ்ச்சியாக இஃது ஏற்படுத்தப்பட்டது. என்னை அண்ணாமலை நகரினின்று விரைந்து வெளியேற்றுவதற்கு அமைத்த தள்ளிவெட்டி இதுவென்பதை உடனே கண்டுகொண்டேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சியாளராகவிருந்த பேராசிரியர் இரா. இராகவையங்காரும், சமற்கிருதப் பேராசிரியராகவிருந்த பர். சுப்பிரமணிய(சாத்திரியா)ரும், தாம் எழுதியுள்ள நூல்களில் உண்மைக்கு மாறாகத் தமிழை எத்துணையோ ஆழ்த்தியும் தாழ்த்தியும் கூறியுள்ளனர். ஆயினும், அவரைத் தடுக்கவோ விடுக்கவோ எத்தமிழ்ப் பேராசிரியர்க்கும் எள்ளளவும் உரமில்லாதுபோயிற்று. முப்பதாண்டுகளாக இரவும் பகலும் அரும்பாடுபட்டுத் தமிழாராய்ந்து உள்ளதை உள்ளவாறு கூறிய எனக்கோ, இல்வாழ்க்கைக்கும் இடமில்லாதபடி தமிழரே, அதுவும் தமிழ்ப் பேராசிரியரே, வலுத்த முட்டுக்கட்டை யிட்டனர். கால்டுவெலும் மாக்கசுமுல்லரும் செசுப்பர்சனும் இத்தகைய கட்டுப்பாட்டிற்கும் முட்டுப்பாட்டிற்கும் ஆளாயிருந்திருப்பின், அவர்மனநிலை எங்ஙனமிருந்திருக்கும் என்பதை எண்ணிக் காண்க.

ஆங்கிலக் கல்வியும் அறிவியலாராய்ச்சியும் மிக்க இவ்விருபதாம் நூற்றாண்டிலும், பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியன்மார் தமிழைக் காட்டிக்கொடுத்துப் பட்டமும் பதவியும் பெயரும் புகழும் பாராட்டும் பரிசும் பெறுவாராயின், பிராமணர் நிலத்தேவரென்றும் அவர் முன்னோர்மொழி தேவமொழியென்றும் முற்றும் நம்பப்பட்டிருந்த பண்டைக்காலத்தில், தமிழ்நிலையும் தமிழன் நிலையும் தன்மானத் தமிழ்ப் புலவன் நிலையும் எத்துணைத் தாழ்ந்திருத்தல் வேண்டுமென்பதை, கடுகளவேனும் பகுத்தறிவுள்ளார் உய்த்துணர்ந்து கொள்க.

பர். சட்டர்சி தமிழை நேர்வழியிற் கல்லாது, தமிழைப் பிறழவுணர்ந்த அல்லது திரித்துக் கூறுகின்ற பிராமணவாசிரியர் எழுதிய ஆங்கில நூல் வாயிலாய்க் கற்ற வங்காளியர். அவர் தமிழறிவு எத்தகைய தென்பது அடுத்த படலத்தில் விளக்கப் பெறும்.

பர். கத்தரே ஒரு சமற்கிருத வெறியரான கொங்குனிப் பிராமணர். தமிழ்ப் பெருமையைச் சற்றும் அறியாதவர்.

பேராசிரியர் சீகண்டையா ஒரு கன்னடப் பிராமணர் இவரேனும் ஒரு திராவிட மொழிப் பெரும் புலவர். என் திராவிட மொழியாராய்ச்சித் துறையொடு தொடர்புள்ளவர். வங்கத்திலும் வடமொழியிலும் வல்லுநரான சட்டர்சிக்கும், கொங்கனியிலும் சங்கிருதத்திலும் வன்புலவரான கத்தரேக்கும் தமிழொடு என்ன

தொடர்பு? ஆரியமொழிகட்குள் மட்டுமன்றி இந்திய மொழிகட்குள்ளும் சமற்கிருதத்தைத் தலைமையாகக் கொண்ட இவ்விருவரொடும், (தமிழைத் தலைமையாகக் கொண்ட) நான் விரைந்து முட்டுவேன் என்பதும். அதனால் என்பணி முட்டுப்படும் என்பதுமே, இவ்விருவரையும் முறையே மேற்பார்வைக் குழுத் தலைவராகவும் துணைத் தலைவர் போன்றும் அமர்த்தியவர் எதிர்பார்த்தவை அவ்வெதிர்பார்ப்பு அண்மையிலோ பின்னரோ நிறைவேறும் என்பதும் எனக்குத் தெரியும்.

பேராசிரியர் சேது இலக்கணப் புலமை யில்லாதவர். இலக்கியப் புலமையும் பெரும்பாலும் பதவிக்கு வந்தபின் பெற்றவர்; தனித்தமிழ்க் கொள்கையற்றவர்; வழக்கறிஞர்.

பேராசிரியர் தெ. பொ. மீ சென்னை வாணர்; சென்னைத் தமிழையன்றிப் பாண்டி நாட்டுத் தமிழையறியாதவர்; வேதாந்தியர்; (இரண்டன்மைக் கொள்கையர்); வையாபுரி வழியினர்; வழக்கறிஞர்; பேராயக்கட்சியர்; தமிழாராய்ச்சி நிரம்பாதவர்; சமற்கிருதத்தைத் தலைமையாகக் கொண்டவர்; (ஆயினும் பேராசிரியர் சேது போலாது தம் கொள்கையை வெளிப்படையாய்க் கூறுபவர். திரு. வையாபுரி போன்றே பெரும்புலமை பெற்றவர்) தனித்தமிழ்க் கொள்கையையும் குமரித் தமிழ் நம்பிக்கையும் அற்றவர். குழுவாருள் தமிழ்ப் பற்றுள்ள பிறவுறுப்பினரோ, பெரும் பதவியும் செல்வாக்குமுள்ள பிராமணரையும் சமற்கிருதப் பேராசிரியரையும் காணின், விண்பட்ட கொக்கு வல்லூறு கண்டென்ன விலவிலக்கின்றவர். ஓரிருவர் அங்குமிங்கும் சாரும் இருதலைமணியார்; எதற்கிணங்கியும் பதவியை இறுகப் பற்றிக் கொள்பவர். அண்ணாமலைப் பல்கலைக் கழக அதிகாரிகளோ அரசியலாரைத் தழுவியும் வருவாயைக் கவனித்தும் ஒழுக வேண்டியவர்.

இந்நிலையில் அண்ணாமலைநகர் செல்வதா இல்லையா என்று மீண்டும் சூழ்வு பிறந்தது. என் நண்பரெலாம் செல்லவே தூண்டினர். எனக்கு அகவை அன்று 54 "அடுத்த ஆண்டு ஓய்வு பெறும் அகவை. அதற்குமேல் ஓராண்டு நீட்டிப்புக் கிடைக்கலாம். ஆகவே, ஈராண்டிற்குமேல் இச் சேலங் கல்லூரியில் இருத்தல் இயலாது. அண்ணாமலை செல்லின் ஐந்தாண்டேனும் ஈராண்டேனும் அலுவலிருக்கும். அதற்குள், தமிழ் வேர்ச்சொல் அகரமுதலியையும் ஒருவாறு தொகுத்து விடலாம். அதன்பின் வேலையிருப்பினும் சரி, இல்லாவிடினும் சரி" என்றிவ்வாறு எண்ணிச்செல்லவே துணிந்தேன். என் உண்மை நண்பரும் "நீங்கள் திராவிட மொழியாராய்ச்சிக் குழுவில் செயளாளராக விருப்பதால், இடர்ப்பாடுகள் நேரினும் எதிர்த்துக்கொண்டு சமாளிக்கலாம்" என்று ஊக்கினர்.

அடுத்து வருவது பணிசெயற் படலம் – முதற் பகுதி.

வழக்குரை காதை.

துரை-மாணிக்கம்

(வேல்மார்பன் என்னும் விறலோன் தமிழகத்தில்
கால்கோளும் இந்திக் கடாவைத் துணிந்தெதிர்த்தான்;
ஆகையினால் ஆள்வோர் அவனைச் சிறைப்பிடித்துச்
சாகும் படியடித்தும், சாகாமல் நீர்வார்த்தும்,
நெஞ்சில் உதைத்தும் நினைவழிக்க மாட்டாமல்,
எஞ்சி யிருந்த உயிரோ டவனுடலைத்
தூக்கி, அற மன்றத்தில் 'தொப்'பென்று போட்டார்கள்;
தாக்குண்ட வேங்கை தணல்கக்கப் பேசுகின்ற
காட்சியினைக் காணக் கணக்கற்றோர் வந்திருந்தே;
ஆட்சி உரைக்கும் அறத்தைச் செவிமடுப்பார்!
முன்னர் அரசினரின் சார்பில் வழக்காடும்
தன்னுணர்வு மாண்ட தமிழ வழக்குரைஞர்
வேல்மார்பன் தன்னின் வழக்கை விரித்துரைத்தே,
அன்னோன்முன் வந்தே அதிரும் இடிக்குரலில்
இன்ன படியுரைப்பார்; மன்றம் எதிரொலிக்கும்!)

அரசுச் சார்பு வழக்குரைஞர்:

(வேல்மார்பன் பக்கம் விரல் நீட்டிச் சுட்டியவாறு)

இமிழ்கடல் வரைப்பின் 'இந்தியா' வென்னும்
அமிழ்தாம் 'பாரத' ஆட்சியி னின்று
தமிழக ஆட்சியைத் தனியே பிரித்திடக்
குமிழ்த்தெழும் உணர்வினால் மக்களைக் கூட்டினை;
இனித்த சொல்லினால் பாக்கள் எழுதினை;
தனித்தமிழ் என்றும், தமிழகம் என்றும்
சிதர்ந்த மக்களின் சிதைந்த உளங்களைப்
புதுக்கி அவற்றுள் உணர்வைப் புதுக்கினை;
கிளர்ந்தெழு கென்றே அவர்பால் கிளத்தித்
தளர்ந்த நெஞ்சினில் தமிழ்த்தீ மூட்டினை;
கொளுத்திய தீயால் அவர்கூன் நிமிர்த்தினை;
வெளுத்துக் கிடந்த அவர்தம் உளத்தில்
நாட்டுப் பிரிவெனும் நஞ்சை வார்த்தனை;
'தீட்டுக கைவாள்; திரளுக நெடுந்தோள்!

கேட்டுப் பெறுகுவ தன்றே விடுதலை;
பூட்டிக் கிடக்கும் புலிகளே எழுகென,
இடிக்குரல் முழக்கினை; அவர்துயில் எழுப்பினை;
அடிக்கடி ஊர்க்குஊர் தெருத்தொறும் அவர்தமைக்
கூட்டி விடுதலை முரசங் கொட்டினை;
மூட்டிய உணர்வினுல் அரசமுன் னேற்றம்
முற்றும் தடைப்பட வில்லை ஆயினும்
சற்றே தளர்ந்தது; உன்போல் சழக்கரால்
வடக்கில் சீனன் வரம்பு மீறலை
அடக்கிடற் கில்லை; அடுத்துக் கெடுக்கும்
பாக்கித் தானின் பகையும் வளர்ந்தது.
போக்கிலி! உன்ஞல் உட்பகை புகைந்தது;

பிரிவினை பற்றி நினைக்கவும் பேசவும்
உரிமை உனக்கிலை; ஒருபெரு நிலத்துள்
தனித்தனி ஆட்சி தந்திடற் கில்லை;
எனைத்தனி யாக விடுகென இயம்பினும்
உனைத்தனி விட்டிட அரசு ஒப்பாது;
திணைத்துணை மண்ணும் இந்தியா வென்னும்
பெருநிலத் தின்று பிரிந்திடும் விடுதலை
உரிமை கேட்டனை; அதுபெருங் குற்றம்!
நாட்டின் அமைதியைக் குலைத்ததும், மக்களைக்
கூட்டி அவர்தமைத் தூண்டலும் குற்றமே!
ஆட்சிக் கிரண்டகம் புரிந்தனை; ஆகலின்
மீட்சி உனக்கிலை; முடிவாய் நின்பால்
வினக்கள் சிற்சில வினவுவேன்; பிரிவினைக்
கனக்காண் பார்க்கவை கண்களைத் திறக்கும்!

உரிமை உரிமை எனஉரைத் தாயே-
குரல்மங் கிடக்கூக் குரலிட் டாயே,
எந்த உரிமையை இழந்தனை விரைந்துசொல்?

(வழக்கு மன்றத்தில் கூட்டம் கட்டுக்கடங்காமல் போயிற்று. காவலர்கள் அடிக்கொருவர் நின்று கூட்டத்தைக் கட்டுப்படுத்துகின்றனர். வழக்குரைஞர் கேட்ட கேள்விக்கு வேல்மார்பனின் விடையைக் கேட்க மக்கள் ஆவலுடனிருந்தனர். வேல்மார்பன் பேசினன்; அவன் இடிக்குரல் வழக்கு மன்றச் சுவர்களில் பட்டு எதிரொலித்தது.)

வேல்மார்பன்:

மூச்சு முட்டப் பேசிவிட் டீர்கள்!
ஆச்சு;இனி என்னுயிர் அரைநா ழிகைதான்!
இவ்விடைப் பொழுதில் ஆகிலும் என்றன்
செவ்விய கருத்தினைச் சிறப்புறக் கூறுவேன்:

அறமன்றம் கேட்க; அறவோர் கேட்க!
மறத்தமிழ் மக்கள் மறவாது கேட்க!
உலகம் கேட்க! உயர்ந்த பெருமைகள்
இலவாகிக் கணவனை இழந்த ஒருத்தியாய்த்
தவிக்கும் என்றன் தமிழகம் கேட்க!
புவிக்குள் இவ்வுரை பொன்று தாகுக!

'எந்த உரிமையை இழந்தனை' என்றீர்;
எந்த உரிமையை எனக்குத் தந்தீர்?
உணர்ந்து பேசிய கருத்தினை ஒவ்வாது
கொணர்ந்து நிறுத்தினீர் அறங்கூர் அவையம்!
இச்செயல் ஒன்றே என்றன் கருத்தினை
அச்சம் இலாமல் உரைக்கும் உரிமையை
எடுத்தது என்பேன்; இல்லைஎன் பீரா?
தடுத்தது பேச்செனின் செயற்குத்தாழ்ப் பாளே!
வாயில் அமிழ்தும் வளர்கலையும் ஊட்டிய
தாயின் மொழிக்கே தடைச்சுவர் வைத்தீர்!
இழவு வீட்டில் இடும்ஒப் பாரிபோல்
அழுகை இந்தியை அரசனை ஏற்றினீர்!

மொழிதரு உரிமையே முதன்மையா யிருக்கக்
கழியை இழந்த கண்ணிலார் போல
எங்களை ஆக்கிட இந்தியை நுழைப்பீர்!
வெங்கொடும் புண்ணில் வேல்நுழைத் தல்போல்
இந்தி சுட்ட புண்ணில் எரிதரும்
'வந்தே மாதரம்' நஞ்சினை வார்த்தீர்.
'வந்தே மாதரம்' எனின்,'தாய் வாழ்க'
என்பது பொருளெனின், எவர்தாய் வாழ்வது?

எம்தாய் நோஞ்சல்; இருமலால் சாகையில்
நும்தாய் பற்றி எமக்கென்ன கவலை?
புதுமை எவர்க்கும் பொதுமை அன்றோ?
''இதுதவ றப்பனே, எல்லார் தாய்களும்
ஒன்றுதான்'' என்றே உரைக்கின் றீரா?
நன்றுதான்; முதலில் நலிவுறும் எம்தாய்
வாடிக் கிடக்கும் நிலைவகை செய்க!
தேடக் கிடைக்கும் ஒற்றுமை என்பது
தெருவில் கிடக்கும் தேய்ந்த செருப்பா?

ஒருவர்க் கொருவர் உதவுதல் அன்றோ
பெருமை ஒற்றுமை பேணி வளர்க்கும்!
எந்தமிழ் அழித்தே இந்தியை நுழைப்பது,
எம்தாய் பாடைக் கேற்றி,நும் தாயை
அரியணை ஏற்றல் ஆகா தோ?இதைப்

புரிதற்கு நீரென் உரிமை படைத்தீர்?
இத்தகு உரிமை எங்கட் கெம்நாட்டில்
முத்தமிழ் வளர்த்திட மட்டும் இல்லையா?
எந்த உரிமையால் இந்தியைக் கொணர்விரோ,
அந்த உரிமையால் அதனை எதிர்ப்போம்!
நுஞ்செயல் மட்டும் உரிமையால் நிகழ்ந்ததோ?
எஞ்செயல் மட்டும் உரிமை இழந்ததோ?

வெள்ளைக் காரனை எதிர்த்துப் பெற்ற
நொள்ளை உரிமை இதுவென் றுரைப்பின்
நீங்கள் அவனை எதிர்த்து நிற்கையில்
நாங்கள் மட்டும் நண்டா பிடித்தோம்?
உம்மொடு சேர்ந்தோம்; உம்மினும் பொருதினோம்;
உம்மின் முழக்கினும் உயர்முழக் கிட்டோம்!

மொழியின் உரிமை நெஞ்சில் முளைப்பது!
மொழியின் உரிமை உணர்வில் முகிழ்ப்பது!
தாய்மொழி உரிமை அற்றவர் பிறரை
நாய்போல் நத்தி வாழ்தலே நடப்பு!
ஓரிரு நாய்கள் உம் பின் வரலாம்;
ஈரோர் எலும்புத் துண்டுகள் எடுக்கலாம்!
அதற்கெனப் பிறரையும் அவர்போல் நினைப்பதா?
புதுக்கினேன் உணர்வெனப் புகன்றீர்; உணர்வு
புதுக்கிடப் பித்தனா, செம்பா என்ன?
நல்லுணர் வென்றும் சாம்புவ தில்லை!
நல்லுணர் வதுதான் நாடி நரம்பினில்
ஓடிய வாறே மாந்தரை உய்ப்பது!
நீடுநல் உணர்விலார் நீர்மையர்; அவரால்
கேடுகள் விளையலாம்; நன்மைகள் கிளையா!

எந்தமிழ் மொழியில் நல்லுணர் வியற்கை!
அந்த உணர்வுதான் தமிழினம் அழியாது
இன்று காறும் இருந்து காப்பது!
பொன்றிய உரோம கிரேக்கம் முதலிய
நாடுகள் பலவும், நல்லினம் பலவும்
ஓடு நீரிற் கரைந்த உப்பென
அழிந்த காரணம் அவ்வுணர் வின்மைதான்!
மொழியே உணர்வினை முழுதும் காப்பது!
இந்தநல் உணர்வோ டியல்வதால் அன்றோ
செந்தமிழ் தானும் செழித்து நிற்பது!

உணர்வால் மொழியும், மொழியால் அறிவும்
புணரும் அறிவால் வாழ்வெனும் பயனும்
எல்லா உயிர்க்கும் பொதுவென உணர்க!
இல்லா மாந்தர் மொழிக்கெனக் கவலார்!

அவரே இன்றை ஆட்சியில் இருப்பவர்
இவர்தம் மால்தான் எம்மோர் நொடிவது!
இன்றை நிகழ்ச்சியே இறுதி அன்று;
பின்றை நடப்பவைப் பின்னுளார் அறிவர்:
ஒருவனின் உரிமையை-உயிரைப் பறிப்பதால்
உரிமை உணர்விங் கொழியுமா என்ன?
காலைக் கதிரவன் கடும்பகல் கொதிப்பதும்
மாலைபோய் இருளில் மாய்வதும் போலப்
பல்வகை ஆட்சி உலகினில் படர்ந்து
சில்நாள் இருப்பதும் சிறப்பதும் அழிவதும்
இயற்கை மக்கட் கிட்ட சட்டம்!
மயற்கை வேண்டா; மக்களின் உணர்வை-
உணர்வில் முகிழ்த்த மொழியின் உரிமையை
இணரிதழ்ப் போலக் கிள்ளி எடுப்பது
அரசினர் மடமையென் றறிக! உரிமை
முரசைக் கிழித்தால் முழக்கம் நிற்குமா?
உள்ள முழக்கம் ஓயாப் பெருங்கடல்
எள்ளி அடக்குதல் ஆட்சிக்கு இறுதி.

அ. சா. வழக்குரைஞர்:

துடுக்குத் தனமாய்ப் பற்பல சாற்றினாய்!
அடக்குநின் பேச்சை; அறியா தவன்நீ
உரிமை உரிமை என்றே உரைத்தாய்!
உரிமை பெரிதா வாழ்க்கை உயர்ந்ததா?

வேல்மார்பன்:

உரிமை மணக்கும் வாழ்வே உயர்ந்தது!

அ. சா. வழக்குரைஞர்:

உலகமும் அதனுள் உள்ள பொருள்களும்
உலக மக்கள் யாவர்க்கும் உரிய.
அப்படி இருக்கையில் அறியார் சிலரோ(டு)
எப்படி என்நிலம் இதுவெனக் கேட்கலாம்?

வேல்மார்பன்:

உரிமை என்பது நீங்கள் உரைக்கும்
உலகமும் அன்று; பொருள்களும் அல்ல!
அவையெலாம் உடைமை! அவையொரு வற்கென்
றெவரும் விளம்பார்! இனுஞ்சில நாட்களில்
''நாடும், நிலமும், நகரும், ஊரும்
வீடும், வித்தும், அவைதரு விளைவும்

எல்லாப் பொருள்களும் எல்லாப் பயன்களும்
எல்லார்க்கு மாகும்'' எனும்பொது உடைமை
வந்தே தீரும் வகையினை அறிவேன்;
முந்திடும் அந்நாள் விரைவினில் முகிழ்க்க
என்றால் முடிந்த தொண்டினை ஏற்பேன்;
இந்நாள் உரைக்கும் உரிமையிஃ தில்லை.
புறத்தே ஆகும் பொருள்களே உடைமை!
அறத்த தாகி, அகத்துள உணர்வையும்,
அவ்வுணர் வாலே அலரும் கருத்தையும்,
இவ்வுல கோர்க்கிங் கியம்பிடும் உரிமை
ஒன்றே நானிங் குரைக்க வருவது.
இன்றிவ் வுரிமைக் கிழுக்கு வந்தது.

அ. சா. வழக்குரைஞர்:

என்ன இழுக்கு வந்தது இயம்பு?

வேல்மார்பன்:

செந்தமிழ் வழங்கும் சிறுவர் வாய்களில்
இந்தியைப் புகுத்தி விழுங்கெனல் இழுக்கே.

வழக்குரைஞர்:

புதுமொழி ஒன்றைப் படிப்பது தவறு?

வேல்மார்பன்:

புதுமொழித் தேவை என்னஇப் பொழுது?

வழக்குரைஞர்:

பிறன்வந் தாண்ட பெரும்'பா ரதத்தை'
அறவழி நின்றே மீண்டும் அடைந்தோம்!
பற்றிக் கிடந்த பகையினைப் போக்கி
ஒற்றுமை நிலவிட ஒருமொழி வேண்டும்!

வேல்மார்பன்:

ஒற்றுமை இலாமலா ஒன்றென நின்று
கற்றுத் தேர்ந்த கவின்பெறு மாங்கில
ஆட்சியைத் தொலைத்தோம்; அவர்களால் வந்த
கேடுகள் என்ன? நன்மையைக் கிளத்தின்
ஏடுகள் போதா?; இருப்பினும் 'உரிமை'
ஒன்றினால் அல்லவா ஒருங்கிணைந் தெதிர்த்தோம்!
இன்றைக்கு மட்டும் என்ன வந்தது?
வடக்கில் சீனன் வாலை ஆட்டினான்.

இடக்குச் செய்தனன் இடர்பாக் கித்தான்;
கிடக்கு தென்றே சும்மா கிடந்தமா?
அடக்குதற் கனைவரும் அலைந்தெழ வில்லையா?
ஆனால் நீங்களோ,
ஒற்றுமை ஒற்றுமை என்றே இந்தியைக்
கற்றுக் கொடுப்பீர் கட்டாய மாக!
கற்றுக் கொடுக்க முன்வந் தீரே,
கற்றுக் கொள்ள நாங்கள்முன் வந்தமா?

வழக்குரைஞர்:

மொழிவெறி கொண்டு, முன்னே றுதற்கு
வழியறி யாமல் இருந்திடும் நீங்கள்
அறியா வகையால் அதனைக் கற்கிலீர்!
வறியராய் மூடராய் வாழவே விரும்பினீர்!

வேல்மார்பன்:

இந்தி படித்தால் ஏழெட் டாயிரம்
வந்து குவிந்து வறுமையைப் போக்குமா?
இந்தியைக் கற்றால் இதுவரை நுழையா
மந்தை அறிவு மண்டையில் ஏறுமா?
செந்தமிழ்ப் படித்தால் சீர்குலை வோமா?
பைந்தமிழ் கற்பதால் பாழாய்ப் போவமா?
இந்தி படித்தால் நிலாக்கோள் ஏறி
உந்தி வான்வழி உலாவரு வோமா?
இந்தியைப் படிக்கப் பசிஎடுக் காதா?
இந்தியை ஏற்றால் உழாமல் விளையுமா?
இந்தியைப் படிப்பதால் எம்தோள் மேலே
குந்தி எங்களைக் குதிரை யோட்டுவீர்;
வாய்ப்பூட் டேற்று வழிவழி அடிமையாய்ப்
பேய்ப்பணி செய்ய எங்களைப் பிணிக்குவீர்!
குடுமியைப் பிடித்துக் கொடுமைகள் புரிவீர்.
அடிமையாய் உங்களின் அடிதொழச் செய்வீர்
இவற்றைத் தவிர இந்தியால் விளைவதென்?
தவற்றைப் புரியும் தமிழக மக்களே!
செவிமடுக் கின்ற சிறுத்தைப் புலிகளே!
புவியில் தமிழினம் வடவரால் பொன்றிடும்!
அடிமை வாழ்க்கைக் காளா காதீர்!
விடிவே இல்லா இருளில் விழாதீர்!

வழக்குரைஞர்:

(அறமன்ற நடுவரைப் பார்த்து)

இப்பெரும் புரட்சிக் காரனை இக்கால்
தப்பவிட் டாலோ தமிழர் யாவரும்

கெட்டுக் குட்டிச் சுவராய்ப் போவர்;
எட்டுணை யும்நம் இந்திய நாட்டில்
ஒற்றுமைப் பாடோ உருப்படா திவனுல்!
சற்றும் கனிவிலாது ஐயனே, இவற்குத்
தூக்குத் தண்டம் என்றே
நாக்குக் குழறுது நவிலவேண் டுவனே!

அறமன்ற நடுவர்:

இந்திய நாட்டுக் கிரண்டகம் செய்த யிம்
மந்தியைத் தூக்கில் மாட்டுக உடனே!

வேல்மார்பன்:

அருள்,அறம், மறஞ்சேர் அருந்தமி ழகமே!
இருளில் வீழ்ந்தனே; என்றெழு வாயோ?
புகழ்செய் புலவோர் புரந்தசெந் தமிழே
இகழ்படச் சாம்பினை என்றலர் வாயோ?
பழிபடா வாழ்க்கைப் பைந்தமிழ் மகனே
இழிபடக் கிடந்தனை என்றெழு வாயோ?

(மக்கள் தீர்ப்பைக் கேட்டுக் கொதித்தெழுகின்றனர். வேல்மார்பனைக் காவலர்கள் இருவர் இழுத்துச் செல்கின்றனர். காவலர்கள்தம் கைத்தடிகள் ஆரவாரிக்கும் மக்களின் மண்டைகளைப் பிளக்கின்றன. புகைக் குண்டுகள் வீசப் பெறுகின்றன. மக்கள் சிதர்ந்தோடுகின்றனர். இந்திய உயரற மன்றத்தின்மேல் கழுகுகள் வட்டமிடுகின்றன)

அமைச்சர்களுக்கு

இந்தி எதிர்ப்பு மடல்!

தென்மொழியின் இந்தி எதிர்ப்பு மடலை அமைச்சர்கட்கு அனுப்பி விட்டீர்களா? இதுவரை அனுப்பாமலிருந்தால் இன்றே அனுப்புங்கள். ஆங்காங்குள்ள தமிழன்பர்களும் தமிழ் மன்றங்களும் கழகங்களும் இவ்வரிய தமிழ்த் தொண்டில் ஈடுபட வேண்டுகின்றோம். (-ஆர்)

ஆந்தைப் பாட்டு.

ம. இலெ. தங்கப்பா.

ஆந்தை கதைமுடித்தே ஆவி கலக்குற்றுச்
சார்ந்த மரக்கிளைமேல் சாய்ந்ததுவால்; யானுமங்கு

வெள்ளக் கடும்பெருக்கில் வீழ்ந்து சுழல்பட்டுப்
பள்ளத் திழுப்புண்டு பாறை இடைமோதி

ஆற்றில் முழுகுவர்போல் ஆழ்ந்த துயர்ப்பெருக்குள்
தேற்றமின்றி மூழ்கித் திணறுற்றேன்; உட்குமைந்தேன்.

அன்னை இயற்கையே, ஆய்வடங்காச் செம்பொருளே,
மன்னும் அளப்பரிய வான்வெளியை நீபடைத்தாய்;

குன்றம் படைத்தாய்நீ; கோலப் பொழில்படைத்தாய்;
தென்றல் படைத்தாய்; தெளிநீர் படைத்தளித்தாய்;

செங்கதிரை நீபடைத்தாய்; திங்களினை ஊக்கிநின்றாய்;
மங்கலிலாப் பொற்குமிழ்போல் வானத் துடுப்படைத்தாய்;

மின்னல் படைத்தாய் மிளிரும் நிறம்படைத்தாய்
பொன்னார் மழைவில்லைப் பொற்பொழுக ஆங்குவைத்தாய்;

தண்ணார் அருவி தடஞ்சுனைகள் ஆக்கினாய்;
பண்ணார் ஒலிபடைத்தாய்; பாட்டில் நயம்படைத்தாய்;

பாரை மடிஏந்திப் பாடுங் கடல்படைத்தாய்;
நீருள்ளே மீன்படைத்தாய்; நீணிலமேற் பல்வகையாம்

புன்னை விலங்கைப் பொலிவுபெற நீபடைத்தாய்;
அள்ளக் குறையா அழகை அவைக்களித்தாய்;

பண்டே உளம்படைத்தாய்; பண்பு பலபடைத்தாய்;
தண்டேன் ஒழுகும் தமிழாம் மொழிபடைத்தாய்.

இத்தனையும் துய்க்க எழுமெங்கள் நெஞ்சினிலே
தத்திவரும் தேனாய்த் தனிக்களிப்பை ஊற்றுமுயர்

இன்பம் படைத்தாய்நீ; ஏத்துகின்றேன்; என்றாலும்
அன்பின் பெருந்தாயே, உன்றன் பொருளறியேன்!

யாவும் படைத்தும்நீ இவ்வின்பம் துய்க்காமல்
மேவும் உயிர்களெலாம் விம்முற் றலைப்புறவே

துன்பத்தை ஏன்படைத்தாய்? துன்பத்தை ஏன்படைத்தாய்?
இன்பமெனக் கொள்வதெலாம் ஏயுந் துயர்க்கடலுள்

சிந்துதுளிப் பால்போல் சிறப்பற் றொழிவதன்றோ!
இந்த உலகத் திருந்துயரம் சொல்லெளிதோ?

நோயால் குலைகின்றார்; நோகின்றார் வெம்பசியால்;
தீயால், புனலாலே சீறும் கடும்புயலால்

நாடதிரும் பேரிடியால், மண்ணின் நடுக்கத்தால்,
கோடும் கடல்கோளால் கொன்னே வருந்துகின்றார்;

ஐயோ மருந்துமனை ஆங்கதன்பாற் சென்றுநின்றால்
"குய்யோ முறையோ!" எனுங்குரலுக் கெல்லையுண்டா?

காவிழந்தார், கையிழந்தார், கண்ணின் ஒளியிழந்தார்,
தோலழுகி நாறுந் தொழுநோயர், மூக்கறையர்,

மண்டை உடைபட்டோர், மாரெலும்பு பாழ்பட்டோர்
தொண்டை அறுப்புண்டு துன்புறுவோர் எத்தனையோர்!

'சாதி'யும் நாடுஞ் சமயமும் தாம்வளர்க்கும்
தீதுக் களவோ? தெளிவில்லாக் கொள்கையால்

கொண்டோன் மனையாள்மேற் கொள்ளும் மனக்கசப்பும்,
பெண்டிர்தம் காதற் பிழையால் மறுகுவதும்.

தந்தை மகற்கிடையே தாமும் பலவழக்கும்,
மந்திரமென் றேமாந்து செல்வம் இழப்பதுவும்,

மன்பதை வாழ்விலுறும் மாத்துயர்கள் அல்லவோ?
துன்பம் வறுமையால் தோன்றும் வகைகேளீர்:

காயும் கடும்பகலில் காட்டில் உழைத்துழைத்து
நோயுறுமோர் ஏழை; நுதல்வெயர்வை கண்மறைப்பச்

சோர்ந்து சுமைதூக்குஞ் சூல்முதிர்ந்த பெண்ணொருத்தி;
ஆர்ந்த மலைமேல் விறகுக் கலையுங்கால்

வேங்கைவாய்ப் பட்டோன்; வெதுப்பும் பசிதணிக்கத்
தீங்குதரும் கான்கிழங்கைத் தின்று குடல்எரிவோன்;

கல்லுடைத்து, நாவறண்டு கண்மூடும் வன்முதியன்;
நெல்லறுத்தும் பட்டினியால் நின்றரற்றும் ஓரரிவை;

கோவில்தனைக் கட்டுங்கால் குப்புறவே வீழ்ந்தமையால்
ஆவி துடித்திறப்பான்; அன்னான் மனைமக்கள்

நட்ட நடுத்தெருவில் நாய்போற் படுங்கொடுமை;
பட்டகடன் தொல்லையாற் பாழ்ங்கிணற்றில் வீழ்ந்திறப்போன்;

பொல்லாப் பசித்துயரால் பொற்பிழந்து கற்பிழந்து
பல்லார்க்கும் பெண்டாகிப் பாங்கழியும் மெல்லியலாள்;
எல்லாம் உலகிலேன்? யாதிவற்றின் காரணந்தான்?
பொல்லாதார் மாந்தரெனில் புள்ளும் விலங்கினமும்
நீங்காத் துயருழந்து நெஞ்சழிதல் ஏனேயோ?
வேங்கைவாய்ப் பட்டு விதிர்ந்தழியும் மென்பிணைமான்;
காகத்தாற் கொத்துண்டு கத்தும் குயிற்குஞ்சு;
மாகத்தே வல்லூற்றின் வாள்உகிரில் வெண்புறவம்;
பாம்புதன் குஞ்சுண்ணப் பார்த்துத் துடிதுடித்துச்
சாம்பும் குருவியதன் சாற்றொணா மாத்துயரம்;
இத்துயரம் எல்லாம் இயற்கையே ஏன்படைத்தாய்?
அத்தனையும் இன்பாய் அமைந்திருத்தல் சாலாதா?
என்று மனம்துடிப்ப என்னெதிரில் புள்நோக்கிக்
கன்றிநின்றேன்; வீழ்ந்ததுவென் கண்ணீர் புனல்போலும்.
''அன்பீர் கவலற்க; அஃதெல்லாம் எண்ணாதீர்!
துன்ப உடலழிந்து தூயவுடல் பெற்றுவிட்டேன்;
அந்நாள் கிளர்ந்த அகத்தின் உணர்வுமட்டும்
இந்நாள் உளதல்லால் வேறு துயரில்லை.

மாந்தர் தொடர்பறுத்து மற்றை உயிர்களிடைப்
போந்துநான் வாழ்வதனால் புன்மைஇனி எற்கில்லை!
பொங்கு பகற்பொழுதில் பொந்துள் ஒடுங்கிப்பின்
கங்குலிலே தோன்றுகின்றேன்; காளையீர், ஆனாலும்
மக்கள் நிலையறியும் வேட்கையால் மண்டிருளில்
புக்கு, நகர்,நாடு போய்க்கண்டு மீள்வேன்யான்.
கூரையிலே வீற்றிருப்பேன்; சாளரத்தில் குந்திடுவேன்;
காரிருளின் தீமையெலாம் கண்டு புழுங்கிடுவேன்;
எத்துணைத் தீமைக் கிடமளிப்ப திவ்விருள்தான்!
அத்துணையும் கூற அடங்குமோ? அம்மம்ம!
பொல்லாங்கை நீக்கிப் புகழ்பெருக்கும் எத்தனையோ
நல்லவர்தம் வாழ்வையெலாம் நள்ளிரவிற் கண்டக்கால்
ஐயையோ வெட்கம்! அறையப் பெருநடுக்கம்;
பொய்யன்று நண்பீர்; புகுந்தால் தெரிவீர்நீர்:
பற்றறுத்த சைவப் பழங்களெலாம் நள்ளிரவில்
பொற்றொடியார் காமப் புதுநறவம் துய்த்தலையும்,
சட்டமன்றில் நாட்டுநலம் சாற்றியபே ராயத்தான்
பட்டியிலே கள்ளப் பதுக்கல் நடத்தலையும்,
கொள்ளை வணிகன்தன் கோணல் மறைப்பதற்காய்
அள்ளி அமைச்சன்பால் ஆயிரத்தை நீட்டலையும்,

ஆளவந்த நல்லமைச்சன் அங்குமிங்கும் பார்த்தபடி
தாளடுக்கைப் பெற்றுத் தலையாட்டிச் செல்தலையும்,
''செந்தமிழ்க்கு நான்''என்று செப்பும்பே ராசிரியன்
''இந்தி''யினை வாழ்த்தி எழுதிப் பணம்பெறலும்,
வள்ளுவத்தின் மாண்புரைத்து வாய்கிழிந்த ஓர்புலவன்
நள்ளிரவில் மாற்றான் மனைதோள் நயப்பதையும்,
''கொண்டான் உயி''ரென்ற கோதை அயலானின்
திண்டோள் மருவத் தெருக்கதவை மூடலையும்,
மாசில் நறுமேனி மாணுளர்போல் பொய்மகளிர்
காசுக் குடல்விற்கக் கையுந்திற் செல்தலையும்
காவலர்கள் நள்ளிரவிற் கள்ளமது‌க் காய்ச்சலையும்,
மேவும் இறையன்பர் வீழ்ந்து பருகலையும்,
காதல் தவறுடையாள் கைமகவைக் கோறலையும்,
பாதித் தலைக்குடுமிப் பார்ப்பான்ஓர் கோவிலிலே
தாழ்வடத்துப் பொன்அவிழ்த்துத் தன்மடிக்கு மாற்றிவிட்டுப்
பாழ்படுமோர் போலியினை ஆண்டவற்குப் பூட்டலையும்,
அஞ்சாப் பெருந்திருட்டும், ஆர்வக் கவரூட்டும்,
விஞ்சும் கொலைத்தொழிலும், வெய்ய பழிதீர்ப்பும்
கண்ணெதிரில் நான்கண்டேன்; காணாத எத்தனையோ?
எண்ண நடுக்கமிகும்! என்னே உலகிதுகாண்
காட்சிக் கொடுமையெலாம் கண்டு பொறுக்காமல்
வீட்டருகே பன்முறைநான் வீறிட்டுக் கத்திடுவேன்;
உண்மை உணரா உலகத்தார் சீறுகின்றார்!
உண்மை உணர்தீயார் உற்றென்னைத் தாக்குகின்றார்!
இப்பொழுதோ, நன்காடே என்றன் உறைவகமால்!
பொற்பில்லா மாந்தர்பாற் போக்கொழிந்தேன்; என்னுணர்வின்
துன்பமும் நானும் துணையாக, மற்றொருவர்
அன்பின்றி வாழ்கின்றேன்; அன்புளத்தீர் உம்மைநான்
கண்டபின்பே வாழ்விற் கனிவும் இருத்தலினைக்
கண்டேன்; மகிழ்கின்றேன்; கண்பனிநீர் சோர்கின்றேன்''
புள்ளிதனைக் கூறுகையில் பொங்கிற்றே அன்புணர்வாம்
வெள்ளம் இரண்டுளத்தும்! விண்புள் தொடர்ந்திடுமால்;
''அன்பார்ந்த நல்லுணர்வீர், ஆயிரநாள் நானுடையேன்:
பண்பழிந்த மாந்தப் பதர்வாழும் இவ்வுலகை
மாற்றிப் புதியதாய் மாண்புமிகு நல்லுலகம்
தோற்றுவித்தால் அல்லாமல் தொல்மாந்தர் உய்திபெறார்.
ஆற்றத் திறமிலையே! ஆருள்ளார் இச்செயற்கென்(று)
ஏற்றபடி ஆய்ந்துவந்தேன்; இன்றும்மைக் கண்டறிந்தேன்.

புத்துலகம் தான்சமைக்கப் போர்புரிவீர் ஐயன்மீர்;
நத்துகிலார் மாந்தரென நையாதீர்; நில்லாதீர்;
சீறிக் கடல்ஞாலம் சேர்ந்தெதிர்த்து வந்தாலும்
மாறுதீர், நம்முயிராம் மாண்பின் குறிக்கோளைக்
கூறி முழக்கிடுவீர்; கூவி முழக்கிடுவீர்
வீறுமிகு மெய்நெஞ்சம் வெல்லா தடங்கிடுமோ?
இன்று தவறிடினும் என்றேனும் இவ்வுலகம்
நன்றுணர்ந்தே தீரும்; நடுவில் தலைமுறைகள்
சென்றாலும் செல்லும் சிதையற்க; யானிதனைக்
கன்றுமுளம் தேர்ந்து கழறிவிட்டுச் செல்கின்றேன்.
எந்தச் சுரமோ? இருட்குகையோ உள்ளடங்கும்
நெஞ்சச் சிறையோ நிலையறியேன்; நீரேனும்
நன்னிலைபெற் றுய்க; நலியாப் பணிபுரிக''
இன்னபடி சொல்லி எழுந்ததுபுள்; நான்பதறி,
''நில்லாய் வியன்புள்ளே, வன்சொல் உரைத்தாய்நீ
செல்லும் கருத்துச் சிறிதேனும் கொண்டதென்ன?
உன்னைநான் கண்டதுமே உள்ளப் பெருங்கேண்மை
முன்னிவரக் கண்டேன்; முழுதாய் உனைவிழைந்தேன்.''
என்று பரிந்துரைத்தேன்; ஏக்கமுற்று நின்றுவிட்டேன்;
துன்றுமந்தப் புள்வந்தென் தோளில் அமர்ந்ததுவே.
எண்ணுறுபே ரின்பத்தில் என்றன் தலைசுழலக்
கண்ணை உறவிழித்தேன்; காட்சி மறைந்ததுவே
மண்ணிற் படுத்திருந்தேன்; மற்றென்னைச் சூழ்ந்துகுளிர்
வெண்ணிலவிற் கல்லறையும் வெங்காடும், கண்ணெதிரில்
நெல்லி மரமும் நிலையான காட்சிதர
எல்லாம் உணர்ந்திட்டேன்; யாவும் கனவன்றோ!
ஆந்தையொன்றை நெல்லி அருங்கிளையிற் கண்டபடி
நேர்ந்த பலநினைவில் நெஞ்சிழத்து நான்துயில,
அந்தத் துயிலில் அரிய கனவிதுதான்
வந்த வகையறிந்தேன்; வாழ்வுண்மை அக்கனவில்
கண்முன் தெளிந்துபடக் கண்டேன்; அகக்காட்சி
எண்ணம் புதுக்கிற்றே! என்றென்று மிக்கனவை
நான்மறத்தல் ஒண்ணாது நானிலத்தீர், ஆதலிற்றான்
ஊண்மறந்து பாடுகின்றேன்; ஒல்குலகம் இக்கதையால்
கூன்நிமிர்ந்தால், சற்றே குருட்டு விழிதிறந்தால்,
யான்மறப்பேன் என்றன் துயர்.

(முற்றும்.)

தமிழுக்கு அழிவுக் காலம்....?

புலவர். தி. நா. அறிவுஒளி

— * —

அறிஞர்களும் முட்டாள்கள் ஆவார்கள் எப்பொழுது?

தன்னல வெறியும் தற்குறிப் பித்தும் காசாவலும் தகுதிப் பித்தும் தலைக்கு மேல் ஏறும் பொழுது. அதிலும் பட்டம், த கு தி, பொருள் ஆகியவை மீது 'பேராவல்' மிகுந்தால், உண்மை—ஒழுக்கம் – அறம் – அறிவு எதையும் மதிக்கமாட்டார்கள் தன்னலக் கயவர்கள்! அரசியலில் ஈடுபட்டவர்களுக்குத் தன்னலக் காய்ச்சல் மிகுந்தால், பொதுமக்கள் நலத்தைப் படுகொலை செய்து புதைக்க அவர்கள் கொஞ்சமும் தயங் கவோ அஞ்சவோ மாட்டார்கள். தன்னல வெறியும் தகுதிப் பித்தும் மிகுந்த அரசியற் கயவர்கள் தாய்மொழிப் பற்றையும், தன்மானத்தையும் தன்மதிப்பையும் கூடச் சந்தைப் பொருளாய் விலை பேசி வி ற் க த் தொடங்கி வி டு வ தை க் காண்கிறோம். இத்தகையார் அமைச்சர் தகுதியில் அமர்ந்து ஆரவார ஆர்ப்பாட்ட உலா வரலாம்; செல்வம், செல் வாக்கில் திளைத்து, வயிறும் மூளையும் காய்ந்து கொண்டிருக்கும் பொது மக்கள் மந்தையை ஏவல் கொண்டு செருக்கும் போலிக் கட்சியினராய் இருக்கலாம்! ஆயின், இத்தகு தன்னலப் புலிகளின் பொய்யுரைகளை நாட்டினர் ஏற்றால், நாடும் மொழியும் குட்டிச்சுவராய்ப் போக வேண்டி யது தான்!

'தாய்மொழி வேறு; தாய்மொழி வரிவடிவம் வேறு' எனப் பிதற்றும் மடமை மொழியியலோ, இலக்கணமோ அறியாத குறையறிவையே காட்டும். 'தாய்மொழி வரிவடிவம்' என ஒன்றில்லை என உளறும் சூழ்ச்சி மிக்கக் கயமைக்கு இணையான கயமை உலகில் எதுவுமிருக் காது. மொழி பற்றிக் கருத்து வெளியிட அரசியலாளர்கள் மூளையும் 'கொடுமை சான்ற கயமை' என்று மறையுமோ அன்று தான் மொ ழி வளரும்; நாடு உருப்படும். அதிலும் பொறுப்பு மிக்கவர்கள் ஆய்வறி வின்றி, பொறுமையின்றி, மொழித் துறைபற்றிக் கண்டபடி பிதற்றுவது அவர்கள் தகுதிக் கேற்ற செயலன்று. ஒவ்வொரு தாய்மொழிக்கும் ஒவ் வொரு 'தாய் வரிவடிவம்' இருப்பதைக் கல்லாப் பேதையும் தெள்ளி தின் அறிவான். (இந்திக்கு அவ்வாறு தனக்கெனத் தனித்த வரிவடிவு இல்லாமல், வேற்றுமொழி உருவை இரந்து பெற்றிருக்கலாம்; அது புன்மொழியாதலால்!).

தன்னேரிலா உயர்தனிச் சீர்மை சால் செந்தமிழ் மொழி தனக் கெனத் தனிச் சிறப்பும் அழகும் இனிமையும் எளிமையும் அருமையும்

உயிரும் ஆற்றலும் தெளிவும் நுட்பநுட்பமும் சான்ற ஓவிய எழுத்துகளை 'வரிவடிவாகப்' பெற்றுளது. இதை யாரும் மறக்கக் கூடாது. மொழி யென்று கூறினாலே, அஃது 'ஒலிவடிவையும் எழுத்து வடிவையும்' குறிக்கும்.

ஒலிவடிவம் > ஒலிஎழுத்து.

வரிவடிவம் > வரியெழுத்து – இவை மொழியில் 'இருமை யொருமை' அமைப்புடையவை. இதனை இலக்கண அறிஞர் அறிவர்.

ஓசையின் உருவமே எழுத்து.

எழுத்து வேறு; மொழி வேறு அன்று.

ஒலியும் எழுத்தும் உயிரும் உடம்பும் ஆகும்.

ஒவ்வொரு தாய்மொழிக்கும் தனி ஒலிவடிவமும், தனி வரிவடிவமும் அவற்றுக்கே உரிய இயல்பு, தன்மைகளோடும் மரபமைதியோடும், தனித் தகுதிப் பண்புகளோடும், தனியமைப்போடும் உண்டு. சிறப்பாக இத்தனையும் வண்டமிழ்க்கு உண்டு. தமிழ், உயர்தனிச் செம்மொழி; இற்றைக்கு ஐயாயிரம் யாண்டுகட்கு முற்பட்டதென அறிஞர்கள் கூறும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியக் காலந் தொட்டு ஒரு நிகரான வரிவடிவ–ஒலிவடிவ அமைப்போடு வாழ்ந்து, வளர்ந்து வரும் செம்மொழி தன்னேரில்லாத் தமிழ் மொழியாம். தமிழின் உருவம், நடை, ஒலியமைதி, அமைப்பு, மொழித்திறன், சொல்லாட்சி மரபு, கிளவியாக்கம், சொற்புணர்ச்சி முறை, சொல்லுருபுகளின் நுட்பநுட்ப அமைப்பு, பொருளுணர்த்து மாற்றல், வேர்ச்சொல்வளம், எழுத்து செயற்படு மரபு முதலியவை பற்றித் தொல்காப்பியந் தொட்டு இன்று மலரும் இலக்கண மொட்டு வரை திட்டவட்டமான இலக்கண அமைதி, தமிழுக்கே உரிய தனித் தன்மையோடு வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்மையைத் தமிழிலக்கண–இலக்கியப் புலமையும் ஆராய்ச்சியும் உடைய அறிஞர்கள் நன்கறிவர். இவற்றை உணராமல் தமிழ்பற்றிக் கண்டபடி எழுதுவதும் பேசுவதும் அவர்கள் தம் 'அரசியல் மூளைக் கொதிப்பையும், காய்ச்சலையும் மட்டுமே காட்டும்!

தமிழ் மொழியையும் தமிழ் எழுத்துருவையும் அழிக்கப்பெரு முயற்சி நடக்கிறது சூழ்ச்சியோடும் இரண்டகத்தோடும்! இம்முயற்சி மறைமுகமாகவும் நேரிடையாகவும் திட்டமிடப்பட்டுச் சிறிது சிறிதாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இவ் வெறி முயற்சியைக் காணும் பொழுது, தமிழ் வருங்காலத்தில் 'ஒரு மொழியாக' வேணும் உலகில் வாழுமோ என்ற அச்சமும் ஐயமும் ஆற்றுமையும் உண்டாகிறது. தமிழரில் பலர் இது குறித்து அணுவளவும் கருத்தின்றிப் பேடியராய்ப்

பேதையராய் ஏமாளிகளாய்க் கும்பிக்குக் கஞ்சியூற்றி வெம்பித் திரிகின்றனர்!

எதிர்வீட்டுக்காரனிடம் ஒருவன் சென்று, "ஐயா, நீயே மனம் விரும்பி உன் மனைவியைக் கொலை செய்து விடு. இந்த வகையில் இவ்வூரிலுள்ள மற்ற குடும்பத்தார்க்கும் நீ வழிகாட்டியாக, முன்னோடியாகப் புகழ் பெறலாம். அதற்கு மாறாக என் மனைவியை உனக்கும் மனைவியாக்கிக் கொள். நாமிருவரும் பொதுவாக அவளை ஆக்கிக் கொள்ளலாம்!" எனக் கூறினால் எதிர் வீட்டுக்காரன் என்ன நினைப்பான்? என்ன செய்வான்? என்ன நடக்கும்? —இதே நிலையில் தமிழர்க்கு ஓர் அருங் கருத்து அறிவுறுத்தப்படுகிறது. 'தமிழர், தாமாகவே விரும்பி முன்வந்து தமிழின் வரிவடிவத்தை அழித்துக் கொள்ளல் வேண்டும். தமிழர் தாமே மனமுவந்து தேவ நாகரி எழுத்துருவைத் தம் மொழிக்கு வரிவடிவாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து, ஏனைய வட்டார மொழியாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக - முன்னோடியாகத் தமிழர் விளங்கவேண்டும்!" இவ்வாறு வேண்டுகோள் தமிழைத் தாய் மொழியாகப் பெற்றில்லாத வேற்று மொழியினரால் அறிவுறுத்தப்படுகிறது. இந்த அறிவுரையைத் தமிழர் ஏற்கிறார்களா? அன்றி எதிர்க்கிறார்களா? இது நேரிய சீரிய வேண்டுகோள் தானா? அறத்தின் வழிப்பட்ட அறிவுரைதானா? நல்ல உள்ளத்தோடு கூடிய ஆய்வுரைதானா? முறையானதா? நெறியானதா?..... எனத் தமிழர் எண்ணிப் பார்ப்பாராக!

தமிழ் மண்ணிலே நின்று கொண்டு, தமிழ் மக்களை நோக்கித் தமிழை, தமிழ் எழுத்துருவை அழித்துக் கொலை செய்து கொள்ளுங்கள் என அறிவுரை கூறும் ஆற்றலும் நெஞ்சத் துணிவும் உண்மையில் வியக்கத்தக்கதல்லவா? ஆம். இதையும் கேட்டுத் தலையாட்டும் 'ஆட்டு மதியர்' களைப் பற்றித்தான் நமக்கு நனி மிகப் பெருவியப்பு! இவர்கள் உடம்பில் செங்குருதி ஓடுகிறதா? தமிழர்களில் எத்தனை 'வீடணர்கள்' இருக்கிறார்கள் என்று கணக்கிட நல்ல வாய்ப்பு வாய்த்திருக்கிறது. பொது வரிவடிவத் திட்டத்தை முளையிலேயே அழிக்க வேண்டும். 'இளைதாக முள்மரம் கொல்க!' என அன்றே வள்ளுவத் தலைவர் ஆணையிட்டிருக்கிறார். தமிழர்களே! என்ன செய்யப் போகிறீர்கள்?

( )

எழுதுவார் கவனிக்க.

- அறிவியல், பொருளியல், குமுகவியல், வரலாறு பற்றிய கட்டுரைகளை எழுதி அனுப்புங்கள்.
- இயற்கை, குமுகாயச் சீர்திருத்தம், மொழி, நாட்டுணர்வு, அறிவியல் பற்றிய பாடல்களைப் பெரிதும் வரவேற்கின்றோம்.

தொடர் நாடகம். தொடர்ச்சி-2.

போர் மறவனும் காதலும்.

சியார்சு பெர்னர்டு சா.

தமிழில் 'வழுதி'

காட்சி. 1.

1885-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் பிற்பகுதி. இரவு நேரம் பல்கேரிய நாட்டில் திராகோமன் கணவாயின் அண்மை யிலுள்ள சிறிய நகரமொன்றில் நங்கை யொருத்தியின் (மேல் மாடிப்) படுக்கை அறை. தட்டொட்டி (Balcony)யைச் சார்ந்த பலகணி ஒன்று திறந்திருக்கின்றது. அதனூடே பால்கன் மலை யின் கொடுமுடி ஒன்று விண்மீன் ஒளியில், பனிபடர்ந்து வெள்ளை வெளேரென மிக அழகுடன் பளிச்சிடுகின்றது. மலை தொலைவில் இருப்பினும் மிக அண்மையிலிருப்பதுபோல் காணப் படுகின்றது. அறையின் உட்புறத்தை நோக்குவோம். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வேறெங்கும் காணமுடியாத புதுமையான தோற்றத்தை இங்குக் காண்கின்றோம். அறையின் ஒரு பாதி உயர்வான பல்கேரிய முறைப்படி ஒப்பனை செய்யப் பெற்றுள் ளது. மற்றொரு பாதியோ மலிவான வியன்னா முறைப்படி காட்சி யளிக்கின்றது. அறையின் இடது மூலையின் குறுக்கே செல்லும் சுவரின் அருகில் கட்டில் ஒன்று கிடக்கின்றது. அதன் நேர் மேலாக மரத்தாலாகிய இறைமாடம் நீல வண்ணமும் பொன் வண்ணமும் பூசப்பெற்றது. மாடத்தினுள்ளே வெண்மருப்பா லியன்ற கிறித்து பெருமானின் படிமம். அதனெதிரில் மெல்லிய சங்கிலியின் முனையில் சிறியதோர் இரும்புக் குண்டு தொங்கு கின்றது. அறையின் மறு புறத்தில் பலகணிக்கு எதிராகத் துருக்கிய மட்டணை (Turkish Ottoman) ஒன்று போடப்பட் டுள்ளது. படுக்கைத் திரை, பலகணித் திரைகள் தொங்கல்கள் தரை விரிப்பு போன்ற புனைவுகள் யாவும் பகட்டாகவும் கீழை நாட்டுக்குரிய வியல்பினவாயும் உள்ளன. சுவர்த் தாள்களோ வறட்சியாகவும் மேலை நாட்டுக்குரிய வியல்பினவாகவும் உள் ளன. மட்டணைக்கும் பலகணிக்கும் அருகிலுள்ள சுவரோடு ஒட்டியதாகக் கைகழுவும் தொட்டி; அருகில் வாளி; சிறிய துண்டு ஒன்று பக்கத்தில் மாட்டப் பெற்றுளது. படுக்கைக்கும் பலகணிக்கும் நடுவில்ஒப்பனை மிசைப்பலகை (Dressing Table). அது 'பைன்' மரத்தால் இயன்றது. பல்வண்ணத் துணி போர்த் துள்ளது. விலையுயர்ந்த முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று அதன்மேல் உளது. படுக்கையை ஒட்டிய சுவரில் கதவு. கதவுக்கும் படுக்கைக்கும் இடையில் இழு பேழை (Chest of

Drawers). அதுவும் பூவேலைப்பாடமைந்த உள்நாட்டுத் துணியால் மூடப்பெற்றுள்ளது. அதன்மேல் சில கதைப் பொத்தகங்களும் கோக்கட்டி நெய்த்தோய் (Chocolate cream) யடங்கிய பெட்டி ஒன்றும் சிறியதான படந்தாங்கி ஒன்றும் உள்ளன அப் படந்தாங்கியில் அழகிய படைத்தலைவன் ஒருவனின் படம் வைக்கப் பெற்றுள்ளது. அவன்றன் பெருமிதத் தோற்றமும் காந்தப் பார்வையும் படத்திலுங்கூட நன்கு புலப்படுகின்றன இழுபேழைமேல் ஒன்றும் ஒப் னை மிசைப்பலகை மேல் ஒன்றுமாக இரண்டு மெழுகுத்திரிகள் எரிந்துகொண்டிருக்கின்றன. பலகணி நன்ருகத் திறந்துள்ளது தட்டொட்டியில் ஓரிள மங்கை நிற்கின்ருள். இரவின் அழகிய காட்சியில் தோய்ந்து, தானும் தன் அழகும் இளமையும் அவ் வெல்லையற்ற பேரழகின் ஒரு பகுதி என்பதை உணர்ந்தவள்போல் மெய்ம் மறந்து நிற்கின்ருள். பனி மூடிய மலைகளை அவள் கண்கள் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. இரவுக்குரிய மெல்லாடையின் மேல் மயிர்ப் பட்டாலாகிய மேற் போர்வை (fur mantle) அணிந்துள்ளாள். விலையுயர்ந்த மேற் போர்வை அது. ஆழ்ந்த அமைதியின் நடுவில், அம் மங்கையின் அன்னை காதரின் பெட்காஃப் அம்மையார் உள்ளே நுழைகின்ருர். நாற்பதகவைக்கு மேலிருக்கும். ஆயினும் வல்லாண்மையோடுகூடிய சுறுசுறுப்பு. கன்னங்கரிய அடர்குழல்; கருங் கண்கள்; மலைநாட்டு உழவர் மகளுக்குரிய திரட்சியான, வாளிப்பான தோற்றம். ஆயினும் வியன்னுவின் புது நாகரிகப் பெருமாட்டியாக விளங்குவதில் அவ்வம்மையாருக்கு மிகநாட்டம். அதனுல் தான் எப்பொழுதும் அந் நாகரிகத்துக் கெடுத்துக் காட்டான சிற்ருடையிலேயே (Tea gown) காட்சியளிக்கின்ருர்.)

காதரின்: (நல்ல செய்தியொன்றின் பூரிப்புப் பொங்கி வழியப் பரபரப்புடன் உள்ளே நுழைகின்ருர்) இரெயினு! இரெயினு! (மகள் படுத்திருப்பாள் என்று அருகிற்சென்று பார்க்கின்ருர்.) என்ன? எங்கே போயிருப்பாள் ..? (இரெய்னு அறைக்குள் எட்டிப் பார்க்கின்ருள்) அட கடவுளே! என்னம்மா இந்தக் குளிர் காற்றில் திறந்த வெளியிலா போய் நிற்கிருய், படுத்து உறங்காமல்? சளி பிடித்துச் செத்துப் போவதற்கா? நீ உறங்கிவிட்டாய் என்றல்லவா உலூக்கா கூறினுள்!

இரெய்னு: (கனவு மயக்கத்திலிருப்பவள் போல்) நான் தான் அவளை அனுப்பிவிட்டேன். கொஞ்ச நேரம் தனியாயிருக்க விரும்பினேன். இந்த விண்மீன்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன! ஆமாம் என்ன செய்தி?

காதரின்: பெரிய செய்தி...போர் நடந்திருக்கின்றது.

இரெய்னு: (கண்கள் வியப்பால்விரிய) ஆ! (ஆவலுடன் தாயை நெருங்குகிருள்)

காதரின்: சிலிவனித்துசா(Slivnitza)வில் பெரும் சமர். வெற்றி நமதே! வெற்றிக்குக் காரணம் செருசியசு! (Sergius)

இரெய்னு: (மகிழ்ச்சிக் குரலில்) ஆ! (இருவரும் பேரன் போடு தழுவிக் கொள்கின்றனர்) அம்மா! (சட்டெனக் கவலை தோன்ற) அப்பா நலமா?

காதரின்: அவருக்கென்ன! அவர்தாம் செய்தி அனுப்பி வைக்கிருர். செருசியசு பெயர்தான் எங்கும் அடிபடுகின்றது. அவன் படை அணியில் இப்பொழுது அவன்தான் கடவுள்.

இரெய்னு: அப்படியா! பிறகு? பிறகு என்ன? சொல் அம்மா!... (மகிழ்வு வெறியுடன்) அம்மா, அம்மா, அம்மா! (தாயைப்பற்றி இழுத்து இருக்கையில் அமர்த்துகிருள். இருவரும் ஒருவரையொருவர் வெறியுடன் முத்தமிட்டுக்கொள்கின்றனர்.)

காதரின்: (விம்மி எழும் பேரார்வமுடன்) எவ்வளவு விழுமியது அது! உன்னுல் உய்த்துணரவே முடியாது. குதிரைப் படைத் தாக்குதல்! நினைத்துப் பார்!! எல்லாம் நம் செருசியசு! நம் உருசியப் படைத்தலைவர்களையெல்லாம் புறக்கணித்து, அவர்கள் கட்டளைக்குக் காத்திராமல், தாமே தனித் தலைமை தாங்கி அக் குதிரைப்படைத் தாக்குதலை நிகழ்த்தியிருக்கின்ருன்! அவர்களின் வேட்டெஃகப் படைகளின் நடுவில் அஞ்சாமற் பாய்ந்திருக்கிருன் எல்லாருக்கும்முன்! நினைத்துப்பார் இரெயினு! நம் பல்கேரியப் படை மறவர்கள் வாள்களும், விழிகளும்மின்ன பனியாறுபோல் முழங்கிக் கொண்டு போனதை நினைத்துப் பார்! அந்தச் செர்பியப் பயல்களும் அவர்தம் கோமாளி ஆத்திரியத் தலைவர்களும் நிறைந்த அணிகளைப் பதர்போல் ஊதிப் பறக்கடித்ததை நினைத்துப் பார்! நீ என்னவென்ருல், அத்தகைய செருசியசுடன் மண உறுதி செய்து கொள்வதற்கே ஓராண்டுக் காலம் அவனை இழுத்தடித்தாய். உன் நரம்பில் பல்கேரியக் குருதி ஒரு துளியேனும் ஓடுவது உண்மையானுல்......அவன் திரும்பி வந்ததும் நீ அவனைக் கடவுளாக வணங்க வேண்டும் தெரிகிறதா?

இரெய்னு: ஒரு பெரும் மறவர் படையே அவர் கண் அசைவுக்குக் காத்திருந்து, அவரைப் புகழ் மாலையால் அணி செய்யும்பொழுது இந்த ஏழையின் போற்றுதலுக்கு அவர் ஏன் செவி சாய்க்கப் போகின்ருர்?... இருக்கட்டும்; எனக்கு மிகவும் மகிழ்வாகவும் பெருமையாகவும் இருக்கின்றது. (எழுந்து

பரபரப்புடன் அங்குமிங்கும் நடக்கின்றாள்) அப்பாடி! கடைசியில் நம் எண்ணங்களெல்லாம் உண்மை அல்ல என்பது மெய்யாகிவிட்டது!

காதரின்: (கனிவுடன்) என்ன, எண்ணங்கள் உண்மையா?... என்னடி சொல்லுகிறாய்?

இரெய்னு: செருசியசின் பேராண்மைத்திறம், நம் நாட்டுப் பற்று, மறம் பற்றி நாம் கொண்டுள்ள உயர்ந்த கருத்துகள், சிலவேளைகளில், இவையெல்லாம் வெறுங்கனவோ என்று கூட நான் ஐயுற்றதுண்டு சேச்சே! பெண்களே நம்பிக்கை இல்லாப் பிண்டங்கள் என்பது உண்மைதான் நான் வாளை எடுத்துச் செருசியசின் அரைக்கச்சில் இறுக்கியபொழுது, அவர் எவ்வளவு பெருமிதமாகத் தோற்றமளித்தார்! அந்த நேரத்தில் தோல்வியைப் பற்றியோ, இழிவைப் பற்றியோ ஏமாற்றத்தைப் பற்றியோ எண்ணிப் பார்ப்பது கூடப் பெரும் இரண்டகம்.. ஆனால், ஆனால் (திடுமென இருக்கையில் அமர்கின்றாள்) அம்மா, அவரிடம் சொல்லமாட்டேன் என்று உறுதியளிப்பாயா?

காதரின்: என்ன செய்தி என்பதைச் சொல்லு முதலில். பிறகு கேள் உறுதியை.

இரெய்னு: சரி அவர் என்னிடம் நெருங்கி, என்விழிகளை ஊடுருவி விடைபெற்றுச் செல்கையில் என்மனதில் என்ன தோன்றியது தெரியுமா? நம்முடைய மனவுணர்வுகள் எல்லாம், நாம் பைரனையும் புட்கினையும் படித்த மயக்கத்தாலும், புகாரத்து நகரில் அப்பொழுது நடந்த இசை நாடகத்தைப் பார்த்த வெறியாலும் ஏற்பட்டவை தாமோ என்று தோன்றிற்று. நடைமுறை வாழ்க்கையில் அவற்றையெல்லாம் காண்பதே அரிது என்றே நினைத்தேன். ஏன். எனக்குத்தெரிந்தவரை அவ்வாறுஇருந்ததே இல்லை (கழிவிரக்கத்துடன்) நான் நினைத்தது மிகவும் தவறு. அவர் மறத்தில் எனக்கு நம்பிக்கையே இல்லாமலிருந்தது அம்மா. அவர்தம் மறப் பண்புகளும், மதுகையும், படையாண்மையும் எல்லாம் கண் எதிரில் போர்என்று வருங்கால் கற்பனைக் கனவாகக் கலந்து போய்விடக்கூடும் என்று நினைத்தேன். சார் மன்னர் அவையினின்று வந்திருக்கும் திறமை வாய்ந்த படைத்தலைவர்கள் முன்பு இவர் போய் வெறும் ஒளி மங்கிய உருவமாகக் காட்சியளிக்கப் போகிறார் என்ற அச்சம் என் உள்ளத்தில் இருந்தது.

காதரின்: ஒளி மங்கிய உருவம்! உனக்கு வெட்கமாக இல்லை? உருசியரைப் போலவே திறன் வாய்ந்த ஆத்திரியப்

படைத் தலைவர்களைத்தாம் செர்பியர்களும் வைத்திருந்தனர். ஆனால் இதுவரை ஒவ்வொரு போரிலும் நாமே அவர்களைப் புற முதுகு கண்டிருக்கின்றோம்... நீ இதை நினைத்துப் பார்க்கவில்லை?

இரெய்னா: (சிரிப்போடு, தாயின் மார்பிற் கொஞ்சலுடன் சாய்ந்துகொண்டு) நான் ஒரு வறட்டுக் கோழையாக இருந்து விட்டேன் இப்பொழுது...... எல்லாம் உண்மை! உண்மை! தோற்றத்துக் கேற்பவே செருசியசு பெருமிதமும் சிறப்பும் வாய்ந்தவர்! உலகின் சுவை வாழ்க்கையை நடத்திக்காட்டும் ஆடவர்க்கும், அதன் பெருமையை உணர்ந்து போற்றும் பெண் டிர்க்கும் உலகம் ஓரினிய சிறந்த இடம் என்பது உண்மையாகி விட்டது! என்ன மகிழ்ச்சி!... சொல்ல முடியா நிறைவுணர்ச்சி!

(பணிப்பெண் உலூக்கா வருகின்றாள். செருக்குமிக்க, அழகிய இளநங்கை அவள். பல்கேரிய உழவர் குடியினர் அணியும் ஆடையை அணிந்திருக்கின்றாள். மிடுக்குடன் நடந்து வருகின்றாள். இரெய்னாவிடம் அவளுக்கு உண்மையில் பணிவில்லை. துடுக்குத்தன்மை கலந்த பணிவையே அவள் காட்டுகின்றாள் காதரின் பெருமாட்டியிடம் அவட்கு அச்சம் என்றாலும், அவரிடத்திலும் இயன்ற அளவு துணிவுடன் நடந்து கொள்கிறாள்)

உலூக்கா: பலகணிகளையெல்லாம் நன்றாக இறுக்கி மூடி விடவேண்டும் அம்மா...... தெருவில் கலவரம் நிகழ்ந்தாலும் நிகழுமாம் (இரெய்னாவும் காதரினும் அஞ்சி எழுகின்றனர்) செர்பியர்களைக் கணவாயின் வழியாகத் துரத்திக் கொண்டு வரு கின்றனராம். அவர்கள் நகரத்துக்குள்ளும் ஓடி வரக்கூடும் என்கின்றனர். நம் குதிரைப் படை அவர்கள்பின் வருகிறதாம். அதோடு அவர்கள் தப்பி ஓடுவதால், நம் ஆட்களும் அவர்களை விரட்டிப் பிடிக்காமல் விடமாட்டார்கள் (உலூக்கா தட்டொட் டிக்குச் சென்று பலகணியை இழுத்துச் சார்த்திவிட்டு உள்ளே வருகின்றாள்.)

காதரின்: (பொறுப்புணர்ச்சி தூண்டப் பெற்று) கீழே எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று நான் பார்க்க வேண்டும்.

இரெய்னா: என்ன இருந்தாலும் நம் ஆட்கள் இவ்வளவு கொடுமையாக நடக்கக் கூடாது. தப்பி ஓடும் அவ் வேதிலிகளை வளைத்துக்கொண்டு கொல்வதில் என்ன பெருமை?

காதரின்: கொடுமையா! ஏனடி, அவர்கள் (பகைவர்கள்) மட்டும் உன்னைக் கண்டால் கொல்லாமல் விட்டுவிட்டுப் போய் விடுவார்களா?

கழைக்கூத்தாடி

பாவேந்தர் பாரதிதாசன்

(இப்பாடல் சென்னையினின்று முதல் முதலாக வெளிவந்த குயிலில் வந்தது. அருமையான படைப்பாதலின் அவர் நினைவாக மீண்டும் வெளியிடுகின்றோம்.)

திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்
திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்
அஃகஃக கும் பிட்றேன் அல்லா ருக்கும்
அஃகஃகஃக வரிஞ்சலா அமந் திருங்க!
மக்களெ பெத்த மகரா சருங்க,

கண்ணால் பார்த்துக் காசுபோ டுங்க,
ஒருதுட் டுங்கட் கொருவாய் வெத்லே;
எங்களுக் கதுதான் திங்கற சோறு!
மொதல்ஒரு வேலே; முழக்கடா மோளம்
திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்

என்னடா தம்பி?
ஏண்டா அண்ணு?
இதோபார் தம்பி, எலும்புக் கூடு!
சதையும் இல்லே சத்தும் இல்லே
ஆமாம் திடுதிடும் அதுக்குப் பேரென்னு?

அதன்பேர் தமிழ்நாடு!
சரிசரி திடுதிடும்!
இந்த எலும்பே எழுந்திரிக்க வைக்கிறேன்
செய்யி செய்யி பார்ப்போம் திடுதிடும்
அழிஞ்ச எலும்பே ஆட வைக்கிறேன்

(முன் பக்கத் தொடர்ச்சி)

இரெய்னு: (உலுக்காவிடம்) பலகணிகள் திறந்தே இருக்கட்டும். ஏதாவது ஓசை கேட்டால் நான் எழுந்துபோய் மூடிக்கொள்கிறேன்.

காதரின்: (ஆணைக் குரலில்)...... (வாயிலை நோக்கித் திரும்பிக் கொண்டே) இல்லை இரெய்னு, எல்லாவற்றையும் நன்றாக இருக்கி மூடிவிடல் வேண்டும். நீ உறங்கி விழுந்து திறந்து போட்டாலும் போட்டுவிடுவாய்... மூடுவிடு உலூக்கா.

உலூக்கா: சரி அம்மா. (மூடி விடுகின்றாள்.) [தொடரும்]

செஞ்சி காட்டு திடுதிடும் திடுதிடும்
ஓய்ஞ்ச நாட்லே உசுருண் டாக்றேன்;
ஆக்கிக் காட்டடா அண்ணே திடுதிடும்!
அடி மோளத்தெ! திடுதிடும் திடுதிடும்!
இந்த எலும்பெ இப்படி வைக்கிறேன்

வைச்சா உயிரா வந்திடும்? திடுதிடும்!
மருந்து செய்யனும் தெரிஞ்சுதா ஒனக்கு?
சரி செய் திடுதிடும்!
இதோபார் மாம்பழம் இதைநான் புழியறேன்
புழி புழி திடுதிடும்!

இது ரசுத்தாளி இதையும் புழியறேன்;
புழி திடும் திடுதிடும்!
பலாச்சுளை புழியறேன்;
திடுதிடும் புழி புழி;
தேனும் சேக்கறேன் பாலும் சேக்கறேன்;

எளநீர் வழுக்கே இட்டுக் கொழைக்றேன்;
இடித்த தினைமா இட்டுப் பெசையறேன்;
பொடித்த பருப்பும் போட்டுக் கலக்றேன்;
எல்லாத் தையுமே இளஞ் சூடாக்கி,
பல்லாய் நிறையப் பக்குவப் படுத்தினேன்;

ஃஆ ஃஆ அண்ணே அண்ணே!
இந்த மருந்துக் கென்ன பேரு?
உள்ளே தொட்டா உசிரில் இனிக்கும்;
தெள்ளுதமிழ் தம்பி தெள்ளுதமிழ் இதுதான்!
இந்த மருந்தே எலும்புக் கூட்டில்,

தடவுறேன் தம்பி அடி மோளத்தை!
திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்
சிரித்தது பாரடா செந்தமிழ்க் கூடு!
விரிந்தது பாரடா அழிந்தநம் நாடு;
பாடுது பாரடா பைந்தமிழ் நாடு.

முழிச்சிப் பாத்து முறுக்குது மீசையை!
எதிரி மேலே எண்ணம் கொள்ளுது;
சொத்தைக் காக்கக் கத்தியைத் தூக்குது;
தமிழில் நனைந்த தமிழ்நாடு பாத்தியா!
ஆடுது பாத்தியா அழகு நாடு!

தாயி மாரே தகப்ப மாரே
மாய மில்லே மந்திர மில்லே
கருத்து வேணும்! நம்ப
வருத்தம் நீங்கத் தேடணும் வழியே!

*

பாம்பைப் பற்றிய சில உண்மைகள்.

O பாம்புகளுக்குப் பட்டப் பகலில் கண் தெரிவதில்லை. அதனால்தான் பெரும்பாலும் அவை பகலில் யாரையும் கடிப்பதில்லை.

O பெரிய பாம்புகளைவிடக் குட்டிகளுக்கே மிகுந்த சீற்றமும், சினமும் உள்ளன. குட்டிப்பாம்பு முட்டையிலிருந்து வெளியே வந்தவுடன் படத்தை விரிக்கவும், நிமிர்த்தவும், எதிரிகளைத் தாக்கவும் நச்சு நிரம்பிய பையுடன் மிகுந்த அணியமாக உள்ளது.

O நல்ல பாம்புகளின் படங்களில் உள்ள குறி ' U ' வடிவமாகவும் 'O' வடிவமாகவும் இருக்கும். ஆனால் தென்னிந்தியாவில் உள்ள எல்லா நல்ல பாம்புகளுக்குமே 'U' வடிவக் குறிகளே உள்ளன.

O நல்ல பாம்புகளுக்கு உள்ள நச்சுப் பற்கள் பிடுங்கி எறியப்பட்டாலும் மறுமுறையும் முளைத்து விடுகின்றன.

O பாம்புக்குச் செவிகளே இல்லை. பிடாரனின் மகுடிக்கு அஃது ஆடுவது எல்லாம் மகுடியின் அசைவைக் கண்டே.

O பாம்புக்குச் செவியுணர்வு இல்லையெனினும் உடல் உணர்வு மிகுதி. தொலைவிலுள்ள ஆள் அரவங்களையும் அஃது உடனே அறிந்து கொள்ளும்.

O பாம்பு நம்மைக் கண்டு எழுந்து சீறும்பொழுது, நாம் அமைதியாக இருந்துவிட்டால், நம்மை ஒன்றும் செய்யாமல் தன் வழியே போய் விடும். நம்மால் தனக்குத் தீங்கு வரும் என்று கருதினாலொழிய அது நம்மைக் கடிப்பதில்லை.

O ஒரு பாம்பு 10 முதல் 20 முட்டைகள் வரை இடும். நாற்பத்தொன்பது முட்டைகள் வரை சில பாம்புகள் இட்டிருக்கின்றன.

O உலகம் முழுவதிலும் ஆண்டுக்கு ஏறத்தாழ நான்கு இலக்கம் பெயர்களே பாம்புகளால் கடிக்கப் பெறுகின்றனர். அவருள் நாற்பதாயிரம் பெயர்கள் இறந்துபோகின்றனர். இவருள் பெரும்பாலார் அதிர்ச்சியாலும், அச்சத்தாலுமே இறந்து போகின்றனர்.

O ஒரு பாம்பு வயிறு நிறைய இரையுண்டிருக்கும் நேரத்தில் ஒருவரைக் கடிக்குமானால், அவர்க்கு நஞ்சு ஏறுவதில்லை. ஏனெனில் அக்கால் அதனிடம் சிறிதளவு நஞ்சு கூட இராது.

O உலகில் ஏறத்தாழ இரண்டாயிரம் வகைப் பாம்புகள் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ இருநூற்றைம்பது வகைப் பாம்புகளே நச்சுப் பாம்புகள்.

O இந்தியாவில் உள்ள பாம்புகளில் ஆறு வகைகள் மட்டுமே உயிரைப் போக்கக்கூடிய நஞ்சை உடையவை.

O

சிலப்பதிகார ஆய்வு

தேமொழியுரைத்தது

விரியூர் ஞா. அந்தோனிராசு.

"கூடன் மகளிர் கோலங் கொள்ளும்
ஆடகப் பைம்பூ னருவிலை யழிப்பச்
செய்யாக் கோலமொடு வந்தீர்க் கென்மக
ளையை காணீ ரடித்தொழி லாட்டி
பொன்னிற் பொதிந்தேன் புனைபூங் கோதை
யென்னுடை னங்கையீங் கிருக்கெனத் தொழுது
மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி
யேத மில்லா விடந்தலைப் படுத்தின
ளேதக வுண்டோ நும்மக ளர்க்கினிச்
சாவக நோன்பிக ளடிக ளாதலி
னுத்தூ ணங்கையொடு நான்வழிப் படூஉ
மடிசி லாக்குதற் கமைந்தநற் கலங்க
ணெடியா தளிமி னீரெனக் கூற" (கொலைக் க.கா. ௬-௨௧)

எனவரும் அடிகட்கு, "இக்கூடல் நகரிடத்து மகளிர் கொள்ளும் ஆடகப் பைம்பூணுற் செய்த கோலமழித்தற்குச் செய்யாக் கோலமொடுவந்த உமக்கு அடித்தொழிலாட்டி இல்லை என்று கருதற் பாலீரல்லீர்; என் மகள் ஐயை காணும் அடித் தொழிலாட்டி; யான் உம்மைப் பொன் போலப் பொதிந்து கொள்வேன்; பூங்கோதையையுடைய நங்காய், இங்ஙனமாத லான், இனி ஒன்றற்குங் கவலாது இருப்பீராகவென்று சொல்லித் தொழுவதுஞ் செய்து; மாதவத் தாட்டி தீங்குள்ள நெறியில் ஒரு தீங்கு முருமற் காத்து, வருத்தம் சிறிது மில்லா விடத்தே கூட்டி னாதலான், இனி நின் கொழுநற்கு இவ்விடத்தில் மனக்கவலை யுறுதலுண்டோ வென்று; அடிகள் சாவக நோன்பிகளாதலின், நங்கையார் நாத்தூணுருடனே நீங்களும் பகற் பொழுதே யுண்ணும் அடிசில் சமைத்தற்குப் பொருந்தின நல்ல புதுக் கலங்களை விரையக் கொண்டுவந்து கொடுப்பீர்களாகவென்று சொன்னாளாக" எனப் பொருள் கூறிச் செல்வர், அடியார்க்கு நல்லார், ந. மு. வே. அவர்களும் அதனையே உடன்பாடாகக் கொண்டு உரையெழுதிச் செல்வர்.

இவ்விடத்து, இவ்விருவர் உரையும் பொருந்துவதே யெனி னும் இவ்வடிகட்கு அவர்தம் உரையினும் சிறிது மாற்றிப் பொருள் கொள்ளின் நன்கமையுமாதலின் அதனைக் காண்போம்.

மேற்கூறிய அடிகள்யாவும் மாதிரியினுலேயேகூறப்பட்டன வாக இவ்விரு உரையாசிரியர்களும் கூறியுள்ளார். ஆனல்,

'கூடன்மகளிர் கோலங் கொள்ளும்' என்பது தொடங்கி 'என்னுடன் நங்கையீங்கு இருக்கென' என்பது வரை மாதரி உரையாகவும், 'மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி' என்பது தொடங்கி 'நெடியா தளிமின் நீரென' என்பதுவரை கண்ணகியின் உரையாகவும் கொண்டு பொருள் காண்போம் அஃதாவது ''இயற்கையழகுடன் வந்த நுமக்கு, எனக்கு மகளாகிய ஐயை குற்றேவல் மகளாவாள்; பொன்னைப்போல அரிதாகப் போற்றுவேன், அழகிய பூங்கோதை யினையுடைய நங்காய்! என்னுடன் இவ்விடத்து இருப்பாயாக'' என மாதரி கூறவும்; கண்ணகி, அவளை வணங்கி, ''கவுந்தியடிகள் வழிச்சேரற்கண் உளவாம் துன்பங்களை விலக்கிக் காத்து, குற்றம் சிறிதும் இல்லா இவ்விடத்துக் கூட்டினள்; ஆதலான் நும்மகனுர்க்கு இனி இவ்விடத்து உளக்கவலையுறுதல் உண்டோ! என்று சொல்லி, அடிகள் சாவக நோன்பு உடையவராகலான் நாத்தூணுகிய நங்கையொடு பகற் பொழுதே யுண்ணும் உணவினை யாக்குதற்குப் பொருந்திய நல்ல கலன்களை நீட்டியாது நீவிர் அளிமின்'' எனக் கூறினள் என்பதாம்

இனி, இவ்வாறு பொருள் கோடற்கு ஏதுவானவற்றைச் சிறிது காண்போம். முதலாவதாக, 'என்னுடன் நங்கையீங் கிருக் கெனத் தொழுது' என்ற அடியில் வருகின்ற 'தொழுதல்' என்னும் வினை, மாதரி செய்ததாகக் கொள்வதைவிட, கண்ணகியின் செயலாகக் கொள்வது சிறப்புடைத்தாகும் அஃதியாங்ஙனமெனின், யாதொரு துணையுமற்ற அவ்வாயர் பாடியினிடத்தே, தமக்கு நல்லாயமும், காவலும், தாயும் ஆகித் தாங்கித் தமக்குப் பல்லாற்றானும் பல்லுதவிகளையும் புரிந்தவள் மாதரியாவாள். அவளின் உதவியினாலேயே கண்ணகி, நெடு நாட்களுக்குப்பின் சிறிது பொழுதேனும், இல்லறத்தில் வாழ்வாங்குத்தன் கணவனுடன் மனமிகப் பொருந்தியமையும் பேற்றைப் பெறுகின்ருள். ஆகவே, மாதரி தனக்குச் செய்த கைம்மாறு வேண்டா உதவிக்கு அவளைத் தொழுது நன்றியறிவித்தாள் கண்ணகி எனக் கொள்வது பொருந்தும்.

அடுத்து, 'நோதக வுண்டோ நும்மகனுர்க்கினி' என்பதைக் காண்போம், இதனை மாதரியின் உரையாகக் கொண்டு, அவள் 'நும்மகனுர்க்கு' என வுரைத்தது கண்ணகியின் கணவனை எனப் பொருள் கொண்டு, 'மகன்' என்பது ஆண்பாற் பெயர், நும்முடைய கணவனுக் கென்பதாயிற்று' என உரைத்து, ஒரு பெண்ணிடம் அவள் கணவனைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து 'நும்மகன்' எனக் கூறல் வழக்கு' என்பதற்கு எடுத்துக் காட்டாக,

''மினக்கிவன் மகனுத் தோன்றிய தூஉம்
மனக்கினி யார்க்குநீ மகளாய தூஉம்

பண்டும் பண்டும் பலபிறப் புளவாற்
கண்ட பிறவியே யல்ல காரிகை''

(மணி. ௨௧: ௨௯-௩௨).

எனவரும் மணிமேகலை அடிகளையும் மேற்கோளாகக் காட்டி, இவ்விடத்து 'மகன்' என்பது 'கணவன்' என்ற பொருளிலேயே வந்துள்ளது'' என உரையாசிரியர் கூறிச் செல்வர்.

'மகன்' என்பது கணவனைக் குறிக்குமிடங்கள் உளவாயினும், இவ்விடத்து, மாதரி 'நும்மகன்' எனப் பொதுப்படக் கண்ணகியின் கணவனைக் குறித்தாள் என்பதை விடுத்து, கண்ணகி மாதிரியிடத்துத் தன் கணவனை அவளின் மகனாகக் கொண்டு 'நும்மகன்' எனக்குறித்தாள் என்று கொள்ளின் சிறக்கும். அவ்வாறு கொள்ளுதற்குப் பொருந்துவன வற்றையும் காண்போம்.

''என்னுடன் நங்கையீங் கிருக்கெனத் தொழுது'' என்ற அடியில் வரும் 'நங்கை' என்ற சொல்லிற்கு விளக்கங் கூறப் புகுந்த அடியார்க்கு நல்லார் ''ஈண்டு நங்கையென்றது ஒருமை பன்மை மயக்கமெனின் அற்றன்று, நம்பீயெனப் பல்லோர் குறித்த முதனிலைப் பெயர். நங்கையென்றது புதல்வர் மனைவியரைக் கூறும் முறைப் பெயராதலின் நங்கையென்றாளென்க. 'நாத்தூணங்கையொடு' என்ப மேலும். இஃது அக்காலவழக்கு. கோவலனைத் தனக்கு மகனாகக் கருதி இங்ஙனங் கூறினாள்'' எனக் கூறியுள்ளார். மாதரி கோவலனைத் தன் மகனாகவே கொண்டாள் என்பது அடியார்க்கு நல்லார் உரையாதலின் அதனையே நாமுங்கொண்டு, கண்ணகி. 'நும் மகனார்க்கினி' எனத் தன் கணவனை மாதரியின் மகனாகக் குறித்தனள் எனப் பொருள் கொள்வதில் தவறேதுமில்லை யென்க மற்றும், அயலாரொருவரிடத்து ஒரு பெண் தன் கணவனைப்பற்றிக் கூறுமிடத்து 'நும் மகன்' எனக் குறிப்பிடும் வழக்கம் நமக்குப் புதியதன்று பண்டு முதல் நம்மிடையுள்ள முறையேயாகும்.

இனி, 'நாத்தூணங்கையொடு' என்றதை அடியார்க்கு நல்லாரும், ந. மு. வே. அவர்களும் நாத்தூண் என்பது ஐயை என்றும், நங்கை என்பது கண்ணகி என்றும் பொருள் கொள்வர். (அவர்கள் அவ்வாறு கொண்டது சரியே ஏனெனில், அடியார்க்கு நல்லார் நங்கை என்ற சொல்லுக்கு எழுதியுள்ள விளக்கவுரையை முன்னரே கண்டுள்ளோம்). ஆயின், அரும்பதவுரையாசிரியர் நங்கை என்பது பெண்களுள் சிறந்தோரைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகக் கொண்டு 'நாத்தூணங்கை' என்றதற்கு-மாதரி மகள் ஐயை எனப் பொருள் கொண்டுள்ளார். ஆதலான் இவ்விடத்து நாமும் நாத்தூணங்கையொடு என்பதற்கு, நாத்தூண் நங்கையாகிய ஐயையொடு எனக் கண்ணகி

கூறிய கூற்றுகக் கொள்வது பிழையன்று. அவ்வாறு பொருள் கொள்ளின், முன்னர் கண்ணகி கூறியதாகக் கூறப்பட்ட 'நும் மகளுர்க்கினி' என்ற சொல் கோவலனை மாதரியின் மகளுகக் குறித்ததற்கும். இங்கு 'நாத்தூணங்கை' என்றது ஐயையை, கோவலனின் உடன் பிறந்தாளாகக் குறித்தற்கும் பொருந்துவது விளங்கும்.

அடுத்து, 'அமுதமுன்க அடிகளிங்கு' எனக் கண்ணகி கூற்ருகப் பின்னே வருவதனுல் இவ்விடத்துச் 'சாவக நோன்பிக ளடிக ளாதலின்' எனக் கண்ணகி கூறியதாகக் கொள்வதினும் பிழையேதுமின்று.

இறுதியாக, அடைக்கலம் பெற்ற மாதரி, நறுமலர்க் கோதையை நாணீராட்டிப் பல்லாற்ருனும் புகழ்ந்து ஆங்கு இருக்கச் செய்கின்ருள். தன் கணவன் முன்னுலேயே தன்னை ஆயர்குலத்தாய் ஓம்பினமையைக் கண்ட கண்ணகி, தான் தன் கணவனுக்குப் பணிபுரிய வேண்டியதை உணர்ந்தாளாதலின் அடிசிலாக்குதற் கமைந்த நற்கலங்கள் நெடியா தளிமின் நீரென மொழிந்தாள். இவ்விடத்துத் தான் செய்யவேண்டிய பணியின் விரைவுபற்றித் தானே கேட்டன ளாதலின் அதுவும்பிழையன்று

இதுவரை கூறியவாற்ருன் 'கூடன் மகளிர் கோவலங் கொள் ளும்' எனத் தொடங்கி, 'நங்கையீங்கிருக்க' எனக்கூறிய மாத ரியைத் தொழுது 'மாதவத்தாட்டி வழித்துயர் நீக்கி' எனத் தொடங்கி 'அமைந்த நற்கலங்கள் நெடியாதளிமின் நீர்' எனக் கண்ணகி கூறிஞள் எனப் பொருள் கொள்வதும் ஏற்புடைத்தாம் என்பது விளங்கும் அடுத்து,

"கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காணென வொள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடையரியே, யெனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே.......

(வழக். கா. ௬௪–௭௨.)

இவ்வடிகட்கு, "கள்வனைக் கொலை செய்தல் கொடுங் கோன்மைப்பாற் பட்டதன்று, மேலும் அதுவே அரசநெறியு மாகும், என்று அரசன் கண்ணகியிடம் கூற; ஒள்ளிய இழை யினையுடையளாகிய கண்ணகி அவனை நோக்கி, அறநெறியிற் செல்லாத கொற்கை நகரத்து அரசனே, என் காற்கு அணியாம்

பொன்னாலாகிய சிலம்பினுடைய பரல் மாணிக்கமே என்று கூற; இக் கண்ணகி கூறியது செவ்விதாய நல்ல மொழியேயாகும், எம்முடைச் சிலம்பினது பரல் முத்தே எனத் தம்முட் கருதி அச் சிலம்பைக் கொண்டு வருகவெனத் தம் ஏவலரிடைக் கூறி வருவித்துத் தானே அதனைக் கண்ணகியின் முன்பு வைத்தனனாக, கண்ணகி தான் அணியும் அழகிய அச்சிலம்பினையுடைத்த காலை அதனின்றும் எழுந்த மாணிக்கப் பரல் பாண்டியனது முகத்திடத்துத் தெறித்து வீழ்ந்தது'' என உரையாசிரியர் தமிழ்த்திரு ந. மு. வே. அவர்கள் உரைகூறிச் செல்வர். அவர் கூறுமாறு நோக்கின், பாண்டியன் தன் சிலம்பின் பரல் முத்து என வெளிப்பட உரைத்தானல்லன் என்றே கொள்ள வேண்டியுள்ளது. அதன்படி, ஆங்கிருந்த அவையோரும், கண்ணகி தன் சிலம்பின் பரல் மாணிக்கம் எனவுரைத்ததைக் கேட்டனரேயன்றி, காவலன் சிலம்பின் பரல், கண்ணகி சிலம்பின் பரலோடு ஒத்ததோ அன்றி மாறுபட்டதோவென அறியார்; இரு சிலம்பினுள்ளும் உள்ள பரல்கள் மாறுபட்டவை எனக் காவலன் ஒருவனுக்கேயன்றி, வழக்குரைக்க வந்த கண்ணகிக்கும், அவையோர்க்கும் அது விளங்குமாறில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது

''கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே, மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்''

என்னும் அடிகளால், கோவலன் கொணர்ந்த சிலம்பின்மணியே அவன் கள்வனல்லன் என்பதை விளக்கிற்று என்பது பெறப்படும் அதனால், காவலன் சிலம்பும் கோவலன் சிலம்பும் ஒத்திருத்தல் வேண்டும். அஃதாவது, 'என்காற் பொற் சிலம்பு மணியுடை யரியே'எனக் கண்ணகி கூறியிருத்தலின், காவலன் சிலம்பு தோற்றப் பொலிவானும், அமைப்பு முறையானும் கண்ணகி சிலம்பை ஒத்திருத்தல் வேண்டும். அவ்வாறிருக்குங் கால், இவ்விரு சிலம்புகளும் மாறுபட்ட பரல்களையுடையவை என்பதை யறிந்த பாண்டியன் யாவர்க்கும் விளங்குமாறு தன் சிலம்பின் பரல் முத்தே என மொழியா வரை கண்ணகி தன் சிலம்பை உடைத்தற்கு இடனேது மில்லையென்க! ஆதலின் உரையாசிரியர் (ந. மு வே.) அவர்கள் 'பாண்டியன் தன் சிலம்பின் பரல் முத்தே எனத் தம்முட் கருதி' என்றதனோடு 'உரைத்து' என்ற சொல்லை சேர்க்காது விடுத்தது, பொருந்துமாறில்லை.

ஆயினும், முன்னர் கூறிய அடிகட்கு, ''கண்ணகிதன் காற் பொற்சிலம்பு மணியுடையரியே எனவும், காவலன், தேமொழி! என விளித்து, நீயுரைத்தது செவ்வை நன்மொழி, யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே' எனக் கண்ணகியை முன்னிலைப்

படுத்திக் கூறி, 'தருக' எனத் தம் காவலர்க்குரைத்துத் தந்து தான் முன் வைப்பக் கண்ணகி தான் அணியும் அழகிய அச் சிலம்பினை உடைத்தாள் எனக் கொள்வது பொருந்தும்.

மற்றும் உ. வே. சா. அவர்களின் பழைய பதிப்புகளில் ''என்காற் பொற்சிலம்பு மணியுடையரியேயெனத் தேமொழி யுரைத்தது'' என்ற தொடர், ''என் காற் சிலம்பு மணியுடை யரியே தேமொழி யுரைத்தனை'' என மாறுபட்டு இருப்பதாகக் காணப்படுகின்றது. ஆகவே, இத் தொடரின்படி, அஃதாவது தேமொழியுரைத்தனை என்றதன் முன்னர் 'என' என்னும் ஒரு சொல்லை வருவித்துக் கண்ணகி, 'என் காற் சிலம்பு மணியுடை யரியே' எனவும், காவலன், தேமொழி! உரைத்தனை செவ்வை நன்மொழி; யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே, எனக் கண்ணகிக்குக் கூறி, காவலர்பால் தருகவெனத் தந்து தான் முன் வைப்பக் கண்ணகி உடைத்தாள்'' என்று பொருள் கொள்வதும் பொருந்தும் என்க.

இதனால் ந. மு. வே. அவர்கள் கூறியாங்கு, காவலன் தன் சிலம்பின் பரல் முத்தே என்று தம்முட் கருதினமையோடு அமையவில்லை என்றும், அதனை அவையோரும், கண்ணகியும் அறியுமாறு வெளிப்பட வுரைத்தானென்றும், அவ்வாறு அவன் உரைத்தமையே கண்ணகி, தன் சிலம்பை உடைத்தற்கு இடனுயமைந்தது என்றும் அறிக. *

தென்மொழி, கடலூர்-2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர்கள் எழுதிக் கேட்க.

இந்தி எதிர்ப்பு:

போற்றும் பொதுமறையும் புத்தமிழ்தாம் காப்பியமும்
நாற்றிசையும் வாழ்த்துகின்ற நாலடியும்—வீற்றிருக்க
இந்தி மொழியாம் இழிமொழியிங் கேன்வேண்டும்?
முந்தி எதிர்ப்பாய் முனைந்து.

மாட்சி மிகுந்த மணியாந் தமிழ்மொழியில்
ஆட்சி நடத்திடவே ஆர்வமுற்றேரும்—காட்சியில்லா
இந்தி தனைவிரட்டி என்றென்றும் நன்மையுற
நந்தாத் தமிழையே நாடு.

— கைம்மலை, பொறையாறு.

தாயை மறப்பதுபோல் தன்மொழியைத் தான்மறந்து
பேயன்ன இந்தியைப் பேணுவோர்—தாயன்பை
விட்டகன்ற வன்னெஞ்சர் மட்டுமல்லர்; வையத்தில்
பட்டமரம் போலுமவர் பாங்கு.

தாயை மறப்பதுபோல் தன்மொழியைத் தான்மறந்(து)
ஆயுங் கலைகளால் ஆவதென்ன?—காயும்
வயிற்றுக்குக் கஞ்சிதான் வேண்டுமன்றி யாப்போ(டு)
இயற்றும் இசையோ இயம்பு?

— அலைமணற்குழவி, தரங்கம்பாடி.

கொல்ல வரும்இந்தி கூவி அழுதிடச்
செய்திடும் நாளெதுவோ?—தேன்
பெய்திடும் நாளெதுவோ?

மெல்லத் தமிழ்தின்று மேவ வரும்இந்தி
மாய்ந்திடும் நாளெதுவோ?—தலை
சாய்ந்திடும் நாளெதுவோ?

வெல்லத் திறமிலா வீணராய் நாமிங்கு
வாழ்வதும் நன்றுகொலோ?—தமிழ்
வீழ்வதும் நன்றுகொலோ?

கொல்லக் குறிக்கினும் இந்தி கொணர்வோரைக்
கூடி எதிர்த்திடுவோம்—தமிழ்ப்
பாடி அதிர்த்திடுவோம்!

— அன்பரசி, காரைக்கால்.

முகில்கிழித்தே எழுகின்ற நிலவைப் போலும்!
முரசினின்றும் எழுகின்ற முழக்கம் போலும்!
தகவற்ற இந்தியினை எதிர்ப்ப தற்குச்
சடுதியிலே வேலெடுத்துக் கிளம்பு வாயே!
அணைமீறித் தாவுகின்ற புனலைப் போன்றும்
துணைதேடித் திரிகின்ற களிற்றைப் போன்றும்
திணிக்கின்ற இந்திதனை வெல்வ தற்குச்
செழுந்தமிழா, வேலெடுத்துக் கிளம்பு வாயே!

– கல்லைப் பித்தன், திருப்பனந்தாள்

தமிழுணர்வு:

எண்ண இனிக்கும் கனிச்சுவையாம்–தமிழ்
விண்ணில் விளங்கும் முழுநிலவாம்;
கண்ணில் ஒளிரும் கருமணியாம்–தமிழ்
அன்னை அளிக்கும் பால்சுவையாம்!
நெஞ்சில் நிறையும் நினைவெல்லாம்–தமிழ்
வஞ்சிக் கொடியின் எழில்நினைவே!
மஞ்சுக் கிடையே மலைபோலும்–இடர்
மருளின் நடுவில் அவள் திகழ்வாள்!

– கோ. கவியபெருமாள், வான்படை.

புலிக்கொடியை ஏற்றிமுனம் புவியாண்ட தமிழரினம்
எலிநிகர்ப்ப இன்றிங்கே இழிவடைந்து வாழ்வதுவோ?
தலைகொடுத்தும் தமிழ்மொழியைச் சாகடிக்கும் கும்பலினைக்
கொலைபுரிதல் இழுக்கன்று; கொடியவரின் துடுக்கொழியும்!
வேலெடுத்து வில்லெடுத்து வீறுகொண்ட நாம்பிறர்தம்
காலடுத்து வாழ்வதுவோ? காணுங்கால் நாணமிதே!
பாலெடுத்துப் பழமெடுத்துப் பசிக்கூட்டி முடிச்சவிழ்க்கும்
கோலடுத்து வாழுகின்ற கொத்தடிமை முறைதகுமோ?

– பொய்கை, கோ. சோ. செயபால்.

பால்போலத் தேன்போலப் பழம்போல இனிக்கும்!
பலகாலும் பயில்வார்க்குப் பசிகூடத் தணிக்கும்!
யாழ்போலக் குழல்போல இசைநெஞ்சை உருக்கும்!
யாப்போடும் பொருளோடும் அணிசூழ்ந்த தமிழே!

அரங்க. சீனிவாசன், திருச்சி–4.

மொழியில் முதலாம் முதுமை யிலையாம்,
முறையின் வளர் வாய் தென்மொழியே!
விழியே மனத்தின் விளக்கே அருளின்
விரிவே, தமிழே, தென்மொழியே!
பொழியும் முகிலாய்ப் புதுமை பழமை
பொலிபயன் ஈவாய் தென்மொழியே!
இழிந்தா ருனக்கே இடையூ றளித்தும்
இறவா துயர்ந்தாய் தென்மொழியே!

– காரை–இறையடியான்.

தனித்தமி ழோங்கித் தகவுயர்ந் தீடொப்
பனிவரை ஒப்பிடும் பாங்கினை எய்திட
இனிதென நின்றிவண் ஏற்பன ஆற்றும்
மனவுரம் நமக்கு வாய்த்திடல் என்றோ?

அருந்தமிழ்த் தேனை ஃருகினில் வைத்துப்
பருந்தெனும் இந்திப் பகையினை யோட்டிச்
சுரும்பினம் ஆகிநாம் தமிழினை உண்ண
மருங்கினிற் சூழல் வாய்த்திடல் என்றோ?

– கோ பொன்வேந்தன், சென்னை-1.

அன்பே உயிரின் நிலையாகும்;
அன்றேல் என்பு தோலாகும்;
இன்றமி ழேஙம் விழியாகும்;
இன்றேல் வாழ்வும் இருளாகும்.

நன்றே எண்ணிப் பாருங்கள்,
நற்றமிழ் இளைஞர்! நற்புலவீர்!
இன்றே முனைந்து வாருங்கள்,
இனிமைத் தமிழைக் காப்பதற்கே!

– ஆரூர். இ தேவநேயன்.

காதல்:

"கானக்குயில் வானமயில்
காதலின்பப் பெண்ணரசி,
தேனடையே!" என்றவனை
வந்து போகச் சொல் – இந்தப்
பெண்ணுக்கொரு வாக்குறுதி
தந்து போகச் சொல்!

கண்விழியிற் செய்திசொல்லிக்
கட்டிளமை மேனிகிள்ளி,
எண்ணத்தில் நிறைந்தவனை
வந்து போகச் சொல் – அந்த
வண்ணமுகக் காட்சிதனைத்
தந்து போகச் சொல்!

– பெருவை–சதாசிவம்.

பாரதிதாசன்:

பல்குதமிழ்ப் பாவமிழ்தம் பழகுதமிழ் நாட்டிலே பரவயாண்டும்
நல்குதமிழ்ப் பாவலனாய் நற்றமிழ்க்குக் காவலனாய் நனிசிறந்து
மல்குதமிழ் மரபினுக்குப் பாவேந்தாய் அரசோச்சித் தமிழ்க்குலத்தை
வெல்லவரும் வெளிப்பகையை வீழ்த்தி வந்த பேரரிமா வீழ்ந்ததம்மா!

(வேறு)

தேனூர்ந்த தமிழ்ப் பாடல் மழைபொ ழிந்து
திருவிடத்தின் மறுமலர்ச்சிச் செம்மை சாற்றிப்
பாவார்ந்த பகுத்தறிவுச் செம்மல் நம்மின்
பழந்தமிழை மறுபதிப்புச் செய்த ஆசான்!
சீரார்ந்த தென்னவரின் விழியே போலுஞ்
செந்தமிழைப் பாப்புனலால் செழிக்கச் செய்த
பேரார்ந்த பெருந்தமிழன்! புரட்சி யாளன்!
பெறற்கரிய பெரும்புலவன்! பிரிந்தா னம்மா!

பாட்டெடுத்த பெரும்புலவர் கூட்டந் தன்னில்
பைந்தமிழைப் புதுப்பித்த புலவர் கோமான்!
நாட்டினிலே தீந்தமிழுக்(கு) இடுக்கண் வந்த
நாளையிலே பாவேந்தர் தந்த சொற்கள்
பூட்டையுடைத் திட்டபெரும் வேங்கை போலும்
புறப்பட்டுப் பகைப்புலத்தைப் பொடிய தாக்கிப்
போட்டியிட ஆளின்றி வென்றி யார்த்த
போர்மறவன் உயிர்ப்புலவன் மறைந்தா னம்மா!

ஆற்றாத தமிழ்ப்பகைவர் தமிழ ருக்கும்
அரியதமிழ் மொழியினுக்கும் அடுக்க டுக்காய்க்
கூற்றாகி எதிர்நின்று கொடுமை செய்து
கொடிதூக்கிப் போராடி' வந்த காலை
ஊற்றாத உணர்வெழுப்பித் தமிழ்க்கு லத்தை
உயிர்ப்பாவால் ஊக்குவித்த உண்மை மல்லன்!
போற்றிவந்த தமிழ்ச்சோலை தன்னை விட்டுப்
போய்ச்சேர்ந்தான் இறப்புலகு பொறுத்த லுண்டோ?

— சா. சி சு. குறிஞ்சிக்குமரன், மலைநாடு.

பொது:

முப்பாலாய் ஞால முதன்மறையாய் ஈரடியாய்த்
தப்பா வகையாய்த் தளிர்த்தோங்கிச் – செப்பத்
தனக்குவமை யில்லாத் தனிக்குறளே மக்கள்
மனத்துயரை மாற்றும் மருந்து.

அறம்பொருள் இன்பம் அடங்கிய முப்பால்
பெறவரிய மேன்மைப் பெருக்கு; – மறையும்
கனவிலும் நீங்காத காப்பாம் குறளே
மனமார உண்ணும் அமிழ்து.

— வீ. வீராச்சாமி, திருப்பனந்தாள்.

ஏழைகளின் வாழ்வினிலே இன்பமெழ வேண்டும்;
இல்லையெனும் ஏக்கமெலாம் இன்றகல வேண்டும்;
வாழும்வரை யிவ்வுலகம் கவலையற வேண்டும்;
மாண்புகளே வாழ்க்கைதனில் மலர்ந்திடுதல் வேண்டும்!

சோலையிலே பூங்குயில்கள் போன்றிசைக்கும் மாதர்
சூழடிமைத் தளைகளெலாம் தூளாதல் வேண்டும்;
காலமெலாம் நல்லினைஞ ரோடுங்கி ராகிக்
கவின்மிகுந்த வாழ்வுசெயக் கருதிடுதல் வேண்டும்!

பொதுவுடைமைப் பொன்மலரே பூத்திடுதல் வேண்டும்;
புரைமிகுந்த தனியுடைமை போயொழிதல் வேண்டும்;
எதுவரினும் அஞ்சுகிலா உள்ளமதே வேண்டும்;
இவ்வுலகில் நல்லமைதி நிலவிடுதல் வேண்டும்!

— **அன்புநிலவன், பாகூர்.**

பள்ளியில் சேரக் கையூட்டு;
பதவியில் உயரக் கையூட்டு;
அள்ளி ; அள்ளிக்..கொடுக்கின்றார்;
அதுவும் நன்கொடை என்கின்றார்!
கள்ளத். தனத்தால் தேர்வினிலே,
கருத்தினை முடிக்கக் கையூட்டு;
கொள்ளை யடிப்பார் நலம்எய்தக்
குறுக்கு வழியே கையூட்டு!

(வேறு)

சீரிய நெறியும் எங்கே?
சிறந்தநற் பண்பும் எங்கே?
கூரிய அறிவும் எங்கே?
குறள்நெறி வாழ்வும் எங்கே?
நேரிய பார்வை எங்கே?
நிமிர்ந்தநல் நடையும் எங்கே?
பாரினி ஒழுங்கு நேர்மை
பறந்திடும் தாமே இங்கே!

— **பெ. கிருட்டிணசாமி, குறுக்குச்சாலை.**

பாட்டெழுதும் அன்பர்கள் கவனிக்க.

1. பாடல்கள் தனித்தமிழிலேயே இருத்தல் வேண்டும்.
2. அன்பர்கள் ஒரே வகைத் தலைப்புகளில் எழுதாமல் இயற்கை, வரலாறு, அறிவியல், குமுகாயச் சீர்திருத்தம் பற்றிய தலைப்புகளிலும் எழுத வேண்டுகின்றோம்.
3. பாடல்கள் தொடர்பாக மடல் எழுத இயலாது.
4. விடுத்த மூன்று திங்கட்குள் பாடல்கள் வெளிவரவில்லையாயின் அவை தள்ளப்பட்டன என்று கொள்க.

வேளாண் இயல்.

தென்னாட்டின் கரும்பு வளம்.

கா. சிவப்பிரகாசம் பி. எசி. (வேளாண்மை.)

தோற்றுவாய்: பலாவின் சுவையையும் மற்ற கனிகளின் இனிப்பையும் எண்ணிப் பார்க்கின்ற உள்ளங்களுக்கு கரும்பின் சுவை தெரியாமல் இருக்காது. கரும்பின் சுவையை இனிக்க இனிக்கச் சொல்லும் பழந்தமிழ்ப் பாடல்கள் நம்மிடை ஏராள மாக இருக்கின்றன. கரும்பு சுவையானதோடல்லாமல் நாட்டின் பொருளாதார வளத்திற்கும் அடிப்படையாக அமைந்து கிடக் கிறது. பொன்னை ஈட்டித்தரும் கரும்பென்று சொன்னால் மிகை யாகாது. பெருவிளைவும் மிகுந்த வருவாயும் சேர்க்கும் கரும்பு, வெப்பப் பகுதிகளில் சிறப்பாக வளர்ந்து வளம் பரப்பும் பயிர் களில் ஒன்றுகும். கரும்பின் பிறப்பிடம் இந்தியாவேயாகும். எனினும் ஆசியா எனப் பொதுப்படையாகக் கூறுவாரும், ஓசியானியா (Oceania) என வேறுபட்டுரைப்பாரும் உளர். வளர்ந்துவரும் அறிவியலின் பயனுகச் செங்கிழங்கு (Beet-root) பனை மரம், தென்னை மரம், மாபிள் மரம், (Maple Tree), இனிப்புச் சோளம் (Sweet Sorghum) போன்றவற்றிலிருந்து சருக்கரை செய்யப்பட்டாலும்கூட, கரும்பு தனக்கே உரித்தான தனிச் சிறப்புடன் நின்று நிலவி வருகிறது.

வெப்ப தட்பம்: கரும்பு வெப்பப் பகுதிகளிலும் மித வெப் பப் பகுதிகளிலுமே வளரும் வாய்ப்புடையது. கடல் மட்டத்தி லிருந்து ஏறத்தாழ 4000 அடி உயரம் வரை வளரும். 50–60 விரற்கடை மழையும், 75–85 (F) பாகை வெப்பமும் கொண்ட பகுதிகள் கரும்பு வளர்வதற்கு ஏற்றவை. தென்னுட்டல் 25 முதல் 100 விரற்கடை அளவு மழையைப் பெறும் இடங்களில் கரும்பு பயிரிடப்படுகின்றது

வளரும் இடங்கள்: இந்தியா, தென் சீனு, சாவா, பிலிப் பைன் திட்டுகள், ஃகவாய்த் திட்டுகள், நடு அமெரிக்கா, கினியா, சில்லி, பிரேசில், பெரு, கியூபா, சமாய்கா, தென் ஆப்பிரிக்கா, ஆத்திரேலியா முதலான நாடுகளில் மிகுதியான அளவில் கரும்பு பயிரிடப்படுகின்றது. இந்தியாவில் வட இந்தி யாவைவிடத் தென்னுடே கரும்பு வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலை யைப் பெற்றிருக்கின்றது. தமிழகத்தில் ஏறத்தாழ இரண்டு இலக்கம் ஏக்கர் அளவுள்ள நிலப்பரப்பில் ஆண்டுதோறும் கரும்பு பயிரிடப்பட்டு வருகின்றது.

மண்: கடினத்தன்மையற்ற செவ்வல் மண்ணிலும் (Light brown) செம்மண் கலந்த இருபொறை மண்ணிலும் (Reddish loam) கரும்பு சிறப்பாக வளரும் என்றாலும் களிமண், செம்மண் முதலான வேறுபட்ட மண் வகைகளிலும் வளர்க்கப்படுகின்றது.

பாகுபாடு: (Classification) கரும்பு கிரேமினே (Graminae) என்னும் குடும்பத்தையும் (Family), சக்கேரம் (Saccharum) என்ற பண்புக் குழுவையும் (Genus) சார்ந்தது. இப் பண்புக் குழுவில் அடங்கியுள்ள 5 தனிகங்களில் (Species), அபிசினாரம் (officinarum), பார்பெரி (Barberi), சைனென்ஃசு (Sinense) என்ற மூன்றுமட்டுமே பயிரிட ஏற்றவைகள். இவற்றில் அபிசினாரம் தனிகத்தைச் சேர்ந்த கரும்பு வகைகளே தென்னகத்தில் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. ரோபஃச்டம் (Robustum), ஃச்பான்டேனியம் (Spontaneum) என்ற இரு தனிகங்கள் காட்டு வகையைச் (Wild types) சார்ந்தவை. காட்டு வகைத் தனிகங்கள் நாட்டு வகைத் தனிகங்களுடன் இணைக்கப்பட்டு அதன் வழியாகக் காட்டுவகைத் தனிகங்கள் கொண்ட சிறந்த பண்புகள் பெறப்படுகின்றன.

வேளாண்-முறை.

நிலத்தைப் பதப்படுத்தல்: நிலத்தை 8 முதல் 10 தடவை இரும்புக் கலப்பையைக் கொண்டு மீண்டும் மீண்டும் உழுது நன்கு பண்படுத்த வேண்டும் மூன்று முதல் மூன்றரை அடி இடைவெளி விட்டுச் சால்கலப்பை கொண்டு சால்களைப் போட வேண்டும். தண்ணீரை வடித்துவிட நிலத்தில் ஆங்காங்கு வடிகால்களை அமைக்க வேண்டும். கடினத்தன்மை கொண்ட, எளிதில் உழமுடியாத மண் அமைப்பைப்பெற்ற நிலங்களாயின் கிடங்கு முறையினை (Trench method) மேற்கொள்ளலாம். இம் முறையில் 2½ முதல் 3 அடி இடைவெளியில் ஓர் அடி ஆழத்தில் கிடங்குகள் வெட்டி அக் கிடங்குகளை மண், எரு முதலானவற்றால் நிரப்ப வேண்டும். இவை தவிர பாத்திகள் (Beds) அமைத்து நடுதலும், குழிகள் (Pits) வெட்டி நடுதலும் ஒரு சில இடங்களில் கையாளப்படுகின்றன.

நடவு: கரும்பின் தலைப்பாகத்தை வெட்டிக் கரணைகளாகப் (Setts) பயன்படுத்தலாம். அல்லது 7-8 திங்கள் வளர்ந்த குறுகிய காலப்பயிரை விதைக் கரணைகளாகப் பயன்படுத்தலாம். கட்டைப் பயிரிலிருந்தோ நோயுற்ற கரும்புகளிலிருந்தோ கரணைகளை வெட்டியெடுத்து உபயோகித்தல் கூடாது. நடவுக்கு முன்பு சால்களில் பி எச். சி. (B. H. C.) அல்லது டி. டி. டி. (D. D. T.) என்னும் பூச்சிக் கொல்லியைத் தூவிக் கரணைகளைக் கரையான் தாக்குதலிலிருந்து காக்கலாம். விதைக் கரணை

அழுகல் நோயைத்தடுக்க நடுமுன்பு கரணைகளை ஒரு விழுக்காடு [ஒரு சதவிகிதம்] 'போர்டோ கலவையிலாவது 20 குடுவை [க்ாலன்] தண்ணீரில் ஓர் இராத்தல் 'அகலால்' [Agallal] என்னும் பூசணங் கொல்லியைக் கரைத்துக் கொண்ட கரைசலி லாவது நனைத்த பின்பு நடவேண்டும். ஏக்கருக்கு, மூன்று முனையுள்ள கரணைகளாயின் 15,000 கரணைகளும் இரண்டு முனையுள்ள கரணைகளாயின் 20,000 கரணைகளும் தேவைப் படும். மூன்று முனையுள்ள கரணைகளே சிறந்தவை. கரணை களின் முனைகள் பக்கவாட்டில் இருக்கும்படியாகவும் கரணைகள் ஒன்றோடொன்று தொட்டுக் கொண்டிருக்கும்படியாகவும் பார் களில் வைத்து அமுக்கி நடவேண்டும். கிடங்கு முறையில் கிடங்கின் நடுப்பாகத்தில் கரணைகளை நடவேண்டும்.

நடவுக் காலம்: கரும்பு திசம்பர் முதல் மே வரை நடப் படுகின்றது. என்றாலும் காலத்தின் முற்பகுதியில் நடவினை மேற்கொள்வது சிறந்ததாகும். சேலம், திருச்சி, கோவை, மதுரை மாவட்டங்க்ளில் சூலை-செப்டம்பர் திங்களில் இரண்டாம் பட்டக் கரும்பு நடப்படுகின்றது.

உரமும் உரமிடுதலும்: மிகுதியான ஊட்டத்தை நிலத்தி லிருந்து எடுத்துக் கொள்ளும் பயிர்களில் கரும்பும் ஒன்றாகும். உரத்திற்குத் தக்கபடி விளைவினைத் தரும் சிறப்புடையது. கரும் புக்குத் தேவையான தழைச்சாரத்தை யளிக்க இயற்கை எருக் களையும் செயற்கை எருக்களையும் சம பங்காகப் பிரித்தளித்தல் வேண்டும். ஓர் ஏக்கருக்கு 200 முதல் 250 இராத்தல் தழைச் சாரத்தினைக் [Nitrogen] கொடுக்க வேண்டும். முதல் உரமாக 20 வண்டி தொழு எரு இடப்படுகின்றது. 5000 முதல் 10,000 இராத்தல் வரை பசுந் தழையைப் போடுதல் சிறந்தது.

அல்லது கீழ்க்கண்ட அளவுப்படி உரமிடலாம். 20 வண்டி தொழு எரு அல்லது 10000 இராத்தல் பசுந்தாள் உரமும், செயற்கை உரங்களில் 625 இராத்தல் 'அம்மோனியம் சல்பேட்' 400 இராத்தல் 'சூப்பர்', 160 இராத்தல் 'மூரியேட் ஆப் பொட்டாஷ்' முதலானவற்றைப் போடுதல் வேண்டும். கரும்பு நட்ட நான்கு திங்களுக்குள் இரண்டு தடவைகளில் பகிர்ந்து உரமிடுதல் சிறந்தது. கட்டைப் பயிருக்கு 50 இராத்தல் தழைச் சாரத்தினை மிகுதியாகக் கொடுக்கவேண்டும்.

நீர்ப்பாய்ச்சல்: நட்ட ஒரு கிழமையிலும் பிறகு மண்ணின் தன்மையையும் கால நிலையையும் பொறுத்து 10 முதல் 15 நாட் களுக்கு ஒரு முறையும் நீர்ப்பாய்ச்சலாம். மழை நீர் போக 80-90 விரற்கடை தண்ணீர் [80-90 Acre inches] தேவைப் படும். இதனை ஈடுசெய்ய ஏறத்தாழ 25 முதல் 35 முறைகள் நீர்ப்பாய்ச்சல் வேண்டியிருக்கும்.

பின்செய் நேர்த்தி: நட்ட மூன்று அல்லது நான்குகிழமைகளுக்குப் பிறகு களையெடுத்தலும் கொத்துதலும் (Weeding and Hoeing) வேண்டும் பயிர் வளர்ச்சியின் முற்பகுதியில் இரண்டு மூன்று முறைகள் கொத்துதல் வேண்டும். பயிர் நெருக்கமாக முளைத்திருக்கும் இடங்களிலிருந்து களைத்தெடுத்தோ அல்லது நடவின் பொழுது பத்துச் சால்களுக்கு ஒரு முறை இருவரிசைக் கரணைகளை நட்டு அந்தப் பயிரைக் கொண்டோ, நட்ட மூன்று முதல் ஐந்து கிழமைகளுக்குள் கரணைகள் முளைக்காத இடங்களில் ஊடு நடவேண்டும். இளம் பயிர் வளர வளரப் பயிர் வரிசைக்கு இடையில் இருக்கும் மண் மேடுகளை வெட்டிப் பயிருடன் அணைக்க வேண்டும். இது பயிர்கள் சாயாமல் இருக்கவும் அடிக்கிளைகள் தோன்றவும் உதவுகின்றது. பின்பு சால் கலப்பையினால் பயிர் வரிசைகளுக்கிடையில் உழுது ஆழமான கால்கள் அமைக்க வேண்டும். கோடைக் காலத்தில் நிலத்தில் உள்ள ஈரம் விரைவில் காயாமல் இருக்க பயிர்களுக்கிடையில் கரும்புத் தோகை போன்றவற்றை விரிக்கலாம். நட்ட ஐந்து திங்கள் கழிந்த பின்பு கரும்பினைத் தோகையால் சுற்றி வைக்க வேண்டும். இதனால் கரும்பின் மேல்பட்டை [Cane rind] கடினமில்லாமலும் கரும்பு வெடிக்காமலும், தண்டிலிருந்து இடையிடையே பக்கக் கிளைகள் தோன்றாமலும் காக்கப்படுவதோடு, எலி, அணில் இவற்றால் தாக்கப்படுவதும் தடுக்கப்படுகின்றது. கம்புகளை ஊன்றியாவது தோகைகளைத் திரித்துக் கரும்புகளை ஒன்றோடொன்று அவ்வவ்வாறே பிணைத்துக் காட்டியாவது காற்றினாலும் மழையினாலும் கரும்புகள் சாய்ந்து விழுதலைத் தவிர்க்கலாம். இவை தவிர கரும்பின் தண்டுப் பாகத்திலுள்ள தேவையற்ற தோகைகளையும் நாள்பட்டு முளைக்கும் பக்கக் கிளைகளையும் அப்பொழுதைக்கப்பொழுது அப்புறப் படுத்தி விடுதல் வேண்டும்.

பயிர்க் காப்பு: *(PLANT PROTECTION)*

அ. குருத்துப் பூச்சிகள்: மூன்று வகைப் புழுக்கள் கரும்பின் வெவ்வேறு வளர்ச்சிப் பருவத்தில் தாக்கித் தாங்கொணாத அழிவினை உண்டாக்குகின்றன. முதல்வகைப் புழுக்கள் இளம் குருத்துகளைத் தாக்கிப் பயிர்களை வாடச் செய்கின்றன. இரண்டாம் வகைப் புழுக்கள் கணுக்களை ஒட்டியுள்ள தண்டுப் பாகத்தையும் கணுக்களையும் தொளைத்துச் சேதம் விளைவிக்கின்றன. மூன்றாம் வகைப் புழுக்கள் வளர்ந்த பயிரின் நுனிக் குருத்தைத் தாக்கி அழிவினைச் சேர்க்கின்றன.

தடுப்பு முறை: 'எண்டிரின்' (0·1 விழுக்காடு) என்னும் பூச்சிக் கொல்லியைத் தெளித்து இளம் குருத்துப் புழுக்களை ஓரளவு தடுக்கலாம். கோ. 299, கோ. 313, கோ. 331

முதலான கரும்பு வகைகளைப் பயிரிட்டால் தண்டுப்புழு, நுனிக் குருத்துப் புழு இவற்றின் தாக்குதலினின்றும் ஓரளவு கரும் பினைக் காக்கலாம்.

ஆ. கருஞ்சாட்டை நோய்: நோய் கண்ட கரும்பின் நுனிப்பாகத்தில் கருஞ்சாட்டை போன்று தொங்கிக் கொண் டிருக்கும். இந்நோயினால் கரும்புப் பயிர் இறுதியில் காய்ந்து விடுகின்றது.

தடுப்பு முறை: கருஞ்சாட்டைகளை அடர்த்தியான பைகளில் நுழைத்துப் பிடித்துக்கொண்டு கரும்பிலிருந்து வெட்டி எடுத்து அவற்றை உடனடியாகக் கொதிக்கும் நீரில் போட்டு பூசண வித்துகளை அழிக்கவேண்டும். இந்நோய் தாக்காத கோ. 449, கோ. 527 போன்ற கரும்பு வகைகளைப் பயிரிட லாம்.

இ. கரணை அழுகல் நோய்: கரணைகள் தாக்கப்பட்டு அழுகிவிடுவதால் நட்ட கரணைகளில் சில முளைப்பதில்லை. ஆத லால் நிலத்தில் ஆங்காங்குச் சொட்டை சொட்டையான இடங் கள் காணப்படுகின்றன.

தடுப்புமுறை: நோய்தாக்காத கரணைகளை நடவேண்டும். நடுவதற்கு முன்பு 'போர்டோ' கலவையிலாவது 'அகலால்' அல்லது 'அரிட்டான்' என்னும் பூசணங் கொல்லியிலாவது கரணைகளை நனைத்து எடுக்க வேண்டும்.

பயிர்ச் சுழற்சி: [Crop rotation] நன்செய் நிலங்களில் கரும்பிற்குப்பின் நெல் பயிரிடப் படுகின்றது. 2-3 ஆண்டுகள் நெல்லும் அதைத் தொடர்ந்து ஓராண்டு கரும்பும் பயிரிடப்பட்டு வருகின்றன கரும்பு ஓராண்டும் வாழை மூன்றாண்டுகளும் நெல் இரண்டாண்டுகளும் தொடர்ந்து பயிரிடும் வழக்கமும் உள்ளது. இறைவை நிலங்களில் [Garden lands], சோளம், கேழ்வரகு, பருத்தி இவற்றுடன் கரும்பு பயிர்ச் சுழற்சியில் இடம் பெறுகின்றது. நிலக்கடலை-கேழ்வரகு கலப்புப் பயிரைத் தொடர்ந்து, இறைவை நிலத்தில் பயிரிடும் நெல்லும் பின்பு கம்பும், கரும்புடன் மூன்றாண்டுச் சுழற்சி முறையில் பயிர் செய்யப்படுகின்றன.

கலப்புப் பயிர்: வெங்காயம், வெண்டை போன்ற காய் கறிகள், பயிர் வரிசைகளுக்கிடையில் பயிரிடப்படுகின்றன. நிலத்தைச் சுற்றிலும் ஓரங்களில் ஆமணக்கு, துவரை போன்ற பயிர்களை வளர்க்கலாம் குருகிய காலத்தில் வளரும் பசுந்தா ளுரமான சணப்பினை விதைத்து, வளர்ந்தவுடன் அப்பயிருக்கே உரமாகப் பயன்படுத்தலாம்.

அறுவடை: 10 முதல் 14 திங்கள் கால வரம்பில் கரும்பு அறுவடைக் காலத்தை அடையலாம். கரும்பின் வகை நடவுக் காலம், மண் வளம், கால நிலை, எருவிடுதல், நீர்ப்பாய்ச்சல் முதலான பல்வேறு காரணங்களைப் பொறுத்துக் கரும்புமுதிர்ச்சி யடையும் காலம் மாறுபடுகின்றது. கரும்பு முதிர்ச்சியடைந்ததும் தக்க காலத்தில் அறுவடை செய்ய வேண்டும். இல்லையெனில் கரும்புச் சாற்றின் தன்மை குறைந்துவிடும்.

விளைவு: ஏக்கருக்கு 30 முதல் 40 'டன்' அளவுள்ள கரும்பு கிடைக்கும். ஒரு 'டன்' நிறையுள்ள கரும்பிலிருந்து ஏறத்தாழ 250 இராத்தல் வெல்லம் (Jaggery) கிட்டும்.

பொறுக்கு வகைகள்: **கோ. 527:** இதனுடைய நடவுக் காலம் சனவரி திங்களாகும். $10\frac{1}{2}$–11 திங்கள் கழிந்த பின்பு அறுவடைக்குவரும். 20 விழுக்காடு [Percentage] சருக்கரைச் சாரமுடையது. வறட்சியைத் தாங்கும் தன்மையும் கருஞ் சாட்டை நோயினை எதிர்த்து நிற்கும் ஆற்றலும் பெற்றது.

கோ 449: ஆகஸ்ட்டு திங்களில் நடப்படுகின்றது. நட்ட பின் 11–$11\frac{1}{2}$ திங்கள் கால வரம்பில் அறுவடைக்கு வரும். 19 விழுக்காடு சருக்கரைச் சாரத்தினைக் கொண்டது. கருஞ் சாட்டை நோயினை எதிர்த்து நிற்கும் திறமும் வறட்சியைத் தாங்கும் சிறப்பும் உடையது.

கோ. 419: சனவரி முதல் ஏப்ரல் வரை நடவுக் காலம் வேறுபடும். 12 திங்கள் கழிந்து அறுவடைக்கு வரும். 19 விழுக்காடு சருக்கரைச் சாரத்தினைக் கொண்டது. கரிப் பூட்டை நோய்க்கு எளிதில் இலக்காகும்.

கட்டைப் பயிர்: (Ratooning) இரண்டு முறைக்குமேல் கட்டைப் பயிர் வளர்ப்பது சிறப்பானதாகாது. கட்டைப் பயிர் சாகுபடியில் நிலப்பதப்படுத்தல் தேவையில்லை. நட்ட கரும்பின் அறுவடைக்குப்பின் மண் கட்டிகளை உடைத்து அடிக்கட்டை வரை வெட்டிவிட வேண்டும். ஒழுங்காக நீர்ப்பாய்ச்சி வந்தால் அடியிலிருந்து முளைகள் கிளம்பி புதுப்பயிர் உண்டாகும் நடவுப் பயிருக்கு உள்ள செய்முறைகள் யாவையும் இதற்கும் மேற் கொள்ளவேண்டும் கோ 419, கோ 527, கோ 449 போன்ற கரும்பு வகைகள் கட்டைப் பயிர் வளர்ப்பிற்கு ஏற்றவை.

அட்சாலி நடவு: (Adsali planting) இம்முறையில் கரணைகள் சூலை–ஆகஸ்ட்டு திங்களில் நடப்படுகின்றன. நடவுக் காலத்தை மாற்றி நடுவதால், கரும்பு எப்பொழுதும் போல அக்டோபர் திங்களில் பூப்பருவத்தை [Flowering phase]

அடைவது காலத்தாழ்த்தமாகின்றது. ஆதலால் ஏறத்தாழ நட்ட 18 திங்கள் கழிந்த பின்பே அறுவடைக்கு அணியமாகிறது. இந்த முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் அறுவடைக் கால மற்ற இடைக் காலத்திலும் கரும்பு கிடைப்பதால் ஆலைத்தொழி லுக்குத் தொடர்ந்து கரும்பினை அளிக்கும் வாய்ப்புக் கிட்டு கின்றது.

வெல்லம் செய்தல்: வேளாண்மைத் துறையினரால் பரிந் துரைக்கப்படுகின்ற சிந்துவாகி அல்லது திருத்தியமைக்கப்பட்ட கோதாவரி அடுப்பை வெல்லம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தி னால் எரிபொருளுக்கு ஆகும் செலவில்லாமல் கரும்புத் தோகை களையே பயன்படுத்தி வெல்லம் காய்ச்சி முடிக்கலாம். சாறு காயும் பொழுது மேல் எழும் அழுக்கை நீக்க 600 'இராத்தல்' கரும்புச் சாற்றுக்கு $1\frac{1}{2}$ இராத்தல் மேனி சுண்ணும்பு நீரைச் சேர்க்கவேண்டும். 500 இராத்தல் சாற்றுக்கு இரண்டு 'அவுன்சு' மேனி 'சூப்பர் பாஸ்ச்பேட்டைச்' சேர்த்தால் வெல்லம் நல்ல நிறத்தைப் பெறுவதுடன் நீண்ட காலத்திற்குக் கெடாமல் இருக்கும்.

விளை பொருட்கள்: சருக்கரை, வெல்லம்போன்ற சுவைப் பொருட்களைக் கரும்பிலிருந்து பெறுகிறோம். சருக்கரையிலிருந்து சருக்கரைக் காடி [Fermenting Sugar] மற்றும் இயைபுப் பொருட்கள் செய்யப்படுகின்றன. பாகு காய்ச்சும் பொழுது கிடைக்கும் பாகுக் கழிவிலிருந்து [Molasses], இரம் [Rum] என்னும் வெறிநீர், தொழிற்சாலைகளுக்கு வேண்டிய வெறியம் [Industrial alcohol], உந்துகளுக்குப் பயன்படும் எரியம் [Motor Spirit] 'கிளிசரின்' 'அசிடோன்', 'சிட்ரிக் நீரம்' ஆகியவை பெறப்படுகின்றன. கரும்புச் சக்கையிலிருந்து கடின மான அட்டைகள், தாள்கள், செயற்கைப்பட்டு, முதலானவை செய்யப்படுவதோடு அவை எரி பொருளாகவும் அடைப்புப் பொருளாகவும் பயன்படுத்தப் படுகின்றன.

இறுவாய்: தென்னாட்டில் பெரும்பாலும் சருக்கரை செய் தற்குப் பயன்படும் பயிர் கரும்பு. கரும்பு வேளாண்மையின் பல்வேறு நிலைகள், அதற்குரிய வெப்ப தட்பம் ஆகியவை தென் னகத்தின் எதிர்காலக் கரும்பு வளத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. கரும்பு விளைவின் எதிர்காலமே தென்னாட்டைச் சுற்றி வட்ட மிடுகின்றது. கரும்பின் சிறப்பையும் அதன் சுவையையும் உணரும் நாம் அது நமது பொருளியல் வளத்திற்கு அளிக்கும் ஏற்றத்தினையும் எழிலினையும் அறிந்து கரும்பு வேளாண்மை யைப் பாங்காக மேற்கொண்டு விளைவைப் பெருக்க வேண்டும்; தமிழகத்தின் வளத்தை உயர்த்தல் வேண்டும். ○

தெரிந்து கொள்ளுங்கள்.

உணவில் மிகையான உப்பைச் சேர்த்துக் கொள்பவர்களே குருதி அழுத்தத்தால் (Blood pressure மிகுதியும் தொல்லைப்படுகின்றனர். இத்தகையாரில் நூற்றுக்குப் பன்னிரண்டு பெயர்கள் பெரிதும் துயருறு கின்றனர். நடுத்தரமாக உப்பைச் சேர்த்துக் கொள்பவர்களில் நூற்றுக்கு ஏழு பெயர்களுக்கும் குறைவாக உப்பை உண்பவர்களில் நூற்றுக்கு ஒருவர்க்குமே குருதி அழுத்தம் ஏற்படுகின்றது.

o o o

பச்சை மயில் நீலவண்ணத் தோகையை விரித்து ஆடுகின்றது. அதைப் பெண்மயில் பார்த்துக் காமுற்று அதன் அண்மையில் நெருங்கு கின்றது. ஆனால், அந்தோ அந்தப் பெண் மயிலுக்குத் தன் காதலனின் உடல் வண்ணங்கள் புலப்படுவதில்லை. ஏன் தெரியுமா? மயில், கிளி, குருவி, புலி, அரிமா, கரடி, யானை முதலிய எந்த உயிரிக்கும் வண்ணங் களே தெரிவதில்லை. மெல்லிய நிறங்கள் சாம்பல் வண்ணம் போன்றும், அழுத்த வண்ணங்கள் கருப்பாகவுமே அவற்றிற்குத் தெரிகின்றன. ஆனால் இவை எல்லாவற்றிலும் குரங்கும் அதன் இனம் மட்டுமே பல நிற வண்ணங்களை அறிகின்றன. பிற உயிரிகள் யாவும் நிறக்குருடு வாய்ந்தவையே!

o o o

எப்பொழுதும் படுக்கையில் படுத்துக் கொண்டே கிடவாதீர்கள்! தூங்கும்பொழுது மட்டுமே படுக்கையில் படுக்கலாம். மற்ற நேரங் களில் படுக்கவே கூடாது. தொடர்ச்சியாக ஒருவன் எட்டு நாட் களுக்குப் படுத்தே கிடப்பானாகில் அவன் வலிவை ஐந்தில் ஒரு பங்கு இழந்து போகின்றான் என்று மருத்துவர் ஆல்மன் என்பார் கூறுகின்றார்.

o o o

நோயாளி ஒருவருக்குக் குருதி தேவைப்பட்டால் அவர் குருதியைப் போன்ற வேறு ஒருவரின் குருதியையே பொதுவாக உட் செலுத்துகின்றார்கள். அவர் குருதியைப் போன்று கிடைக்காத பொழுது என்செய்வது? இக்கால் அதற்கொரு வகையை அமெரிக்க மருத்துவர்கள் கையாள்கின்றனர். அதாவது அவர் ஓரளவு நல்ல நிலை யில் உள்ளபொழுது அவருடலிலிருந்தே சிறிது சிறிதாகக் குருதியை எடுத்துச் சேமித்து வைக்கின்றனர். பின்னர் அவர்க்கு இன்றியமை யாமை வரும் பொழுது அவருடைய குருதியையே அவருக்குச் செலுத்தி அவரைக் காப்பாற்றுகின்றனர். இது குருதி செலுத்தும் முறை யில் ஒரு புது வகையாகும்.

o o o

உலகில் உள்ள கடல்கள் அனைத்திலும் உள்ள நீர் ஆவியாக்கப் பெற்றால் அவற்றிலிருந்து 45 இலக்கம் கற்பரும (Cubic Mile) அளவுள்ள உப்பு கிடைக்கும் என்று கணக்கிட்டிருக்கின்றனர்.

o o o

யானை நெடுநாட்களுக்கு வாழ்ந்திருக்கக் கூடியது என்று பலர் நம்புகின்றனர். ஆனால் பெரும்பாலும் 60 ஆண்டுகள் வரையே அது

வாழ்ந்திருக்கின்றது. யானை சூலுற்றால் 19–22 மாதங்களுக்குள்ளேயே குட்டி போட்டுவிடுகின்றது.

○ ○ ○

மதம் பிடித்தல் என்பது ஆண் யானைக்கு ஆண்டுக்கிருமுறை நிகழும் நிகழ்ச்சியாகும். அக்காலங்களில் யானையின் கண்ணுக்கும் காதுக்கும் இடையிலுள்ள ஒரு தொளையிலிருந்து ஒருவகை மஞ்சள் நிறமான நீர் கசிந்து கொண்டிருக்கும். இந்த நீர்க்கு மதநீர் என்று பெயர். அக்காலங்களில் யானைக்குக் காதல் வேட்கை மிகுவாக இருக்கும். இத்தகைய காம வெறிகளால் ஆண் யானை எதிர்ப்படும் பெண் யானையை மறித்து மடக்கி மேல் விழுந்து மிதித்துக் கொன்றும் விடுகின்றது.

○ ○ ○

பாம்பின் உமிழ் நீர் ஒருவகை மாற்றம் அடையப் பெறுவதே அதன் நஞ்சாகும்! இந் நஞ்சிற்கும் நம்உடல் திசுக்களுக்கும் ஒருவகை ஈர்ப்புத் திறன் உள்ளது. அத்திறனால்தான் பாம்பு நம்மைக் கடித்த வுடன், அஃது உட் செலுத்திய நஞ்சை உடனடியாக நம் சதைத் திசுக்கள் உள்ளே இழுத்துக் கொள்கின்றன. இதே நஞ்சைத் தொண்டை, இரைப்பை இவற்றில் ஒரு சிறு காயமும் இல்லாத ஒருவர் வாய் வழியாக உட்கொள்வாரானால், இரப்பையில் உள்ள செரிமான நுண்ணுயிரிகளால் அந் நஞ்சு விரைவில் சமனப்பட்டு உயிர்க்கு எவ்வகைத் தீங்கையும் உண்டாக்குவதில்லை.

○ ○ ○

பாராட்டுகின்றோம்.

○○

'குறள் நெறி' ஆசிரியர் பேராசிரியர் திரு. சி. இலக்குவனார் அவர்கட்கு, அண்மையில் அரசினரால் பண்டாரகர் (Doctor) என்ற ஆராய்ச்சிச் சிறப்புப் பட்டம் தரப்பெற்றது கேட்டு மிகவும் மகிழ்ந்தோம். தமிழர்தம் தொன்மை நூலான தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதனைச் சிறப்புற ஆய்ந்தமையால் பேராசிரியர்க்கு இப்பட்டம் வழங்கப் பெற்றது. தனித்தமிழ் காக்கப்புறப்பட்ட இச்செந்தமிழ் மறவரை, இப்பட்டத்தால் மேன் மேலும் ஊக்கமடைந்து, தளராது தண்டமிழ்ப் பணியாற்றி இத் தமிழக மலர்ச்சிக்கு உறுதுணை புரியுமாறு பல்லாற்றானும் வாழ்த்தி வேண்டிக் கொள்கின்றோம்.

– ஆசிரியர்.

தேர்தல் கூத்து.

[புதுவை. சுப்பிரமணியன்.]

—●—

பயனில்லாக் காளான்கள் பல்குவதற் கென்றே
பருவமுறை பிறழவரும் பெருமழையைப் போல,
நயனில்லா நன்றியில்லா விடலைகளின் முன்னே
நாட்டிலுள்ள நல்லவர்கள் நாணிமுகந் தாழ,
பயன்கருதாச் செவ்வியர்போல் பாங்குபெற நடிக்கும்
பகற்கோலச் செம்மல்கள் பணிபலபெற் றுயர,
வியனுலகிற் குடியுரிமை வெளிமயக்காய்ப் போக
விரைந்தோடி வந்ததையா தேர்தலிங்கே தேர்தல்!

உழைப்பின்றி ஊர்சுற்றி வந்தவர்கட் கெல்லாம்
உட்கார ஓய்வின்றி வேலைவந்த தையா!
அழைப்பின்றி வீடுதொறும் படியேறு கின்றார்!
அகங்குழைய முகங்குழைய ஆடிநடிக் கின்றார்!
பிழைப்பின்றிச் சுற்றிவரும் பித்தர்களின் கூட்டம்
பின்னேவந் திவர்நடிப்பைப் பெரிதாக்கிக் காட்டும்!
குழைப்பின்றி நெற்றியிலே முக்கோடு தீட்டும்
கூத்தாடிக் கும்பலுக்கு வந்ததுகொண் டாட்டம்!

உணச்சேறு போல்நெய்யைச் சோற்றணையில் ஊற்றி
ஒருகவளம் தின்றதுமே திகைப்புறுவா ரெல்லாம்
மணச்சேறு பாய்ச்சுகிற மலரமளி விட்டு
மழைச்சேற்று வீதியிலே நடந்தமளி செய்வார்;
பணச்சேறு பாயுமதன் பயனுல்வி லைந்த
பகைச்சேற்றில் அகப்பட்ட பஞ்சைகளின் குருதி
நிணச்சேறு பாயுமதை நினைத்தாலே நம்முன்
நெஞ்சுநனைக் குங்கண்ணின் நீர்ச்சேறு பாயும்.

எதைஎதையோ இலக்காக்கி இறங்கிடுவார் களத்தில்!
எதைச்செய்தால் அறமாமோ அதைச்செய்ய ஒட்டார்.
பதைபதைத்துத் தொழிலாளர் கூட்டத்தைச் சார்ந்து
பகடைக்காய் ஆக்கிப்பின் முதுகேறிக் கொள்வார்.
கதைகதையாய்ப் பேசுதற்குக் கடைகடையாய் விரிப்பார்;
கடைகட்டத் தன்னலத்தின் கணக்கைத்தான் பார்ப்பார்;
விதைவிதைத்து விளைவுகொளும் விளையாட்டே புரிவார்;
விழிக்கடையும் பொதுநலத்துக் கசைத்துவிட ஒப்பார்!

ஆள்பிடிக்குங் கலைவல்லார் அணியணியாய்த் திரள்வார்;
அமைச்சரென நாளைவர இருப்பவரை நத்தித்
தாள்பிடித்துக் கைபிடித்துத் தலைக்கொன்றாய் நீண்ட
தடிபிடித்துக் கொடிபிடித்துத் தம்பட்டம் அடிப்பார்!
சூள்பிடித்த உரைபடிப்பார்! சூழ்வருவார் ஊரைச்
சொறிபிடித்த நாய்க்கூட்டஞ் சுற்றுவது போலே!
கோள்பிடித்த குறைபடிப்பார்; கூசார்;நள் ளிரவிற்
குடைபிடிப்பார்; இவ்வண்ணங் கும்பிவளர்ப் பாரே!

பேர்தெரியச் செய்யாமல் பின்வழியே நுழைந்து
பெருமையுறத் தலைமையிடம் பிடிப்பவரும் உண்டு
''தேர்தலிலே வெல்லுதற்குத் திருட்டுவழி என்றால்
தேவைகளை நிறைவேற்றத் திருடுவதும் தப்போ?
யார்தலையில் அரைக்கின்றீர் மிளகாயை?'' என்றே
யாரேனும் ஓர்ஏழை கேட்டுவிட்டாற் போதும்!
''பார்!தலையைச் சீவுகிறேன்!'' என்றவனை வெருட்டிப்
பலகாலுந் தீங்குசெயத் தலையாலே நிற்பார்!

முந்தியநாள் வரைநமக்கு முகந்தெரியா ஒருவர்
முழங்கிடுவார் மேடைதொறும்! பொதுநலத்துக் கென்றே
வந்துபிறந் தவர்போல வாய்ப்பந்தல் இடுவார்!
மந்திரமோ இதுவென்று வாயடைக்க வேண்டா!
முந்துபெரு வியப்பில்லை! இதுதேர்தல் விரகு!
முழங்குமவர் வீறார்ப்புப் பேச்செல்லாம் நாளை
உந்துவண்டி நடத்துவதற் குரிமைதரும் ஓலை
ஒன்றிரண்டைக் கைக்கொள்ள ஊழ்க்குமுதல் ஐயா!

வானத்தை வில்லாக வளைத்திடுவோம் என்பார்!
வறுமணலைக் கயிறாகத் திரித்திடுவோம் என்பார்!
கானத்து மலர்ச்சாற்றைக் கால்வாயாய்ப் பெருக்கிக்
கடல்நடுவே பொன்விளைத்துக் காட்டிடுவேம் என்பார்!
சீனத்தா னுகட்டும்! வேறெவனு கட்டும்
சீட்டளித்தால் எங்களுக்கே, விரட்டிடுவோம் என்பார்!
மானத்தைக் கடைச்சரக்காய் மாற்றிவிட்ட இவர்தம்
மாற்றங்கள் முகிற்கூட்டத் தோற்றங்கள் ஐயா!

ஆட்சிமுறை அத்தனையும் ஆய்ந்தறிந்த பின்னே
அடிமட்டத் துள்ளாரும் நிகர்உரிமை காண
மாட்சிமிகு பேரறிஞர் வகுத்தளித்த தேர்தல்
மந்தியின்கைப் பூமாலை ஆனதுவே இங்கே!
காட்சிக்குங் கருத்துக்குங் கடுநஞ்சாய் மாறிக்
கடைகெட்டுப் போனதுவே! இப்போக்கி னின்று
மீட்சியுற வழியிலையோ? மீளவழி கண்டு
மெய்யாகத் தமிழ்நாடும் உய்யாதோ நன்றே!

○

ஆடி இதழ்த் தொடர்ச்சி.

உயர்வு நவிற்சியா?

புலவர். கு. திருமேனி, பி. ஏ; பி. ஓ. எல்.
தேசியக் கல்லூரி, திருச்சி.

அடுத்து, கரிகாலன் இளமை நெடுஞ்செழியன் இளமை போல் விளக்கமுறையில் (Description) உயர்வு நவிற்சியால் ஓவியமென வரைந்து காட்டப்பட்டது என்று எழுதுகிறார், திரு. சிவஞானம் அவர்கள். அவர் கூற்றுப்படி இருபத்தைந்து ஆண்டுகட்குப் பிறகு தானே இவர்கள் ஆட்சியை ஏற்றிருக்க வேண்டும். இருபத்தைந்து ஆண்டுகட்குப் பிறகு களிற்றின் இயலிவந்த நெடுஞ்செழியன் எப்பொழுது கிண்கிணியைக் களைந்தான்? ஒண் கழல் தொட்டது எப்பொழுது? குடுமி களைந்தது எப்பொழுது? வேப்பந்தார் சூடியது எப்பொழுது? போர் என்றதும் மொட்டையடித்துக் கொண்டானா? பால் விட்டது எப்பொழுது? அயினி அயின்றது எப்பொழுது? பொதுவாக எல்லாரும் இருபத்தைந்து அகவை வரையில் பாலுண்பார் களோ? பால்விட்டு அயினியும் இன்று அயின்றனனே என்றால் அப்படித்தானே பொருள்!

வண்ணனை என்பது இருப்பதை அழகுபடக் கூறுவது ஆகும். காலினையும் மொட்டைத் தலையையும், பால் வழிந்த வாயையும் பார்த்து அவற்றில் முறையே கிண்கிணியையும் வேப்பந்தாரையும் அயினியையும் சேர்த்து வண்ணித்தாரோ புலவர்? இப் பால் வழியும் குழந்தை வயின் வயின் வந்த வம்ப மள்ளரை அழுந்தப்பற்றி விசும்பில் ஆர்ப்பெழ அவர்களைக் கவிழ்ந்து நிலஞ்சேரா அட்டதோ? இப்படி ஒரு வியத்தகு குழந்தை இருந்து வண்ணிக்கப் பெற்றதாகப் புற நானூற்றில் இடமில்லை. மறவன் செய்ததை இங்ஙனம் குழவியின் செய லாக்கி வண்ணித்து மகிழ்ந்ததுமில்லை.

அடுத்து, நண்பர், "வென்றவர்க்கு எதிரில் தோற்றவர் நாணி நிற்கையில், தோற்றவர் மனம் புண்படும்படி நகைத்தல் இக்கால வழக்கமாக இருக்கலாம். கழகப் புலவர் மரபிற்கு அஃது ஒத்தது ஆகுமா?" என்கின்றார். அதோடு நில்லாமல் இதற்கு மேற்கோளாக,

> "சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
> குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
> இலம்பாடு நாணுத் தருமெனக்கு"

என்ற அடிகளை வேறு எடுத்துக்காட்டியுள்ளார்.

இதற்கு மறுப்பாக, முதலில், கழகப் பாட்டில் ஒன்று காட்டு வேன். சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணுேடு திருப்போர்ப்புறத்துப் பொருது, பற்றுக் கோட்பட்டானைச் சோழன் "தொடர்படு ஞமலியின் இடர்ப்படுத்திரீஇயது" எதனுல்? பகைவன்பால் கோட்பட்டானை நாய்போல்பற்றி வந்ததும் சிறை செய்ததும் தமிழ் மறவன் செய்யாமல் யார் செய்தது? நாய்போல் இழுத்து வரும்போது நகைத்தால் திரு. சிவஞானம் அவர்களின் தமிழ் மரபு இடைநின்று வாய்பொத்தச் செய்யுமோ?

அடுத்துச் சிலம்பினின்றும் ஒன்று காட்டுவேன். சேரன் செங்குட்டுவன் தன்னிடம் தோற்றவர் மட்டுமன்றிக் கொல்லாக் கோலத்து உயிருய்ந்து பிழைத்தோரை என்ன செய்தான்? கல் சுமத்திக் கொடுமை செய்தானே அது யாருடைய மரபு?

இன்னும் இதுபற்றி ஒரு விளக்கம் சொல்லுகிறேன். செங்குட்டுவன் கனக விசயர்களைப் பிடித்துக் கல் சுமத்தியதோடன்றி அவர்களைப் பாண்டியனிடத்திலும், சோழனிடத்திலும் காட்டுமாறு செய்கின்ருன். அவர்கள் அப்பொழுது செங்குட்டுவன் மறத்தைக் குறைத்துப் பேசுகின்றனர். இது போதுமே என்பீர்களோ? தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன்னை இளைஞன்என்று இகழ்ந்தோரைக் கொல்வதாக வஞ்சினம் உரைக்கவில்லை. அவர்களை, முரசமொடுஒருங்ககப் படுப்பேன், அவ்வாறு செய்யேனுயின் இவ்வாருவேன் என்று தான் வஞ்சினம் உரைத்தான், அதுபோலவே சேரன் செங்குட்டுவனும் தம்மை இகழ்ந்த,

"அமையா வாழ்க்கை யரைசர் வாய்மொழி
நம்பா லொழிகுவ தாயி னாங்கஃ
தெம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந் தருஉம்
வடதிசை மருங்கின் மன்னர் முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகின். (சிலம்பு 26, 10-15)

என்று வஞ்சின முரைக்கின்ருன். அஞ்சினர்க்களிக்கும் அடுபோர் அண்ணல்கள் இருவரும் வஞ்சினத்தை மரபறிந்தே நிறைவேற்றுகின்றனர். அதனுல் மரபறியாது, தமிழ மறம் புரியாமல் பேசவில்லை.

"பகைவர்க்கு அவன் இளமை ஒன்றே தெரியும். அதனுல் அவன் வலிமையை அறியாது இகழ்ந்தனர்; இகழ்ச்சி உற்றனர். புலவர்க்கு இரண்டும் தெரியும். ஆனுல் ஆற்றலையே பெரிதும் பாடினர். இளமையைப்பாடும் இன்றியமையாமை ஒரு முறை கிடைத்தது. அப்பொழுது அவை வியந்தும் மிகைப்படுத்தியும் ஒருவர் பாடினுர் எனவே, நெடுஞ்செழியன் இளைஞன் என்பதும், களிறன்ன தோற்றம் கொண்டவன் என்பதும், வெம்போர்

மறவன் என்பதும் தெளிவாயின'' என்று திரு. சிவஞானம் எழுதியுள்ளார். இதில் அவர் என்ன எழுதியுள்ளார் என்பதை அறிஞர்கள் உற்று நோக்குவார்களாக. புலவர்கட்குப் பாண்டிய யனின் ஆற்றலும் இளமையும் தெரியுமாம்; இளமையைப் பாடும் இன்றியமையாமை ஒரு முறை கிடைத்ததாம். அஃதென்ன இன்றியமையாமையோ புரியவில்லை. அவன் இளமையைப் பாடுவதன்றி வாளா இருக்க முடியாமை வந்ததாம். ஏன்? பாடாது போனால் என்ன அமையாது போகும்? களிற்றின் தோற்றங் கொண்டவனை வியந்து பாடுவதென்றால் அவன் திணி தோளை, மலைக்கு உவமையாக்கிப் பாடலாம் எழு அல்லது கணைய மரத்திற்கு உவமையாக்கிப் பாடலாம். இஃது இயல் பைப் பாடுவது. வியப்பது என்பது எதிர்பாராத ஒன்று நிகழ்வழி பிறக்கும் மெய்ப்பாடாகும் திரு. சிவஞானம் அவர்களின் சொற்றொடர்களின்படி களிறன்ன தோற்றங் கொண்டவன் பகையழிப்பதில் வியப்பேது? அதில் பிறக்கும் நயப்பென்ன? வெம்போர் மறவன் வெம் போர்தானே புரிவான். இதில் வியப்பு வேண்டுமாயின் கோழையாய்ப் புறக்கிட்டால் வியப்புண்டு. அது நிகழாத வழி அதில் இன்றியமையாமை நிகழ்வானேன். பாண்டி யன் ஒருகால் புலவரைக் கட்டாயப்படுத்திப் பாடென்று பணித்த இன்றியமையாமையோ அது?

''கரிகாலனுக்கும், நெடுஞ்செழியனுக்கும் உள்ள ஒற்றுமை யையும் இங்கு நோக்குதல் வேண்டும். இருவரும் இளமையில் பகைமுடித்தோர். இருவரும் கருவிலே திருவுடையோராய்- பிற வியிலேயே பேராற்றல் உடையோராய் விளங்கி வெற்றிபெற்று நின்றகாலை அவர்களின் இளமை புலவர்களால் வியக்கப் பட்டது. அதனை 'மிகைப்படுத்திப் பாடினர்'' என்று ஒப்புமை எழுதியுள்ளார். இருவரும் கருவிலே திருவுடையோராய், பிற வியிலேயே பேராற்றல் உடையோராய் விளங்கி வெற்றி பெற்று நின்றகாலை அவர்களின் இளமை புலவர்களால் வியக்கப்பட்ட தென்றால் இருவரும் குழவியாக இருந்து போரிட்டது வியப்பைத் தந்ததா? அல்லது இருபத்தைந்து முப்பது ஆண்டுகள் கழிந்த வர்களைக் குழவியாக்கிப் பாடியது வியப்பைத் தந்ததா? புலவர்கள் பிறவியில் போற்றல் படைத்தோரைப் பாராட்டிப் பாடுவது இயல்பன்றி வியப்பாகுமா?

கிண்கிணி களைந்த காலில் கழல் கட்டி வந்தவனைப் பற்றிய செய்தியை உயர்வு நவிற்சியாக்கி மகிழ்வதென்றால், கழல் களைந்து கிண்கிணியைக் கட்டித்தான் சுவைக்க வேண்டுமோ? களிற்றின் இயலி வந்தவனைத் தளர் நடை நடக்க விட்டுத்தான் சுவைக்க வேண்டுமோ? குடுமி களைந்த நுதலினனைக் குறுமயிர் முளைக்கவிட்டுத் தான் சுவைக்க வேண்டுமோ? சோறுண்பவ னுக்குப் பாலூட்டிச்சுவைக்க வேண்டுமோ? இவ்வுயர்வு நவிற்சி யால்தான் பொருட்சிறப்பு உண்டோ? யான் இச் சிக்கல்களுக்கு

விளக்கம் தருதற்கு அவனைப்பற்றிய புறப் பாடல்களில் கிடைத்த சூழ்நிலையை வைத்து விளக்கம் தந்தனேயன்றி எனக்காக ஒரு சூழ்நிலையை யானே அமைத்துக் கொள்ளவில்லை.

''இளையன் இவன் என்று அண்மைச் சுட்டாகக் கூறியதை நோக்கும் பொழுது இப் பாண்டியனும் சேர சோழரும் ஒருங்கு சேர்ந்த ஞான்று இவனைப்பற்றி அவர்கள் அங்ஙனம் சுட்டிக் கூறியுள்ளனர் போலும்''. ''இளையன் என்ற செய்தியைப் பகையரசர்கள் தெரிந்து வைத்திருந்தமை தெரிகின்றது'' இவ்வாறு இரண்டு இடங்களில் ஆராய்ச்சியாளர் முரண்படுகிறார்'' என்று எழுதியுள்ளார் திரு. சிவஞானம் அவர்கள். மேல்குறித்த விளக்கங்களில் தெளிவு பிறந்திருக்குமாதலின் அதனை விடுக்கின்றேன். முரண்படுவது என்பது நிலைத்த அழுத்தமான படிப்பில்லாதவர்கள் செய்யும் வேலை. நான் தெளிந்ததை எழுதியதால் முரணிருக்க வாய்ப்பில்லை.

இளையன் இவன் என்று அண்மைச் சுட்டாகக் கூறிய அரசர்கள், அவன் உறுதுப்பினைத் தெரியாததால் தம் உடல் சினம் செருக்கித் தங்களைப்போல் வந்து மாட்டிக்கொண்டனர். போர்க்களத்தில் அவன் தன் வலிகாட்டி அகப்படுத்தினான். அப்பொழுது புலவர் பகைவரை நோக்கி 'இளையன் இவன்' என்று இகழ்ந்து கூறிப் பகைத்து வந்தீர்களே. இளையனா இவன். அவ்வாறாயின் இத்தகைய இளைஞனோ இவன் என்று கேட்பவர் இளைஞன் என்பதற்கு எள்ளல் குறிப்பில் ''கிண்கிணி களைந்த கால்......... என்று கூறுகின்றார். இதில் முரண்பாடு ஏது?

''யாதும் ஊரே யாவருங் கேளிர்'' என்ற பாட்டை வேறு ஆராய்கிறார். ''மனைவியும் தாயும் பெண் போலத்தான் இருக்கின்றனர்'' என்பது போலத்தான் அப் பாட்டும் இப் பாட்டை ஒத்திருக்கின்றது என்பது.

> ''உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
> அச்சாணி அன்னா ருடைத்து''

என்ற திருக்குறளுக்கு நெடுஞ்செழியனும் அவனைப் பகைத்தோரும் நல்ல எடுத்துக்காட்டுகளாவர். நெடுஞ்செழியன் உருவு கண்டு பகைவர்கள் எள்ளாதிருக்க வேண்டும் என்று புலவர் பகைவேந்தர்கட்கு அறிவு கொளுந்துமாறு அப் பாட்டிற்குப் பொருள் கோடல் வேண்டும்.

உயர்வு நவிற்சி என்று சொன்னதால்வந்த ஊதியமென்ன? செக்கு மாட்டினைப் போலச் சுழன்று சுழன்று இத்தனை ஆண்டுகளாகச் சொன்ன செய்திதானே அது. அப்பாட்டில் குறித்தது உயர்வு நவிற்சியன்று உண்மைதான் என்று பாண்டியனைப் பற்றிப் பாடிய அனைத்துப் பாட்டுகளையும் ஒப்பு நோக்கி இலக்கண இலக்கிய மரபு பிழையா வண்ணம் புத்துரை வழங்கியதில் வந்த கேடென்ன? ○

ஆங்கில மொழியாக்கம்

Both weigh not more.

This world encircled by the Surging oceans great,
And the excellent "Puth'el"-country rarely to be won
Both ta'en together weigh not more to us
Than the sweet embrace of this girl
With flower-like, blackened eyes, complexion gold
And hips with wondrous lines.

KURUNTHOKAI 101.

இரண்டுந் தூக்கிற் சீர்சாலாவே!

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்,
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே;
பூப்போல் உண்கண், பொன்போல் மேனி,
மாண்வரி அல்குல் குறுமகள்
தோண்மாறு படூஉம் வைகலொ டெமக்கே!

குறுந்தொகை—௧0௧.

ஆங்கில ஆக்கம்:

ம. இலெ. தங்கப்பா, எம். ஏ., பி. டி.

தொடர்-2 மெய்யறிவுக் கட்டுரை.

அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு.

- மெய்ம்மைப்பித்தன் -

முன்னுரை (தொடர்ச்சி)

சமயங்கள்தாம் யாவை? அவை என்ன பகர்கின்றன? அன்றாட வாழ்க்கைத் தேவைகள் என்று நாம் கண்டுகொண்டுள்ளோமே அவைபற்றிச் சமயக் கணக்கர்கள் கூறுவது என்ன? அவர்களுக்கு நம் உணவைப் பற்றியும் உடையைப் பற்றியும் உறையுளைப் பற்றியும் எண்ணி முடிவு கட்டப் போதுமான ஈடுபாடுகள் உளவா? அவர்தம் சமயநூல்கள் தாம் இவைபற்றி ஏதேனும் குறிப்பிடுகின்றனவா? ஏதாவது ஒரு சமய நூல் இங்கொன்றும் அங் கொன்றுமாக அவ்வாறு குறிப்பிட்டிருந்தாலும், அக் குறிப்புகளுக்கேற்ப, அவற்றைப் பின்பற்றுவதாகக் கூறித் திரியும் சமயக் குரவர்கள், நடந்து காட்டுகிறார்களா? ஏழை எளியவர் தம் உயிர் வாழ்க்கை இத்துணை இரங்கத்தக்கதாக இருக்கின்றமைக்கு முன் செய்வினையே காரணம் என்பதாக விளக்கம் கூறிவரும் சமய ஆசிரியர்கள், அவர் நிலைகளை உயர்த்துதற்கு ஏதேனும் பாடுபடுகின்றார்களா? ஆம், பாடுபடுகின்றோம் என்று அவர்கள் கூறுதற்கு முன்வருவார்களானால், அவ்வகையில் அவர் செய்வது என்னவாக இருக்கும் என்று கருதுகின்றீர்கள்? ஏதேனும் சமயநூல் ஒன்றினை அவ்வேழை எளியவர்தம் கைகளில் திணித்து, ''நீங்கள் இறைவனின் பிள்ளைகள்; முன்பிறப்பில் செய்த கரிசு (பாவங்)களின் பயனாய் இவ்வாறு துன்புறுகின்றீர்கள்; இவ்வேடுகளில் உள்ள சமயக் கடப்பாடுகளைத் தவறாமல் படித்து வாருங்கள்; நாள்தோறும் ஆண்டவனின் அரண்மனையான கோவில்களுக்கு வந்து போங்கள்; அங்குள்ள இறைவனிடம் உள்ளம் கசியுமாறும், இரங்கி வருமாறும், இறைவனே, எங்கள் கரிசுகளைப் போக்கி, நல்ல நிலைமையிலே எங்களை உய்வியும்; நாங்கள் ஏதுமற்ற புலம்பன் (ஆன்மாக்)கள்; மாசுபடிந்த எங்களை உங்கள் அருள் நீரால் கழுவித் தூய்மைப் படுத்தும் என்று இறைஞ்சி வேண்டிக் கொள்ளுங்கள்'' என்று ஒரு சமயச் சொற்பொழிவே நிகழ்த்துவார் சமயக் கட்டுப்பாடுகட்கு உட்பட்டு வராமற் போவீர்களானால் உங்களைப் பலவாறாக இழித்தும் பழித்தும் பேசி, மீண்டும் நீங்கள் 'பேய்களின் ஆட்சிக்கே உட்பட்டுப் போவீர்களாக' என்று கடுமொழி உரைப்பார்கள்.

அவர்களுக்கு ஏற்பட்ட கவலையெல்லாம் நீங்கள் முன்னுக்கு வரவேண்டும் என்பதன்று; நீங்கள் மேலும் மேலும் இவ்

வுலக வாழ்க்கையில் எவ்வாறு உயர்ந்து போகவேண்டும் என்பதன்று; மூடிக்கிடக்கின்ற உங்கள் அறிவுக் கண்களைத் திறந்து விடவேண்டும் என்பதைப் பற்றியோ, தூங்கிக்கிடக்கின்ற உங்கள் உள்ளங்களைத் தட்டி யெழுப்ப வேண்டும் என்பதைப் பற்றியோ அவர்களுக்குக் கவலையில்லை. இன்னுஞ் சொன்னால் அவற்றிலிருந்து நீங்கள் விழிப்படைந்து விடவே கூடாது என்பதே அவர்கள் விருப்பமும் ஆகும். அவர்களுக்குற்ற கவலையெல்லாம் தம் சமயம் சரிந்து போகக் கூடாதென்பதும், தம் புனைவு (வேஷம்) கலைக்கப்பட்டுவிடக் கூடாது என்பதுந்தான். ஆவின் தோல் போர்த்த வரிப்புலிகளாய் ஆட்டுக் கிடைகளை ஒவ்வொன்றாகத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்பதே அவர்தம் உள்ளக்கிடக்கையாகும். பள்ளிக்கூட வகுப்பறையில் பாடப் புத்தகங்களில் இல்லாத கேள்விகளைக் கேட்டு ஆசிரியரைத் திணற அடிக்கும் மாணவர்கள் 'வாயாடிகள்' என்றோ, 'அடங்காப் பிடாரிகள்' என்றோ, 'ஆசிரியர்க்கு மிஞ்சிய மாணவர்கள்' என்றோ, பல்வாறாகப் பெயர்சூட்டப் பெற்று, இழிவாகப் பேசப்பெற்றுச் சிற்சிலகால் தண்டனைகளையும் பெற்றுக் கொள்வதில்லையா, அவர்களைப் போலத் தம் சமயக் கொள்கைகளுக்கு (கொள்கைகளா அவை...?) மாறுபட நடக்கும் தன்முனைப்பாளர்கள் சிலரை அச்சமயக் கூட்டத்திலிருந்தும், அவர்தம் ஊர் உலக நடவடிக்கைகளிலிருந்தும் பிரித்துவைத்து, அவர்களை இழித்தும் பழித்தும் வருகின்றனர். அவ்வாறு விலக்கப்பெற்ற அறிவுத் துடுக்கான ஒருசிலர் தம் நிலையினின்று மாறுபட்டும், இவர்களை இழித்தும் பழித்தும் பேசிய சமயக் குரவர்களுக்கு வேறுபட்டும் போகத் துணிந்து விடுகின்றனர் இவ்வெதிர்ப்பாளர் தம்மை அச்சமய ஆசிரியர்கள் பொருட்படுத்துவதில்லை. ஆனால் மிக விழிப்போடும் அக்கறையோடும், அவர்களின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடக்கும் மிகப் பலரை, அவ்வெதிர்ப்பாளர் பக்கம் நெருங்க விடுவதும் இல்லை. மிகவும் சிறிதான ஒரு சிற்றூரிலிருந்து மிகவும் பெரிதாக விரிவடைந்துள்ள ஒரு நகரம் வரை, மிகவும் பிற்காலத்ததான ஒரு சமயத்திலிருந்து மிகவும் பழங்காலத்ததாகிப் பெருகியதொரு சமயம் வரை உள்ள யாவும் நான் மேலே கூறப்பட்டுவந்த கூற்றுகளுக்கு இடங்கொடுப்பனவாகவே இருக்கின்றன.

சமயத்தைப் பொறுத்தவரையில் அதன் சார்பில் கூறப்படுவன வெல்லாம் அச்சமயத்திற்கான வளர்ச்சிக் கருத்துகளே! சமயக் குரவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சார்பில் கூறப்படுவனவெல்லாம் அகப்புறச் சமயப் போராட்ட மாறாட்டங்களே! இத்தகைய சமயங்களில் சிக்குண்ட ஒரு பேதையுள்ளத்தின் அவலத்தை நான் இங்கெடுத்துக் கூற வேண்டுவதில்லை. இருபுறமும் இடைச் சுவர்கள் வைத்துச் செப்பனிடப்

பெற்ற நல்லதொரு வழியில், கண்களை நன்ருகக் கட்டப்பெற்ற ஒருவனை இழுத்துச் (அழைத்து அன்று) செல்வதைப் போன்ற காட்சியை உங்களால் கற்பனை செய்து கொள்ள முடியுமா என்று முயன்றுபாருங்கள். கண்கள் கட்டப்பட்டவன் கதிரவன் ஒளி படுமாறு அமைந்த வெட்டவெளியில்தான் இழுத்துச் செல்லப்படுகின்ருன் எனினும், அவனைப் பொறுத்த வரையில் அவன் இருளிலேயே நடந்து போகின்ருன் அவனைச் சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பவர்களுக்கும் அவன் இருளில் நடப்ப தாகப் புலப்படவில்லை. உடலை வறுத்தெடுக்கும்படியான துல்லிய கதிரவன் ஒளியில்தான் அவன் நடந்து செல்வதாக அவர்கள் நினைக்கின்றனர் உண்மையும் அதுதான். ஆனல் அவன் புறத்தே ஒளி நிறம்பி இருந்தாலும், அகத்தேயும் அவன் கண்கள் கட்டப் பெருத பொழுது அவன் கண்ட காட்சிகளின் மங்கிய ஒளி மறையாதிருந்தாலும், அவன் மேற்கொண்டு எதனையும் உணர்ந்து கொள்ளத் திறனற்றவனுக, வேறெதைப் பற்றியும் கருத்தில் போட்டுக் கலக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள இயலாதவனுக நடந்து போகின்ருன். அவன் கால்கள் முன்னர் நடந்த கரடுமுருடான தரையில் நடந்து போகவில்லை. நன்ருகச் செப்பனிடப்பெற்ற வழவழப்பான தரை அவனுக்கு ஒருவகை நம்பிக்கையை ஊட்டுவதாக இருக்கின்றது. அவன் கண்கள் கட்டப்பெற்றிருந்தாலும், மேற்கொண்டு பல காட்சிகளைக் காண முடியாமல் இருந்தாலும், அக்கண்களின் கட்டு தளர்த்தப் பெற்று விலக்கப்படும் பொழுது அவன் நேரிடையாக இறைவ னின் உருவத்தையே பார்க்க முடியும் என்று சொல்லி வைக்கப் பெற்றுள்ளான் அந்த வேட்கையோடு அவன் நடப்பதால், அவன் தன் கண்களுக்குப் போடப்பெற்ற கட்டுகளைப் பற்றிக் கவலைப்படுபவனுக இல்லை. மாருக அதைப்பற்றிய மகிழ்ச்சியும், பெருமையும் அவன் உள்ளத்தில் நிரம்பி வழிகின்றன. அவ னுக்குப் பக்கத் துணையாக இருபுறமும் கைபிடிச் சுவர்கள் இருப் பதால் தட்டுத்தடுமாருமல், விரைவாக நடந்து போக அவனுல் முடிகின்றது. அவனை இட்டுச் செல்லும் சமய ஆசிரியர் அவனை 'என் பின்னே வா' என்று சொல்லிக் குரல் கொடுத்ததிலிருந்து அவன் நடந்து கொண்டிருக்கின்ருன். அவரின் மறு கட்டளை என்னவாக இருக்குமென்றுகூட அவன் கவலைப்படுவதில்லை. கண்களைக் கட்டிக்கொண்டு நேரே அவர் பின்னே நடப் பதுதான் அவன் கடமை, சமயம், கொள்கை எல்லாம் என்று கருதுகின்ருன்.

இக்காட்சிகளுக்கு மாருக வேறுசில சமயக் கூடங்களில் நடக்கலாம். ஆனல் அங்கும் இத்தகைய பக்கச் சுவர்களும், கண்கட்டு வேடிக்கைகளும் நடக்கத்தான் நடக்கும். இதை நீங்கள் மறுக்கவே முடியாது. போலித்தனமாக இயங்கும் எவ் வகைச் சமயத்துக்கும் கட்டுப்பாடுகளும், குருட்டுப் போக்கு

களும் இருக்கவே செய்கின்றன. அக்கட்டுப்பாடுகளும், குருட்டுப் போக்குகளுமே அவ்வச் சமயங்களாக மக்களுக்கு அறிமுகப் படுத்தப் படுகின்றன. இவற்றில் என்ன சிறப்பு என்றால், எந்த ஒரு சமயத்தில் கட்டுப்பாடுகள் மிகுந்து குருட்டுப் போக்குகள் நிறைந்து காணப்படுகின்றனவோ அச்சமயமே மிகவும் கவர்ச்சியானதாக இருக்கும். மக்கள் கூட்டம் வளர வளர ஆரவாரமும் நெருக்கமும் மிகுந்து கொண்டே போகும். அக்கால் அவர்களுக்கு அக் கட்டுப்பாடும், குருட்டுப் போக்குமே அமைதியும் இன்பமும் தரவல்லனவாக இருக்கும். எல்லாரும் ஒன்றாக இயங்குவதில் மக்களுக்கு ஒரு போலித்தனமான நிறைவு. நாம் வாங்கிய பொருள்போலவே (அது நல்லதோ கெட்டதோ உயர்ந்ததோ தாழ்ந்ததோ) நம் நண்பரையும் வாங்கச் சொல்லி, அல்லது அவர்க்கும் வாங்கிக்கொடுத்து நாம் நிறைவடைய வில்லையா? அச்செயலால் அவரும் மகிழ்வடைவதில்லையா? அப்போக்கு எதனைக்காட்டுகின்றது என்கின்றீர்கள்; கட்டுப்பாட்டையும், குருட்டுப் போக்கையும் தாம். இதைவிட வேறோர் எடுத்துக் காட்டு உங்கட்கு ஏற்றதாக இருக்கும். பட்டாள இராணுவ) த்தில் ஒரே உடை, ஒரே உணவு, ஒரே நடை, ஒரே போக்கு இருக்கின்றனவே இவை எதனைக் காட்டுகின்றது? நாகரிக முதிர்ச்சியை என்று நீங்கள் கூறுவீர்கள். இதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நாகரிக முதிர்ச்சி இது வன்று! போலி நாகரிக ஆரவாரத்திலிருந்து முளைத்த ஒரு போலியான கட்டுப்பாடு. இந்தக் கட்டுப்பாடு எதற்குப் பயன்படும் என்கின்றீர்கள்? இத்தகைய ஒரே உடை, ஒரே நடை, ஒரே போக்கு இவற்றைக் கொண்ட வேறொரு பட்டாளக் கூட்டத்தை எதிர்க்கத்தான் பயன்படும். உண்மையில் அதற்காகத் தானே அத்தனைக் கட்டுப்பாடுகளும் ஒழுங்கும் அவர்பால் செப்பனிடப் பெற்று இருக்கின்றன? இதேபோல் தான் சமயக் கட்டுப்பாடுகளும், குருட்டுப் போக்குகளும் (குருட்டுப் போக்கு என்பது தன் முன்னே போவோன் போக்கில் தான் இயங்குவது; தன் கண்களைக் கட்டிக்கொண்டு, தன் முன்னவன் கைகளைப் பிடித்துக் கொள்வது) வேறொரு சமயக் கட்டுப்பாடுகளையும் குருட்டுப் போக்குகளையும் முறியடிப்பனவாக அமைந்துள்ளனவே யன்றி, தன் சமய மக்களை முன்னேற்றுவதாக இல்லை. ஆழ்ந்து பார்ப்பின் வேறு வேறு நோக்கும் போக்கும் கொண்ட உள்ளங்களும் அறிவும் கொண்டார் ஒரே உடை, உணவு, நடை, செயல்களால் ஒன்றுபடல் சாலுமா? அவ்வாறு ஒன்றுபடுதல் தான் நல்லதா? இதுதான் நாகரிகத்தின் உயர்ச்சி என்றால் இந்த நாகரிகத்தை நம்மினும் கொக்குக்கூட்டங்களும், செம்மறியாடுகளும் எறும்புகளும், காகங்களும், பாலை நிலத்தில் வரிசை வரிசையாகச் செல்லும் ஒட்டகங்களும், கானில் கூட்டங் கூட்டமாகத் திரியும் மான்களும் அன்றே உண்மையாக என்றே பெற்றிருக்கின்றன.

இத்தகைய பட்டாள ஆட்சி நாகரிகமன்று. இக்கால் இம் முறைகளே சிறந்ததென்று பள்ளிகளிலும், பொது நிறுவனங் களிலும் புகுத்தியிருக்கின்றனர். இப்போக்கு மக்கள் வாழ்க் கைக்கே இன்றியமையாததான ஒற்றுமையை வலியுறுத்த வில்லையா என்று உங்களில் சிலர் கேட்கலாம். அவ்வொற்றுமை யையும், மக்கள் இணைப்பையும் ஏற்படுத்தும் ஒரே நடையுடை செயல்களைக் குருட்டுப் போக்கு என்றியம்பின் உயர்ந்தபோக்கு தான் என்ன என்று நீங்கள் ஆர்ப்பரிக்கலாம். ஆனால் நான் கூறும் ஓரிரு சொற்களை அமைதியுடன் கேட்க வேண்டு கின்றேன்.

நீங்கள் கூறவரும் ஒற்றுமை என்பதும் இணைப்பு என்பதும் என்ன? வெறும் ஒற்றுமையிலும் இணைப்பிலுமா இவ்வளவாகச் சிறந்து விரிந்த மாந்தயினத்தின் இறுதி நிலை அடங்கியிருக்கின் றது? ஒற்றுமை என்பதற்காக எல்லா மக்களையும் ஒரேபோக்கில் இயக்குவதால் அவ்வெல்லாராலும் ஏற்படும் தனித் தனிப் பயன் களை நாம் இழந்து போகின்றேமா இல்லமா? மேலும் நாம் ஒற்று மையையும் இணைப்பையும் வளரச் செய்வதெல்லாம் இன்னொரு கூட்டத்தை முறியடிக்கத்தானே யன்றி, நம்மைநாம் வளர்த்துக் கொள்வதற்காக என்று நம்மில் யாரும் கூறவில்லையே. மேலும் நாம் ஒற்றுமை இணைப்பு என்று கூப்பாடு போடுவது, நம் நடை யுடை செயல்களில் மட்டும்தான் அமைகின்றனவேயன்றி உள் ளத்தின் அளவில் அவற்றைக்கொண்டு செல்ல வேண்டும் என் பதே அதன் குறிக்கோள் என்று எவரும் கருதவில்லையே. 'இல்லை இல்லை' உள்ளத்தின் அளவாக அவற்றைக் கொண்டு செல்வதுதான் நோக்கம்; அதற்கடிப்படையாகத்தான் நடை யுடை செயல்களிலெல்லாம் ஒருமைப் பாட்டைக் கொணர முயற்சி செய்யப் படுகின்றது' என்று கூறுவீர்களானல், சமயக் குரவர்களைப்போல நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதல்லால், நம்மைப் பின்பற்றுபவர்களையும், நமக்குப் பின்னல் வருபவர் களையும் கூட நாம் ஏமாற்றி வருகின்றேம் என்பதாகவே எனக் குப் படுகின்றது. வெள்ளைப் பஞ்சில் துணி நெய்து, அத்துணிக் குச் சாயம் ஏற்றுவதாக நம் செயல்களும், சமயங்களும் இருத் தல் கூடாது. நம் சாயம் வெளுத்துப் போகும் பொழுது அவ்வி யற்கையான வெள்ளை நிறமே அத்துணிகளுக்கு உரியதாக இருக்கும். நம்முடைய முனைப்புகள் மக்கள் இனங்களை அடிப் படையிலேயே மாற்றிக் கொண்டு போவதாக இருத்தல் வேண்டும். இனிப்பில்லாத ஒரு பண்டத்திற்கு நாம் இனிப்புச் சேர்ப்பதாக இருத்தல் கூடாது. பண்டத்தையே இனிப்புள்ள தாகவும், காரமுள்ளதாகவும், இவை யிரண்டு மற்றதாகவும் விளைவித்தல் வேண்டும். நமக்கு மிகவும் தேவையான மாற்றங் களை உள்ளத்தின் அளவினவாகவும், அறிவின் அளவினவாக வும், உணர்வின் அளவினவாகவும் அமைத்தல் வேண்டும்.

இந்நிலைகளையெல்லாம் சமயக் கணக்கர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு வேறுபாடுகளே பிடிக்காத ஒன்று கும் ஒற்றுமை என்பதையும் அடிப்படையிலேயே விளைவிப்பது அவர்களுக்குக் கூடாத செய்கை. ஆனால் சமயத்தைப் பொறுத்த வரையில், அவர்தம் கட்டுப்பாடுகளையும் குருட்டுப் போக்குகளை யும் குழந்தைப் பருவத்திலேயே வளர்த்துக் கொண்டிருக் கின்றார்கள். இவ்வாறு குழந்தைப் பருவத்திலேயே கண்களை யும், காதுகளையும், மனத்தையும் அடிமைசெய்யும் இப்போக்கு எப்படி ஏற்பட்டது? இதற்கும் காரணங்களும் கருமங்களும் உள்ளன அவைப்பற்றி யெல்லாம் இவ்விரிந்த கட்டுரையில் ஆராயப் பெறும். அவ்வுண்மையை வெளிப்படுத்தப் போகும் நாம், அவ்வுண்மைக்குத் தடையாக விருக்கும் இக் கட்டுப்பாடு களுக்கும் குருட்டுப் போக்குகளுக்கும் உட்படலாமா?

ஆனால், நான் இம் முன்னுரையின் தொடக்கத்தில் 'நீங்கள் என்பின்னே அமைதியாக வாருங்கள்' என்று மட்டும் சொல்லி யிருக்கலாமா? அவ்வாறு சொன்னது கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தினதாகாதோ வெனின், ஆகாது. நான் உங்களைத் திறந்த உள்ளத்தோடும், அங்காந்த அறிவோடுந் தாம் வரச் சொன்னேனே யன்றி, மூடிய உள்ளத்தோடும், திணித்து வைக்கப்பெற்ற அறிவோடும் வரச் சொல்லவில்லை. என்னால் காட்டப்பெறுகின்ற உண்மைகளை அறிந்த பின் நீங்கள் என் பின் வர வேண்டுவதில்லை. என்னால் தரப்பெற்ற பொருள்களைத் தூக்கிக்கொண்டு நீங்கள் என் பின்னேயே வந்து கொண்டிருப் பீர்களானால் அப்பொருள்களால் உங்கட்கோ, பிறர்க்கோ என்ன பயன்? அவை எதன்பொருட்டு உங்களிடம் தரப்பெறுகின்றன? அவற்றை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லுங் கள். எவரிடம் வேண்டுமானாலும் காட்டுங்கள். எவர்க்கு வேண்டுமானாலும் கொடுங்கள். நான் கொடுத்த பொருள்களி னும் உயர்ந்தவையாக, சிறந்தவையாக உங்கட்கு அவர்களிட மிருந்து கிடைக்குமானால் என் பால் எடுத்துச் சென்ற பொருள் களை அவ்விடத்திலேயே போட்டு உடையுங்கள். அவர்கள் முன்னிலையிலேயே தூக்கி எறியுங்கள். நீங்கள் இருவருமாகச் சேர்ந்து, ஓரிரு சில்லுகளும், எச்சமும் இன்றி அவற்றைச் சிதைத்து விடுங்கள். இத்தகைய தன்னுரிமையை எந்தச் சமயக் குரவரும் உங்கட்குக் கொடுத்ததில்லையே! இப்படித் தன் உள்ளார்ந்த உணர்வுக்கும் அறிவுக்கும் உரிமை வழங்கும் சம யங்கள் எங்கு இருக்கின்றன? அவ்வாறு உண்மையல்லாத சமயங்கள்தாம் ஏற்பட்ட காரணம்தான் என்ன? அவற்றின் போலிக் கட்டுப்பாடுகளுக்கும், குருட்டுப் போக்குகளுக்கும் அடிப்படைக் காரணங்கள்தாம் எவையெவை என்பவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் விளக்க இருக்கின் றேன். இப்படி நான் விளக்க இருக்கின்ற ஒரு பொருளையே,

கட்டுரைக் கனிகள்

தொகுப்பாளர்: **தமிழ் ஊழியன்.**

கிடைக்குமிடம்: **அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கூட்டுறவுப் பண்டக சாலை: அண்ணாமலை நகர்.**

விலை: உருபா 2–50.

இத்தொகுப்பாளரின் முதல் வெளியீடாகிய "கவிதைக் கனிக"ளைப் போன்றே இக் "கட்டுரைக் கனி"களும் ஒரு மாணவப் பயிற்சி நூல்! பள்ளி மாணவர்கள் பயிற்சிக்காக வகுப்பறைகளில் எழுதும் கட்டுரைகளின் போக்கினையே இந் நூலிற் காண்கின்றோம். ஒரு கட்டுரையிலாயினும் உயிரோட்டத்தைக் காண முடியவில்லை. தெளிவற்ற, பயனற்ற சொற்கூட்டே நூலின் பெரும் பகுதி. ஒரு சில நல்ல செய்திகள், கருத்துகள் ஆங்காங்குத் தலைகாட்டாமல் இல்லை. ஆனால் செய்திகளோ, கருத்துகளோ மட்டும் கட்டுரை ஆகிவிடா. எண்ணத்தில் தெளிவும், வைப்பு முறையில் ஒழுங்கும், சொற்களில் செறிவும் கட்டுக் கோப்பும் வாய்ந்து, கற்பாரை ஈர்க்கும் உயிர்த் துடிப்பு வாய்ந்ததே கட்டுரையாகும். அத்தகைய கட்டுரை ஒன்றினைத் தானும் இத் தொகுப்பு நமக்களிக்கவில்லை. 'அரை வேக்காட்டுப்' பொருள்கள் சேர்ந்தன அச்சிற்குரிய கட்டுரைகள் ஆகா. "ஒன்று" என்ற கட்டுரை பொருளற்ற பிதற்றல்! "கற்பு நிலை" என்ற கட்டுரை சிறிது பயனுடையது. நூலுள் ஆங்காங்கே தொடர்ப் பிழைகளும் ஒற்றுப் பிழைகளும் மலிந்து

(முன்பக்கத் தொடர்ச்சி)

நான் கடிய இருக்கின்ற ஒரு பொருளையே, நான் காட்டப் போகும் ஒரு பேருண்மைக்குத் துணையாகக் கொள்ளலாமா? நீர்க்குள் மூழ்கிப் போகின்ற கப்பலை, கரைநோக்கி நீந்திப் போகின்றவன் துணையெனப் பிடித்துக் கொள்ளலாமா? மருந்துண்டு நோய் நீங்க விரும்புவான் ஒருவன், அந்நோய்க்குக் காரணமான பொருளையே மருந்தெனக் கொள்ளலாமா? அதுபற்றியே, சமயக் கருத்துகளை என் கூற்றுக்குத் துணை கொண்டுவர நான் விரும்பவில்லை என்றேன். இனி, அறிவியல் நூல்களில் இருந்தும், அறநூல்களிலிருந்தும் என் கருத்துகளுக்கான எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்படப் போவதில்லை என்று நான் கூறியது ஏன், என்பதைக் கூறுகின்றேன்.

– தொடரும்.

கிடக்கின்றன. 1 (எ–டு) நினைவு கூருதல்–(பக். 86). 2. உத்திரப் பிரதேசத்து காளைகள் (பக்–86) இங்குதான் (பக் 87). 'நாட்குறிப்பில் ஓர் ஏடு' என்ற கட்டுரையில், ஆடவராகிய எமிலி சோலா பெண் பாலாகக் குறிக்கப் பெற்றிருக்கின்றார்! (பக். 100, 104)

கட்டுரையாளரைத் தொகுப்பாளர் வானளாவப் புகழ்வது மிகை. ஒவ்வொருவரின் படைப்பும் நம் கைகளில் இருக்க, தொகுப்பாளர் அவர் எழுத்துத் திறன் பற்றிப் பலபடப் பாராட்டுதல் வீண் வேலை. இம் முறை இலக்கியச் சுவையுணர்வுக்குப் (taste) பொருந்துமாறில்லை. கட்டுரையாளரை ஊக்குவிக்கு முகத்தான் அவ்வா றெழுதப்பட்டதென்னின், அவர்தம் கட்டுரைகளை வெளிப்படுத்துவதே அவரை ஊக்குவித்தல் ஆகுமன்றி, அவர்தம்மை, 'ஆற்றல் மிக்க எழுத்தாளர்' என்றும், 'புல்லிய போலி விளம்பரத்தை விரும்பாதவர்' என்றும், 'மெய்யறிவாளர்' என்றும், 'முப்பதாம் நூற்றுண்டிற் பிறத்தற்குரிய பேறறிவாளர்' என்றும் புகழ்வது பொருந்தாதிருப்பதுடன் மாறுன விளைவுகளையும் உண்டாக்குதல் கூடும். இத்தகைய முகமன் உரை படிப்பார்க்குக் கட்டுரையாளர் மேல் தாழ்வுணர்வையே ஏற்படுத்தும். – **'கல்லாடன்'**

வளரும் தமிழ்த் துணை நூல்–(1965 புகுமுக வகுப்பு).

பதிப்பாசிரியர்: ***திரு. பா. வளன் அரசு, எம். ஏ.***
தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.

விலை: உருபா ?.

பைந்தமிழ்ப் பதிப்பகம், 9, த மு. கட்டிடம், திருநெல்வேலி–1.

மாணக்கர்க்கென எழுதப் பெறும் உரை நூற்கள் தேர்வுக் கண்ணேட்டம் மட்டுமே கொண்டெழும் போலி நூற்களாக இராமல் உண்மையாகவே அவர்தம் முயற்சிக்குத் துணையாகவும் அறிவுக்குக் காப்பாகவும் அமையுமாயின் வரவேற்கத் தகுந்தனவே. அம்முறையில் இந்நூல் சீரியதொரு முயற்சி. பிழைபட்ட கருத்துகளையும், மொழி நடையினையும் மாணக்கருலகில் பரப்புவார் பல்கிவரும் இக்காலத்தில் தமிழ்நலம் கனியுமாறு சீரிய தெளிந்த நடையில் இயன்றுள்ள இவ்வுரை நூல் தமிழ் மாணக்கர்க்கு நற்பயன் தருவதாகும். செய்யுள் விளக்கப் பகுதி, வினுவிடைப்பகுதி, ஆழப்படிப்பு, அகலப்படிப்பு, போலிகை வினுத்தாட்கள் ஆகிய பாடத்திட்டத்துக்குரிய அனைத்துப் பகுதிகளையும் கொண்டிலங்குகின்றது. உட்பாகுபாடுகளும் மிக ஒழுங்காக அமைந்துள்ளன. தேவையான செய்திகளைத் தருவதோடமையாமல் மாணக்கர்தம் எழுத்து நடையினை உயர்த்துதற்கும் இந்நூல் பயன்படும். ஆசிரியரின் நடையில் பயின்றுள்ள ஒருசில வடசொற்கள் (சங்கம், வீரம், குணம், பாசம்) தமிழிலக்கியத்தில் மிகவும் பழகிக் கலந்தவை என்றாலுங்கூட, அத்தகைய சொற்கட்கும் நேரான சீரிய தமிழ்ச்சொற்களை மாணக்கர்க்கும் பழக்கப்படுத்துதல் ஆசிரியரின் தமிழ் நலங் காக்கும் செயற்கு மேலும் சிறப்பாகுமன்றோ! இனிவரும் முயற்சிகளில் ஆசிரியர் இதனை நினைவிற் கொள்ள வேண்டுகின்றோம். தமிழ்ப் பயன் கருதும் மாணவர் இதனை வாங்கிப் பயன் பெறுவாராக. –**'கல்லாடன்'**

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

சூழ்நிலையில் திரு சுப்பிரமணியம் அவர்களால் கொண்டுவரப் பெற்று, திரு. பக்தவத்சலத்தால் அடுத்த அமைச்சரவையில் ஒழிக்கப் பெற்றதென்றால், தமிழர்தம் மொழியுணர்வுக்கு எத்தகைய போக்குக்காட்டி ஏமாற்றப்பெற்றது என்பதை உண்மைத் தமிழுணர்வு உடையவர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக. படிக்க எவரும் முன்வரவில்லை என்ற காரணம் காட்டித் தமிழில் பயில்வதை ஒடுக்குவார்களானால், இந்தியை மட்டும் படிப்பார் விருப்பத்திற்கே விடாமல் வலிந்து புகுத்துவதன் நோக்கம் என்ன? தமிழுக்கு அளித்து வந்த உதவித் தொகையை நிறுத்தியதும், அதே பொழுதில் இந்திக்கு அளித்துவரும் உதவித் தொகையைக் கங்கு கரையின்றி மிகைப்படுத்துவதும் தமிழை ஒழித்தோ, ஒடுக்கியோ விட்டு, அதன் மண்குவியலின் மேல் இந்திக் கட்டடத்தை எழுப்புவதற்கே செய்யும் வழியாகும். இத்தகைய இரண்டகச் செயல்களுக்கே தமிழக அமைச்சர்களும், காமராசரும் துணைபுரிவார்களானால் எதிர்காலத் தமிழகம் அவர்களுக்கு நல்ல பாடங்கற்பிக்கும் என்பதை அவர்கள் மறந்து விடுதல் கூடாது ●

பாவாணர் பணக்கொடைத் திட்டம்

ஓர் அறிக்கை.

பாவாணர் பணக்கொடைத் திட்டத்தை முடித்த பின்னும் ஓரிருவர் அதற்கெனப் பணம் விடுத்துள்ளனர். சிலர் அத் திட்டத்தை மேலும் நீடிக்குமாறு எழுதிக் கேட்டுள்ளனர். அத்தகைய அன்பர்கள் தாம் திரட்டிய பணத்தையும், திரட்டப்போகும் பணத்தையும் ஆவணி மாதம் 15–ஆம் நாளைக்குள் தென்மொழி அலுவலகத்திற்குத் தவறுமல் விடுக்க வேண்டுகின்றேம். அத் தொகைக்கான இறுதிப் பட்டியலும் விளக்கமும் புரட்டாசி இதழில் முடிவாக வெளியிடப்பெறும். ஆசிரியர்.

தென்மொழி அன்பர்தம் நலங்கருதி
விலையைக் குறைத்துள்ளோம்

துரை. மாணிக்கம் எழுதிய
இனிய, எளிய செந்தமிழ்க் காப்பியம்

கொய்யாக்கனி

பாவாணர் தம் அணிந்துரையும் புரட்சிப் பாவலர் தம்
மதிப்புரையும் நூலின் பெருமையை உணர்த்தும்.

பிறர்க்கு: 2-25 தென்மொழி உறுப்பினர்க்கு: 1–50

அஞ்சல் செலவு 50 காசு தனி.

தென்மொழி,
திருப்பாதிரிப்புலியூர்.